# செம்மண்

நிலம் 2 துகள் 77 வள்ளுவர் ஆண்டு 2052. 08 - 11 தை 2022 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-



## சமையல் எரிவாயுவை வாங்க நீண்ட வரிசை

யாழ்ப்பாணம், தை 8

நாட்டில் சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து அதனைப் பெறுவதற்காக யாழ்ப்பாணத்தில மக்கள் வெள்ளிக்கிழமை நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

முதலில் வரும் 300 பேருக்கு மட்டுமே சமையல் எரிவாயு வழங்கப்படும் என்று விநியோக முகவர் நிலையம் ஓர் அறிவித்தலை விடுத்திருந்ததால் காலையில் இருந்தே நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடு பக்கம் 02

## மெழுகு திரிகளை தயார்ப்படுத்துங்கள்

கொழும்பு, தை 8

நாடு கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் அடுத்துவரும் நாள்களில் தொடர்ச்சியான மின் தடையை மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதால் மக்கள் மெழுகு திரிகளை வாங்கித் தயார் நிலையில் வைத்திருக்கும்படி கேட்டிருக்கிறது மின்சார சபை தொழிற்சங்கம் ஒன்று.

மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் மற்றும் அதிகரித்திருக்கும் தேவை என்பன காரணமாக வெள்ளிக்கிழமை முதல் மின் தடை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன என்று இலங்கை மின்சார சபை முன்னதாக அறிவித்திருந்தது.

கெலனிதிஸ மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக வியாழக்கிழமை இரவு திடிரென மின் தடை ஏற்பட்டது. முன்னறிவிக்கப்படாத இந்த மின் தடையால் மக்கள் பெரிதும் அவலப்பட்டார்கள்.


கெலனிதிஸ மின் உற்பத்தி நிலையத்தில் திருத்த வேலைகள் முடியும் வரை சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபை அறிவித்திருக்கிறது.

இலங்கை மின்சார சபை தொழில்நுட்பவியல் பொறியியலாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் தொழிற்சங்கத் தலைவர் ஏ.ஜி.யு.நிசாந்த இது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோது, கெலனிதிஸ மின் உற்பத்தி நிலையத்தில் பக்கம் 02

## மின்சார சபையில் திருடிய 5 பேர் வசமாக மாட்டினர்

சுன்னாகம் மின்சார சபையில் திருடிய சந்தேகத்தின் பேரில் 5 பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டதுடன் திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டன

சுன்னாகம் மின்சாரசபையில் கடந்த வாரம் இரவுவேளை உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 1 மில்லியன் பெறுமதியான வயர்களை திருடிச்சென்றனர். இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புபிரிவு பொலிஸாரிற்கு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.



உடனடி நடவடிக்கையின் பயனாக பிரதான சந்தேகநபர்கள் உட்பட 5பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 23, 31, 27, 42, 30 வயதுடையவர்கள் எனவும் அராலி, சுன்னாகம், மானிப்பாய், பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 45 றோல் வயர்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. அதன் பெறுமதி 1 மில்லியனிற்கும் மேல் பக்கம் 02

## கடினமான தருணத்தை கடக்க இலங்கைக்கு இந்தியா உதவும்

*அந்த நாட்டு அயலுறவுத் துறை அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, தை 8

இலங்கை கடினமாக காலத்தை சமாளித்துக் கடக்க இந்தியா தொடர்ந்து துணை நிற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்தக் கடினமான தருணங்கங்களில்" இந்திய இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்று தனது கீச்சகத்தில் குறிப்பிட்டி பக்கம் 02

## தொலைபேசி மூலமும் இனி முறையிடலாம்

யாழ்ப்பாணம், தை 8

இலங்கை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முன்னர் எழுத்துமூலமான முறைப்பாடுகளே ஏற்றுக் கொள்ளப்பட்டன. தற்போது 1960 என்னும் விசேட இருபத்திநான்கு மணிநேரமும் முறையிடுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை பொலிஸ் ஆணைக் குழுவின் சிரேஸ்ட உறுப்பினர் ரி.பி.பரமேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

ජාතික පොලිස් කොමිෂන් සභාව
தேசிய பொலிஸ் ஆணைக்குழு
National Police Commission

19வது திருத்த சட்டம் ஊடாக பல்வேறு விடயங்கள் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு இருந்தன. இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் முக்கிய நோக்கம் பொலிஸ் திணைக்களத்தின் சேவைகளை பொதுமக்கள் சரியான முறையில் பக்கம் 02

## கடலட்டை பண்ணைகள் வடக்கில் பெருக்கம் சீனர்களைக் குறிவைக்கும் ஏற்றுமதி

யாழ்ப்பாணம், தை 8

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதில் மீனவர்கள் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இதுவரையில் 600 மீனவர்கள் இந்த இரு மாவட்டங்களிலும் கடலட்டைப் பண்ணைகளை அமைத்துள்ளனர்.

சீனாவிற்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடனேயே இந்தக் கடலட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றாலும் சீனாவிற்கு நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான தரச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான வசதிகள் இங்கு இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் கிளிநொச்சியில் உற்பத்தி செய்யப்படும் கடலட்டைகள் சிங்கப்பூர் மற்றும் கொங்கொங் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கு தரச் சான்றிதழ் பெறப்பட்டு அங்கிருந்து சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

5 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். குடாக்கடல் கிராமமான அரியாலையில் ஒரு கடலட்டை உற்பத்திப் பண்ணை அமைக்கப்பட்டது. அதிலிருந்து இது வரையில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் குஞ்சுகள் விற்கப்பட்டுள்ளன பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

## தூரநோக்கற்ற தலைவர்கள்

தமிழ்த் தலைவர்கள் தூரநோக்குச் சிந்தனையும் தெளிவான, ஆய்ந்தறியும் திட்டமிடலும் இல்லாதவர்கள் என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை இந்திய முழு அளவில் வழங்கவேண்டும் என்று கேட்டு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதுவதற்கு என்று ஒரு முயற்சி தொடங்கப்பட்டது. ரெலோ கட்சியின் சார்பில் இந்த முயற்சி தொடங்கப்பட்டது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி ரெலோ. ஆனாலும் கூட்டமைப்பையும் தாண்டி, வெளியேயுள்ள தமிழ் மக்கள் கூட்டணியிலுள்ள தலைவர்களான சி.வி.விக்னேஸ்வரன், ந.சிறிகாந்தா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரையும் உள்ளடக்கியதாக இந்த முயற்சி எடுக்கப்பட்டது. கூட்டமைப்பிலுள்ள முதன்மைக் கட்சியான தமிழ் அரசுக் கட்சி தொடக்கம் முதலே இந்த முயற்சியிலிருந்து சற்றே விலகியே இருந்தது.

இந்த நிலையில் தமக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை, கொள்கை நிலைப்பாடுகளைப் பேசித் தீர்த்து ஒரு முடிவை எடுப்பதற்கு முயற்சித்திருக்கவேண்டிய ரெலோ அதைவிட்டுவிட்டு அகலக் கால் வைத்து இந்த முயற்சிக்குள் அவசர அவசரமாக மலையகக் கட்சிகளையும் முஸ்லிம் கட்சிகளையும் கொண்டு வந்தது.

தொடக்கத்தில் இதுவொரு மிகச் சிறப்பான முன்முயற்சி என்று தோன்றினாலும் நாலாறு மாதமாகக் குயவனை வேண்டி கொண்டு வந்த தோட்டியைப் போட்டுடைத்தவன் மாதிரி தமிழ் பேசும் அனைத்துத் தரப்புக்களையும் ஓரிடத்தில் கொண்டு வந்து அவை தனித் தனியான மூன்று திசைகளிலேயே பயணிக்கும், அது தவிர்க்க முடியாதது என்கிற உண்மையை உலகுக்குப் பறைசாற்ற வதத்திருக்கிறது ரெலோ.

இந்த முயற்சியில் மூன்று கட்டப் பேச்சுக்களுக்குப் பின்னர் இந்தியாவிற்கு அனுப்பும் ஆவணத்தில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மட்டுமே ஒப்பமிட்டிருக்கிறார்கள். மலையகத் தமிழ்க் கட்சிகளோ முஸ்லிம் கட்சிகளோ ஒப்பமிடவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவதை ஏற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்த மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் அதைத் தாண்டிச் சென்று தமிழர்கள் கேட்கும் தீர்வு தொடர்பான ஆவணத்தில் கையொப்பமிடவில்லை.

அதாவது வடக்கு கிழக்கு தமிழர்கள் கேட்கும் அரசியல் தீர்வுடன் நாட்டின் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்கு உடன்பாடில்லை என்கிற கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கும் வகையில் ரெலோவின் முயற்சி முடிந்திருக்கிறது. முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சரும் தற்போதைய கல்வி அமைச்சருமான தினேஸ் குணவர்த்தனவின் கூற்று அதனை நிரூபிக்கும். மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு ஆவணமாக இருந்தால் அது புலிகள் கேட்ட தமிழீழமாகத்தான் இருக்கும் என்கிற வகையில் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்குத் தமிழர்கள் கேட்பதை நாட்டின் ஏனைய பகுதித் தமிழர்களாலோ முஸ்லிம்களாலோகூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் அதனைச் சிங்களவர்களால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்கிற கேள்வி எழுவது நியாயமானதுதானே. அப்படியென்றால் நியாமற்ற, வேண்டத்தகாத கோரிக்கையைத்தான் வடக்கு கிழக்குத் தமிழர்களும் அவர்களின் தலைவர்களும் முன்வைக்கிறார்கள் என்றுதானே அர்த்தமாகும்.

இதனை வெட்டவெளிச்சம் போட்டுக்காட்டத்தானா அவசர அவசரமாக ரெலோ இந்த முயற்சியை எடுத்தது, அதில் மற்றைய கட்சிகளும் சேர்ந்துகொண்டன? வடக்கு கிழக்குத் தமிழர்கள் கேட்கும் அதிகாரப் பகிர்வை குறைந்தபட்சம் அவர்களுக்கான தீர்வாகக்கூட மற்றைய தமிழ்த் தலைவர்களையும் முஸ்லிம் தலைவர்களையும் ஏற்றுக்கொள்ள வைக்க முடியவில்லை என்றால் அவர்களையும் ஒன்றிணைத்த இந்த முயற்சியில் ஏன் இறங்கவேண்டும்?

அப்படியில்லாவிட்டால் அவர்களை இணங்கச் செய்யும்வரையும் அதற்கான பேச்சுக்களையும் முயற்சிகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றிருக்கவேண்டும். ஏற்கனவே தமிழ் பேசும் மக்கள் இப்படி மூன்று பகுதிகளாகப் பிரிந்துதான் இருக்கிறார்கள். அந்தப் பிரிவுதான் நிரந்தமானது என்பதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியாக இதனை மேற்கொள்ளவேண்டிய அவசியம் என்ன வந்தது ரெலோவிற்கு.

ஒன்றில் அவர்களுக்கு எடுத்துக்கொண்ட முயற்சியை வெற்றியடைய வைப்பதற்கான வழிவகைகள், தந்திரங்கள் தெரிந்திருக்க வேண்டும். அல்லது வெற்றி கிட்டும் வரை முயற்சிக்கும் உறுதிப்பாடாவது இருந்திருக்கவேண்டும். ஆயுதப் போராட்டத்தை இடைநடுவில் கைவிட்டு அரசுப்படைகளுடன் சேர்ந்து இயங்கியதைப் போலவே இந்த முயற்சியையும் இடைநடுவில் கைவிட்டு இருந்த நிலமையையும் இன்னும் மோசமாக்கிவிட்டுள்ளது இந்த முயற்சி.

எந்வொரு காரியத்தையும் செய்வதற்கு முன்பாகச் சிந்திக்க வேண்டுமே தவிர தொடங்கிய பின்னர் சிந்திக்கக்கூடாது. எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவதென்ப திழுக்கு என்பார் வள்ளுவர். அதையும்கூடக் கவனத்தில்கொள்ளாமல் எடுத்தோம் கவிழ்த்தோம் என்கிற ஒரு முயற்சியின் மூலம் நிலமையை மேலும் சிக்கலாக்கியிருக்கும் இந்தத் தலைவர்களின் செயற்பாடு தூரநோக்கற்ற, தெளிந்த சிந்தனையற்ற, முன்யோசனையற்ற அரசியல் என்று சொல்வதைவிட வேறு எப்படி விமர்சிக்கமுடியும்?



## மெழுகு...

உள்ள மின் பிறப்பாக்கி குளிர்வடைய இன்னும் இரண்டு நாட்களுக்குமேல் எடுக்கும் என்றார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மின் தடைகள் குறித்து மின்சார சபை மக்களுக்கு அறிவிப்பது கட்டாயம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இனிவரும் நாள்களில் தடையற்ற மின்சாரம் கிடைப்பது சாத்தியமா என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், இலங்கை எதிர்கொண்டிருக்கும் டொலர் பற்றாக்குறைப் பிரச்சினை காரணமாக தேவையான எரிபொருளை வாங்க முடியாத நிலையில் மின்சார சபை இருப்பதால் எதிர்காலத்தில் நாடு நீண்ட காலத்திற்கு மின் தடையை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்றார் அவர்.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 45.12 ஜிகாவோட் மின்சாரத்தில் 23.91 ஜிகாவோட் மின்சாரம் எரிபொருளைப் பயன்படுத்தும் இயந்திரங்கள் மூலமாகவே கிடைக்கின்றன.

"உடனடியான மின்உற்பத்தி டீசல் மற்றும் எரிப்பதற்கான எண்ணெய் மூலமான இயந்திரங்கள் ஊடாகவே கிடைக்கின்றது. அத்தகைய எண்ணெய்யை வாங்குவதற்கு முடியாதிருக்கும் நிலையில் நீண்ட கால மின்சாரத் தடையை எதிர்கொள்ள வேண்டித்தானிருக்கும்" என்றார் நிசாந்த.

## தொலைபேசி...

பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதாகும்.

பொலிஸ் திணைக்களத்தினைப் பொது மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளும் திணைக்களமாக மாற்றிக்கொள்ளும் செயற்பாட்டினையே இலங்கை பொலிஸ் ஆணைக்குழு முன்னெடுக்கின்றது.

தற்போது 1960 என்னும் விசேட எண்ணூடாக 24மணி நேர சேவையொன்றை உருவாக்கியுள்ளோம். இதன் மூலம் பொதுமக்கள் எந்த நேரமும் ஆணைக்குழுவைத் தொடர்புகொள்ளமுடியும். அதற்கு உடனடியாகத் தொடர்புபட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடாக நடவடிக்கையெடுக்கப்படும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடானது வடகிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வரவேற்கப்பட்டுள்ளது. வடகிழக்கில் அதன் செயற்பாடுகள் மக்களுக்குள் சென்றடையவில்லையென்ற குறைபாடு இருந்தன. கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் பெரியதொரு மாகாணம்.மூன்று மாவட்டங்கள் உள்ளது. இவையணைத்திற்கும் ஒரு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலத்தினை வைத்து கடமையாற்றுவது என்பது மிகவும் கஸ்டமான விடயமாகவுள்ளது.

மக்களுக்கு அண்மையாக செல்லவேண்டிய பொறுப்பு உள்ளது. கிழக்கு மாகாணத்தில் பொதுமக்களுடன் பொலிஸ் திணைக்களத்தினை நெருங்கி பணியாற்றுவதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சமையல்...

மற்றும் எரிவாயு கொல்கலன் (சிலிண்டர்) வெடிப்புச் சம்பவங்கள் என்பவற்றால் சமையல் எரிவாயுவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வைத்தியாசலை வீதியில் கொட்டடிப் பகுதியில் உள்ள சமையல் எரிவாயு முகவர் நிலையக் களஞ்சியம் முன்பாக மக்கள் நீண்ட வரிசையாக நின்று சமையல் எரிவாயுவைப் பெற்றுச் சென்றனர்.

## கடலட்டை...

என்கிறார் சிறி கணேசன். அரியாலை குய்லான் கடலட்டைப் பண்ணையின் பொறுப்பாளர் அவர்.

"கடலட்டைக் குஞ்சுகளுக்கு பெரும் கிராக்கி இருக்கிறது. கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்காக பெரும் எண்ணிக்கையானவர்கள் காத்திருக்கிறார்கள். கடலட்டை உற்பத்தி தொடர்பில் சீனர்கள் எமக்கு உதவுகிறார்கள். இதன் மூலம் பெரும் வருமானம் கிடைக்கிறது" என்கிறார் கணேசன்.

கடலட்டை உற்பத்தி மூலம் பெரும் வருமானம் கிடைக்கும் காரணத்தால் யாழ். குடாக்கடல் ஓரமாக வசிக்கும் மீனவர்களில் பலரும் இதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். பாரம்பரியமாகத் தாம் செய்து வந்த கடற்றொழிலைக் கைவிட்டு அந்த இடங்களில் கடலட்டைப் பண்ணைகளை அமைத்து வருகின்றார்கள்.

பன்னாட்டுச் சந்தையில் ஒரு கிலோ கடலட்டையின் விலை 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபா வரையில் செல்கின்றது. இந்தத் தொழிலில் தமக்கு முதலைப் போல இரு மடங்கு இலாபம் கிடைக்கிறது என்கிறார்கள் மீனவர்கள்.

## கடினமான...

ருக்கின்றார் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் தொலைபேசியில் உரையாடிய பின்னர் அவர் இந்த கீச்சகப் பதிவை இட்டிருந்தார்.

"அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள், நம்பகரமான நண்பனான இந்தியா, இலங்கையின் இந்தக் கடினமான தருணங்களில் ஆதரவாக இருக்கும். தொடர்ந்தும் நெருக்கமான தொடர்புகளைப் பேண இணங்கினோம்" என்று ஜெய்சங்கரின் கீச்சகப் பதிவு கூறுகின்றது.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு வழங்கும் ஒப்பந்தங்கள் இரு தரப்புக்களுக்கும் இடையில் கையெழுத்தான பின்னணியில் இந்த ஜெய்சங்கரிடமிருந்து இந்தப் பதிவு வந்துள்ளது.

"திருகோணமலை எண்ணெய் குதங்களை எப்படி நவீனமயப்படுத்துவது என்று இலங்கை ஆட்சியாளர்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம். இது எரிபொருளைக் களஞ்சியப்படுத்தும் வசதியை அளிப்பதுடன் இரு தரப்பு எரிபொருள் பாதுகாப்பையும் விரிவுபடுத்தும்" புதுடில்லியில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார் அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பக்சி.

## மின்சார...

என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த கைது நடவடிக்கை சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி எதிரிசிங்க மற்றும் உபபொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையின் தளையிலிருந்து விடுபடுவோம்!

■ கனிமொழி


கொரோனா பெருந்தொற்றின் தாக்கத்தில் இருந்து மனித சமூகம் மீண்டு வரத் தொடங்கி, உற்பத்தி, வாணிபம், வேலை வாய்ப்பு, கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முழு வீச்சில் இயல்புநிலைக்கு வரத் தொடங்கியிருக்கும் நிலையில் ஒமைக்ரோன் என்கிற கொரேனாவின் புதிய உருமாற்றம் நம்மை அச்சுறுத்தத் தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே இந்தப் பெருந்தொற்றால் உலகம் இரண்டு முழு ஆண்டுகளை இழந்திருக்கையில் மூன்றாவது ஆண்டையும் அச்சுறுத்தும் வகையில் ஒமைக்ரோன் வந்து நிற்கின்றது.

கொரோனா பரவலைத் தடுப்பதற்காக 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் கொண்டுவரப்பட்ட பொதுமுடக்க காலத்தில் ஒரு நாளின் 24 மணி நேரமும் பெரியவர் முதல் சிறியவர்வரை வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். விளையாட்டு, பொழுதுபோக்கு, போக்குவரத்து உள்ளிட்டவை முற்றிலும் தடைசெய்யப்பட்டிருந்தன. மதுபானக்கடைகள் மூடப்பட்டிருந்தன. கைப்பேசி, கணினி, இணையம், தொலைக்காட்சி ஆகியவற்றிடம் அனைவரும் தஞ்சம் அடைந்தனர்.

சில மாதங்களிலே தளர்வுகளுடன் கூடிய பொது முடக்கம் நடைமுறைக்கு வந்தது. இருப்பினும், அலுவலகங்கள், கல்வி நிலையங்கள் தொடர்ந்து இயங்காமல் இருந்தன. அக்காலகட்டத்தில் போதைப் பழக்கத்திற்குப் புதிய நுகர்வோர் வருகையும், சுறுசுறுப்பான போதைப் பொருட்கள் விற்பனையும் நிகழத் தொடங்கின எனக் கள ஆய்வுகள் கூறுகின்றன.

**கஞ்சா வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்படுவது மட்டுமல்லாமல் இலங்கையிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவில் இருந்தே கஞ்சா பெருமளவில் கடத்தி வரப்படுகின்றது**

நாடே முடங்கிக் கிடந்தபோதும் வடக்கு மற்றும் வடமேற்குக் கடலோரங்கள் வழியாகத் தொடர்ந்து வந்த கஞ்சாவும் சர்வதேசக் கடலில் வைத்துப் பிடிக்கப்பட்ட கெரோயினும் ஏன் வந்தன என்பதை இப்போது புரிந்து கொள்ள முடிகின்றது.



இலங்கை மட்டுமின்றி, உலக நாடுகள் பலவற்றிலும் போதைப் பொருட்கள் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதும், அவற்றைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்துள்ளன எனப் போதைப் பொருட்கள் மற்றும் குற்றங்கள் குறித்த 2021ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் அலுவலக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

உலக நாடுகளில் 43 கோடி பேர் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும், அவர்களில் 3.6 கோடி பேர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளனர் என்றும், 1.1 கோடி பேர் ஊசி மூலம் போதைப் பொருளை உடலில் செலுத்திக் கொள்கின்றனர் என்றும் ஐக்கிய நாடுகளின் அலுவலக அறிக்கை கூறுகிறது.

கடந்த 24 ஆண்டுகளில் "கஞ்சா' எனப்படும் போதைப் பொருளின் பயன்பாடு நான்கு மடங்காக உயர்ந்துள்ளது என்றும், அதைப் பயன்படுத்தும் இளம் வயதினரில் 40% பேர் அப்பழக்கம் உடல் நலத்திற்குக் கேடு எனக் கருதவில்லை என்றும் ஐக்கிய நாடுகளின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடத்தப்பட்ட ஆய்வின்படி, கஞ்சா, கெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களை 7 லட்சம் பேர் பயன்படுத்துகின்றனர். இவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் கஞ்சாவையே பயன்படுத்துகிறார்கள். கெரோயினை உற்பத்தி செய்... யம் பயிர் இலங்கையில் வளர்வதில்லை. அதனால் ... பாலும் வேறு நாடுகளில் இருந்து, குறிப்பாக இந்தியாவில் இருந்து கொண்டு வரப்படுகின்றது. அண்மைக் காலமாக ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும் கொண்டு வரப்படுகின்றன. நுகர்வுக்காக மட்டுமன்றி இந்த போதைப் பொருளைக் கைமாற்றிவிடும் ஒரு கேந்திர நிலையமாகவும் இலங்கை போருக்குப் பின்னராக காலத்தில் மாற்றமடைந்திருக்கிறது.



கஞ்சாவின் வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்படுவது மட்டுமல்லாமல் இலங்கையிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவில் இருந்தே கஞ்சா பெருமளவில் கடத்தி வரப்படுகின்றது. அதிலும் கேரள மாநிலத்தில் இருந்தே அதிகம் கஞ்சா வருவதால் அது கேரளக் கஞ்சா என்றே அழைக்கப்படுகின்றது. இலங்கையில் கஞ்சா பயிரடப்படும் விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்கிறது ஐ.நா. அதன் ஒரு அறிக்கையின்படி 2003ஆம் ஆண்டில் மட்டும் 73,714 கிலோ கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றது. இது 2002ஆம் ஆண்டைவிட இரண்டு மடங்குக்கும் அதிகம். 2002ஆம் ஆண்டு 25,834 கிலோ கஞ்சாவே பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

ஆபத்தான போதைப் பொருட்கள் கட்டுப்பாட்டுக்கான தேசிய சபையின் 2020 புள்ளிவிவரப்படி முதல் 7 மாதங்களில் மட்டும் 45 ஆயிரத்து 13 பேர் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 23 ஆயிரத்து 203 பேர் கெரோயின் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள். 20 ஆயிரத்து 640 பேர் கஞ்சாவுடன் தொடர்புடைய குற்றங்களுக்காகக் கைதானவர்கள்.

போருக்குப் பின்னரான காலத்தில் இலங்கையில் கஞ்சாவின் பயன்பாட்டைவிட கெரோயின் பயன்பாடும் அது தொடர்பான குற்றங்களும் அதிகரித்திருக்கின்றன என்பதை இந்தப் புள்ளிவிவரம் தெளிவுபடுத்துகின்றது. போர்க் காலங்களில் கடலில் இருந்த கெடுபிடிகளும் நாட்டுக்குள் போக்குவரத்துச் செய்வதில் இருந்த கெடுபிடிகளும் அதிகம் இருந்த காரணத்தால் இத்தகைய குற்றங்கள் குறைந்திருக்கும் என்று கருத முடிகின்றது. ஆனால், போர்க் காலங்களில் முப்படையினர் மட்டுமன்றி காவல் துறையினரும் போர் நோக்கிய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் போதைப் பொருள் சார்ந்த குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் அவர்களின் கவனம் குறைவாக இருந்தது என்கிறது ஐ.நா. அறிக்கை.

2020 அறிக்கையின்படி போதைப் பொருள் சார்ந்த குற்றங்களில் பெரும்பாலானவை கொழும்பு மற்றும் கம்பகா பகுதிகளிலேயே இடம்பெற்றுள்ளன. மொத்தக் குற்றத்தின் 44 சதவீதம் அங்கேயே நிகழ்ந்துள்ளன. அதற்கடுத்த இடங்களில் கண்டி, களுத்துறை, குருநாகல ஆகிய இடங்கள் உள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் போதைப் பொருள் பயன்பாட்டில் பெரும்பாலும் ஆண்களே அதிகம். மிகச் சொற்பமாக, புறக்கணிக்கத்தக்க அளவிலான பெண்களே போதைப் பொருள் பயன்படுத்துகின்றார்கள் என்பது நின்மதியளிக்கக்கூடிய தகவல்.

வடக்கு மாகாணத்தில் இதே காலப்பகுதியில் 651 பேர் கெரோயின் போதைப் பொருள்சார் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 425 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அதே போன்று கஞ்சா சார்ந்த குற்றங்களுக்காக வடக்கில் ஆயிரத்து 6 பேரும் கிழக்கில் ஆயிரத்து 453 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கெரோயின் சார்ந்து கைதானவர்கள் வடக்கு கிழக்கில் 5 சதவீதமாகவும் கஞ்சா சர்ந்து 12 சதவீதமாகவும் இருந்தாலும் 10 வருடங்களுக்கு முன்பிருந்த நிலையுடன் ஒப்பிடும்போது இது மிக மிக அதிகம். இங்கெல்லாம் போருக்குப் ... பகுதிகளில் போதைப் பொருள்பயன்பாடு அதிகரித்திருக்... என்பது தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றைத் தெளிதல்


## தமிழர்கள் எங்கிருந்து வந்தார்கள்?

■ சத்தியநாதன் ■

இலங்கைத் தமிழர்களும் தமிழ் நாட்டுத் தமிழர்களும் தொப்புள்கொடி உறவுகள் அல்லர் இங்கிருந்து தென்னிந்தியாவுக்குச் சென்று திருமணம் செய்து கொண்ட தொடர்புகளைத் தவிர வேறு தொடர்புகள் இல்லை - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அண்மையில் கூறியிருந்தார். இதுவரையான கல்வெட்டுகள், பண்பாட்டு ஒற்றுமைகள், மிகப் பழைய இலக்கியங்கள், தொல்லியல் ஆதாரங்கள், மானிடவியல் ஆதாரங்கள் போன்ற பல்வேறு ஆதாரங்களையும் மீறியதாக அவரது கருத்து அமைந்திருந்ததால் சமூக வலைத் தளங்களில் அவருக்கு எதிராகப் பல மட்டமான பதிவுகளைக் காணமுடிந்தது.

தென்னிந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பாணன் என்ற பார்வையற்ற யாழ் பாடிக்குப் பரிசாகக் கிடைத்த நிலமே யாழ்ப்பாணம் என்கிறது இதுவரையான வரலாறு.

இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமல்லர் சிங்களவர்கள்கூட தென்னிந்திய இனக்குழுக்களைச் சார்ந்தவர்களே. இதை மானிடவியல் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தி விடமுடியும். இது தொடர்பில் நடத்தப்பட்ட மரபணு மற்றும் மானுடவியல் ஆய்வுகளில் அது நிரூபிக்கப் பட்டுமிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளாது சிங்கள வரலாற்றாசிரியர்களும் தேராவாத பௌத்த பிரிவினரும் வடகிழக்கு இந்தியாவுடன் தமது பூர்வீகத்தைத் திட்டமிட்டுத் தொடர்புபடுத்திக் கூறிவருகின்றனர். ஆனாலும் தற்போதும் தமது மூதாதையர்கள் வணங்கிய திருப்பதி ஏழுமலையான் கோவில் மற்றும் பல இந்துக் கோவில்களுக்குச் சிங்களத் தலைவர்கள் சென்று தரிசனம் செய்வதை அவர்களால் தடுக்க முடியவில்லை.




**தென்னிந்தியாவில் உள்ள நல்லூர் போன்ற ஊர்ப்பெயர்களும் தனுஷ்கோடி, பசுபதி போன்ற மக்களின் பெயர்களும் அவ்வாறு இங்கு வந்தவையே. பல்லவர் கால பக்தி இயக்கத்தில் நாயன்மார்கள் பாடிய பாடல்களில் திருக்கேதீச்சரத்தானே, கோணமாமலை அமர்ந்தாரே என்றெல்லாம் உள்ளமையும் அதனடிப்படையில்தான்.**

### இராமர் பாலம் வழியாக மக்களின் வருகை

தற்போது சிதைவடைந்த நிலையில் இருக்கும் இராமர் பாலம் வழியாக இந்தியாவிலிருந்து நடந்து வந்த மக்கள் பூநகரி, மன்னார்ப் பகுதிகளில் குடியேறியதற்கும் மாதோட்டத்தில் கப்பல் துறைமுகங்கள் இருந்தமைக்கும் சான்றுகள் உள்ளன. தென்னிந்தியாவில் உள்ள நல்லூர் போன்ற ஊர்ப்பெயர்களும் தனுஷ்கோடி, பசுபதி போன்ற மக்களின் பெயர்களும் அவ்வாறு இங்கு வந்தவையே. பல்லவர் கால பக்தி இயக்கத்தில் நாயன்மார்கள் பாடிய பாடல்களில் திருக்கேதீச்சரத்தானே, கோணமாமலை அமர்ந்தாரே என்றெல்லாம் உள்ளமையும் அதனடிப்படையில்தான்.

இந்தியாவிலிருந்து வந்த மக்கள் ஆறுகள் இல்லாத யாழ். குடாநாட்டில் முதலில் குடியேறியிருக்க வாய்ப்பில்லை. பெரும்பாலும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் அப்போதெல்லாம் மேய்ச்சல் நிலங்களாக இருந்திருக்கவே வாய்ப்புண்டு என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள். இதைவிட நெடுந்தீவுக்கும் ராமேஸ்வரத்துக்கும் தொடர்பு, மன்னார் - ராமேஸ்வரத்துக்குத் தொடர்பு என்பன மிகவும் பழமை வாய்ந்தவை. பிற்காலத்தில் வல்வெட்டித்துறை - தமிழ்நாட்டு உறவு. கடத்தல் வியாபாரம் தமிழ்நாட்டுக்குப் போய் திரைப்படம் பார்த்துவிட்டு வரும் வழக்கம் போன்றன மிகச் சாதாரண தொடர்புகளாக இருந்தன.

அதைவிட யாழ்ப்பாண இராச்சியம் அமைவதற்குக் கூடத் தென்னிந்தியத் தொடர்புகளே காரணம். இவை பற்றிய சரியான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் பத்மநாதன், போரசிரியர் பே. ரகுபதி, பேராசிரியர் சீதா சிற்றம்பலம், பேராசிரியர் புஷ்பரட்ணம் போன்றவர்கள் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டை ஒத்த மட்பாண்டங்கள் ஏனைய பாவனைப் பொருள்கள் போன்றவற்றை ஆனைக்கோட்டை, பூநகரி, மன்னார் பகுதிகளிலும் வன்னியில் பல இடங்களிலும் மட்டக்களப்பிலும் கண்டுபிடித்துள்ளனர்.

இதைவிடப் பல கல்வெட்டு ஆதாரங்கள், வணக்க முறைகளுக்கூடாகவும் தென்னிந்தியத் தொடர்புகளை நிரூபித்துள்ளனர். இதில் பேராசியர் பே. ரகுபதி எழுதிய ''ஏர்லி செற்றில் மென்ற் இன் யெவ்னா'' என்ற நூல் முக்கியமானது.

இன்றுகூட தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் (சிறீதரன் உட்பட) அனைவரும் வேட்டி கட்டும் கலாசாரத்தில் இருப்பதும் தென்னிந்தியத் தமிழ்த் தலைவர்களின் அரசியலைப் பின்பற்றியே.

### கொவியோ எனப்படும் கோவியரின் வருகை

தென்னிந்திய மக்களிடம் காணப்பட்ட சாதி முறையில் பல அப்படியே இலங்கைத் தமிழர்களிடமும் உண்டு. அங்குள்ள சாதிகளுக்கு மாறாக அல்லது வித்தியாசமாக யாழ்ப்பாணத்தில் கோவியர் என்ற சாதியும் உண்டு. இந்தக் கோவியர்கள் சிங்களத்தில் கொவியோ என்று கூறப்படுகிற சிங்கள விவசாயிகள். சிங்களச் சமூகத்தின் வேளாளர்கள். கி.பி 12ஆம் நூற்றாண்டில் தொடங்கிய யாழ்ப்பாண மன்னர் காலத்தில் அவர்களுக்குச் சிங்கள மன்னர்களுடன் இருந்த தொடர்பு காரணமாக விவசாயம் செய்வதற்காக அழைத்து வரப்பட்டவர்கள். இவர்களில் பலர் தமது ஊர்களுக்குத் திரும்பி விடாதபடி தடுப்பதற்காகக் கடல் வழியாகக் கொண்டுவரப்பட்டனர்.

இவர்கள் விவசாயத்துக்காகக் கொண்டுவந்து குடியேற்றப்பட்ட இடங்களின் பெயர்கள் தோட்டம் என அழைக்கப்படும் சிங்களச் சொல்லான வத்த என்ற அர்த்தத்தில் இது உள்ளது. யாழ் குடாநாட்டில் வாதரவத்தை, சூராவத்தை, சங்காவத்தை, சோழியவத்தை, குடவத்தை, அம்பத்தை, உந்துவத்தை (உழுந்துத் தோட்டம்), தம்புவத்தை, எழுவத்தை, சக்கலாவத்தை, வடுவாவத்தை, கௌணவத்தை, கொற்றாவத்தை, அலவத்தை,(கிழங்குத்தோட்டம்) தம்பளவத்தை, உத்திராவத்தை, அம்பலம்வத்தை, முள்ளாவத்தை, வல்லுவத்தை, நாக்கணாவத்தை, மூத்தாளவத்தை, வத்தாவத்தை, வல்லியாவத்தை, கணவத்தை, பயிந்தாவத்தை, குடவத்தை, கல்லுவத்தை, கேராளிவத்தை, போன்ற ஊர்களில் தற்போதும் கொவியோ எனப்படும் சிங்கள

(22ம் பக்கம் பார்க்க)

### போதையின்...

யாழ்ப்பாணத்தில் கெரோயின் சார்ந்து 480 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வடக்கின் ஏனைய மாவட்டங்களான மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகியவற்றுடடன் ஒப்பிடும் போது இது மிக மிக அதிகம். அங்கெல்லாம் நூற்றுக்கும் குறைவானவர்களே கைதாகி இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் போதைப் பொருட்களின் பாவனையில் மட்டுமல்ல மதுப் பாவனையிலும் தொடர்ந்து அதிகரிப்பைக் காட்டி வருகின்றது. போர் முடிந்த கையோடு யாழ்ப்பாணத்திற்குள் சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களின் அளவு தொடர்ந்து அதிகரித்து வந்திருக்கின்றது என்கின்றன புள்ளிவிவரங்கள். பிறந்த நாள், திருமண நாள் விருந்துகளில் மதுபானங்கள் இடம் பெறும் கலாசாரம் தற்பொழுது நிலவுகிறது. திருவிழாக் கொண்டாட்டம் என்றாலே மதுபானங்கள் சுவைக்கும் நாள் என்ற மனநிலை இளைஞர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

நகரங்கள் பலவற்றில் இயங்கி வரும் இரவு நேர கேளிக்கை விடுதிகள், இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பானங்களில் "கிளப் டிரக்ஸ்' எனப்படும் போதைப் பொருட்கள் கலந்து கொடுக்கப்படும் சட்ட விரோதமான பழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. கொரோனா காலத்தில் இப்படியான கொண்டாட்ட நிகழ்வுகளை சமூகவலைத் தளங்கள் மூலமாக ஒழுங்கு செய்தவர்களும் அதில் கலந்து கொண்டவர்களும் காவல் துறையினரால் கைது செய்யப் பட்ட சம்பவம் பலது நடந்திருக்கின்றது.

கல்விக்கூடங்களில் மாணவர்களின் "பிரியா விடை' நிகழ்ச்சிகளில் இனிப்பு, காரம், குளிர் பானங்கள் வழங்கி வந்த காலம் மாறி, தற்பொழுது மதுபானங்கள் மறைமுகமாக வேனும் பங்கெடுக்கும் நிலை வந்திருக்கின்றது. மாணவிகளும் தங்கள் தோழிகளுடன் மது அருந்தும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. இவை மட்டுமல்ல, சிறார்கள் மது அருந்தும் கலாசாரமும் சமுதாயத்தில் வேகமாக ஊடுருவி வருகிறது.

மது மற்றும் போதைப் பொருட்களின் விற்பனையைக் கட்டுப்படுத்தத் தவறினால், கொரோனாவிற்குப் பிந்தைய சூழலில் அது தமிழ்ச் சமூகத்தில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரை மணலுக்குள் மறைந்திருந்து தாக்கிய புலிகள்

▮ கமலநாதன் ▮

இலங்கை வான் படையைச் சேர்ந்த வானோடி லெப்ரினன் சுஜீவ அமரசிங்க. இவர் கம்பஹா பகுதியைச் சேர்ந்தவர். கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். சிறிது காலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். தனது நாட்டுக்காக எதையாவது செய்யவேண்டும் என்ற முடிவில் இலங்கை வான் படையில் சேர்ந்தேன் என்கிறார். இலங்கை வான் படையில் தான் பெற்ற அனுபவங்களை வெனச யூ ரியூப் தளத்தில் பதிவு செய்தார். அவரது கதை இவ்வாறு அமைந்தது.

நான் இலங்கை வான் படையில் சேர்ந்ததும் அனுராதபுரம் வான் படைத்தளத்தில் தொடக்கப் பயிற்சியைப் பெற்றேன். எனது அணியில் 4 பேர் இருந்தோம். அந்தப் பயிற்சி முடிந்ததும் ஹிங்குராகொட வானூர்திப் பயிற்சி முகாமில் பெல் 202 ரக உலங்கு வானூர்திப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டோம். அந்தப் பயிற்சிக்காக என்னுடன் இன்னுமொருவர் வந்தார். பின்னர் எம்.ஐ. 17 ரக உலங்கு வானூதியைச் செலுத்தும் பயிற்சி பெற்றேன். எமக்கு ஷாம் பெனார்ண்டோ என்பவர் பயிற்றுவிப்பாளராக இருந்தார்.

இந்தப் பயிற்சியின் பின்னர் தரைவழியாகச் செல்ல முடியாத படை முகாம்களுக்கு வான் வழியாகச் சென்று எமது படையினருக்குத் தேவையான உணவு, போர் உபகரணங்களை வழங்குவது, தாக்குதலில் காயமடைந்தவர்களை ஏற்றுவது, புதிதாகக் களமுனைக்குச் செல்லும் படையினரை அங்கு இறக்குவது எனப் பல பணிகளை மேற்கொண்டேன்.

முல்லைத்தீவு படை முகாம் புலிகளால் தாக்கப்படுவதற்கு முதல் நாள் உலங்கு வானூர்திகள் இரண்டில் 70 படையினரை அங்கு கொண்டு சென்று இறக்கிவிட்டு அங்கிருந்து விடுமுறையில் செல்லவிருந்த படையினரை ஏற்றினேன்.

அன்று உலங்கு வானூர்தியில் ஏற்றக்கூடிய ஆள்களை ஏற்றிக் கொண்டு புறப்படவிருந்தபோது அங்கிருந்த காவல்துறையினர் 4 பேர் ஓடிவந்து தங்களையும் ஏற்றிச் செல்லுமாறு கேட்டனர். ஏற்கனவே உரியளவில் நிறைக்கு ஏற்ப ஆட்களை ஏற்றியிருந்ததால் இதில் இடமில்லை அடுத்த வானூர்தியில் ஏறுங்கள் என்று கூறிவிட்டுப் பறந்தேன்.

அப்போது திருகோணமலை சைனாபே (சீனன் குடா) வானூர்தித் தளத்திலிருந்து பணியாற்றினேன். அங்கிருந்து தொப்பிகல பகுதிக்குத் தாக்குதல் அணி ஒன்றை ஏற்றிச் செல்லவிருந்தவேளை அவர்கள் அனைவரையும் முல்லைத்தீவுக்கு மாற்றுமாறு பணிப்பு வந்தது.


**5 உலங்கு வானூர்திகளில் துருப்புகளை இறக்கினோம்**

முல்லைத்தீவுக்கு எம்.ஐ 17 ரக உலங்கு வானூர்திகள் ஐந்தில் செல்லத் தயாரானோம். வானோடிகள் பத்துப்பேர் வரையிருந்தோம். அதில் 3ஆவது உலங்கு வானூர்தியை நான் செலுத்தினேன். ஒவ்வொரு உலங்கு வானூர்தியிலும் 30 சிப்பாய்களும் அவர்களுக்குத் தேவையான ஆயுதத் தளவாடங்களும் ஏற்றப்பட்டன.

முல்லைத்தீவு படை முகாம் தாக்குதலின்போது வான் வழியாகவும் கடல் மார்க்கமாகவும் மேலதிக துருப்புகளை நாம் இறக்கக்கூடும் என்பதைக் கடந்த கால அனுபவங்களின் மூலம் புலிகள் அறிந்திருந்தார்கள். அதற்கேற்ப எதிர்த் தாக்குதல்களைச் செய்வதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டிருந்தார்கள். இதை அங்கு தரையிறங்க முயன்றபோது அவதானித்தேன்.

படை முகாமுக்குள் புலிகள் ஊடுருவியிருந்ததால் முகாமுக்குள் உலங்கு வானூர்தியை இறக்க வாய்ப்பிருக்கவில்லை. அதனால் முகாமுக்குத் தெற்காகக் கடற்கரையோரத்தில் தரையிறக்கம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சைன பேயிலிருந்து 10 கிலோ மீற்றர்கள் வரை கடற்கரையோரமாகப் பறந்து கடற்கரையோரத்தில் தரையிறக்க முற்பட்டபோது கடற்கரை மணலுக்குள் புகுந்து உருமறைப்புச் செய்து புலிகள் பதுங்கியிருந்தார்கள்.

**மண் அரணிலிருந்து புலிகள் எமது உலங்குவானூர்திக்குச் சுட்டார்கள். எனது வானூர்தியின் பிற் பகுதி சேதமடைந்தது. எனக்குப் பின்னால் பறந்துவந்த வானூர்தியின் வானோடியும் அதை உறுதிப்படுத்தினார். உலங்குவானூர்தியை உடனடியாகப் பாதுகாப்பாக இறக்க முடிவில்லை. புலிகள் எங்கு நிற்கிறார்கள் என்பதைக் கண்டறிவதில் சிரமம் இருந்தது.**



அங்கு கைவிடப்பட்டிருந்த பழைய பிளாஸ்ரிக் படகு ஒன்றுக்குள் மறைந்திருந்து பைவ் ஷீரோ துப்பாக்கியால் புலி ஒருவர் சுட்டார். எமது வானூர்தியிலிருந்து குதித்த சிப்பாய் ஒருவர் அவரைச் சுட்டு அவரது ஆயுதத்தை எடுத்தார். அவ்வாறு செய்யாவிட்டால் எமது 5 உலங்கு வானூர்திகளுக்கும் ஆபத்து இருந்திருக்கும்.

எமது 5 உலங்கு வானூர்திகளும் ஒரே நேரத்தில் தரையிறங்க முனைந்ததால் கடற்கரை மணல் மேல் எழுந்தது. எம்மைத் தாக்குவதற்குக் காத்திருந்த புலிகளின் கண்ணில் மணல் அடித்தது. அதனால் இலக்கு வைத்து எமது உலங்கு வானூர்திகளை அவர்களால் சுட முடியவில்லை. அன்றைய சூழலில் எமது உலங்கு வானூர்தி தப்பியதற்குக் காற்றில் அள்ளுப்பட்ட மணல் தான் காரணம். பின்னர் அந்த இடத்தை படையினர் தன் வசம் வைத்திருந்தபோது ஒரு தடவை தரையிறங்கியபோது கவனித்தேன். அடிக்கடி தரையிறங்கியதால் அந்த இடத்திலிருந்த மணல் எல்லாம் பறந்து கரடு முரடான நிலமாக அந்தப் பகுதி காணப்பட்டது. முதலில் நாம் இறக்கிய படையினருக்கு தலைமை தாங்கியவர் கேணல் லாபீர்.

நாம் துருப்புகளை இறக்க முன்னர் உலங்கு வானூர்தி ஒன்றுக்குப் புலிகள் சுட்டுச் சேதப்படுத்தினர். நான் இறக்கிய வானூர்தி மேலெழுப்பி முன்னே போக வேண்டிய திசையில் புலிகள் நிற்பதைக் கண்டேன். இதனால் அதை வேறு திசையில் திருப்பிச் சிரமப்பட்டு உயர்த்தினேன். சைனபேய்க்குச் சென்று மேலும் ஒரு படையணியை ஏற்றிக் கொண்டு சென்றேன்.

கடற்படையின் பெரிய கப்பல் ஒன்றைப் புலிகள் தாக்கி அழித்ததை அவதானித்தேன். அந்தக் கப்பல் இரண்டாக உடைந்து கடலில் தாண்டது. நான் கடற்படையுடன் தொடர்பு கொண்டு ரெட் ஸ்மோக் (சிவப்புப் புகை) அடிக்குமாறு கேட்டபோது கடற்படையினரால் செயற்பட முடியவில்லை. அந்தச் செய்தியை ஒட்டுக்கேட்ட கடற்புலிகள் தாமே சிவப்புப் புகையை அடித்தார்கள். அதனால் அந்த இடத்தைத் தாக்காது விட்டோம்.

மண் அரணிலிருந்து புலிகள் எமது உலங்குவானூர்திக்குச் சுட்டார்கள். எனது வானூர்தியின் பிற் பகுதி சேதமடைந்தது. எனக்குப் பின்னால் பறந்துவந்த வானூர்தியின் வானோடியும் அதை உறுதிப்படுத்தினார். உலங்குவானூர்தியை உடனடியாகப் பாதுகாப்பாக இறக்க முடிவில்லை. புலிகள் எங்கு நிற்கிறார்கள் என்பதைக் கண்டறிவதில் சிரமம் இருந்தது. அதனால் சைனபேய் நோக்கிப் பறந்துகொண்டிருந்தேன். பின்னர் கொக்கிளாய்ப் பகுதியில் கடற்கரை மணலில் இறக்கினேன். அங்கு கடற்படையினர் 30 பேர் வரை இருந்தார்கள். அவர்களிடம் விடயத்தைச் சொல்லி உலங்கு வானூர்தியைப் பாதுகாக்குமாறு கூறிவிட்டு முதன்மை வீதிக்கு வந்தபோது ஒரு வான் வருவதைக் கண்டு அதை மறித்தேன். அதை முஸ்லிம் நபர் ஒருவர் செலுத்தி வந்தார். அருகிலுள்ள காவல் நிலையத்துக்குப் போகவேண்டும் எனக் கேட்டபோது புல்மோட்டை காவல் நிலையத்தில் என்னை இறக்கி விட்டார். அங்கு சென்று சைனபேய்க்குத் தொடர்பெடுத்தபோது உதவிக்கு உலங்கு வானூர்தி ஒன்று அனுப்பப்பட்டது. பின்னர் அமைச்சர் அஷ்ரப்பை ஏற்றிச் சென்றபோது விபத்தில் சிக்கி இறந்த வானோடி கிரான் பெரேராதான் அந்த வானூர்தியைச் செலுத்தி வந்திருந்தார்.

முல்லைத்தீவு படை முகாம் தாக்குதலின்போது கடல், வான் வழிகளில் மேலதிக துருப்புகளை இறக்க முடியாத அளவுக்குப் புலிகள் தாக்கினார்கள். உலங்கு வானூர்தியை இறக்கியபோது சரமாரியாக எறிகணைகளை வீசினார்கள். காயக்காரர்களை ஏற்றிக்கொண்டு மிக அவசரமாகக் கடலைநோக்கிப் பறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

(07ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பை தவறவிட்ட தமிழ் பேசும் தலைவர்கள்

▌வி.அருணாசலம் ▌



பீல்ட் மார்ஷல் பொன்சேகாவிற்கான பரப்புரை மேடையில் சம்பந்தன்

போர் முடிவுற்ற பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அரச தலைவர் பதவியை நோக்கிக் களமிறங்கிய வேட்பாளரான ஜெனரல் சரத்பொன்சேகாவை அரச தலைவராக்குவதற்குக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், சித்தார்த்தன், செல்வாம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் என எல்லாத் தலைவர்களும் ஓரணியில் நின்றார்கள். கணிசமான வாக்குகளை வடக்குக் கிழக்கில் அவருக்குப் பெற்றும் கொடுத்தார்கள். இதற்கான சாணக்கியனாகச் செயற்பட்டவர் சம்பந்தன். பழுத்த அரசியல்வாதி, அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர் என்றெல்லாம் புகழப்பட்டவர். ஆனால், அதையெல்லாம் மீறி போர் வெற்றியைத் துரும்பாக வைத்து அந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றார்.

2005இல் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 4 ஆண்டுகளின் பின்னர் புலிகளை அழித்த நவீன துட்டகைமுனு எனச் சிங்கள மக்களால் வர்ணிக்கப்பட்டவர். போர் முடிந்தவுடன் நடக்கும் தேர்தலில் சிங்கள மக்கள் போர் வெற்றியைக் கொண்டாடுவார்கள் என்பதைச் சம்பந்தன் கணக்குப் போடத் தவறியிருந்தார். அதேவேளை போரை முன்னின்று நடத்திய படைத் தளபதியைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்ற நல்லிணக்கத்தையும் வெளியுலகுக்குக் காட்டினார். தற்போது சரத்பொன்சேகா தலைமையிலான படைகள் போர்க்குற்றம் புரிந்தது என்றும் பன்னாட்டு விசாரணை அவசியம் என்று கூறுகின்றார்.

சரத் பொன்செகாவும் தனது தனிப்பட்ட போர் வெற்றியை முதலீடாக வைத்தே தேர்தலில் வெல்ல முனைந்தார். புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் இருந்து தப்பியவன் என்பதை ஞாபகமூட்டுவதற்காகக் குண்டுவெடிப்பில் சிதைந்த காரைப் பிறிதொரு வாகனத்தில் ஏற்றித் தனது தேர்தல் காலப் பரப்புரைக்குப் பயன்படுத்தினார். ஆனாலும் தோல்வியடைந்தார். போரை முன்னின்று நடத்தத் துணிந்தவரைவிட அதனை நடத்த முன்வந்த அரசியல் தலைவரே சிறந்தவர் என்று சிங்கள மக்கள் நினைத்தனர்.

2010இல் மகிந்த ராஜபக்ச அரச தலைவரான பின்னர் நாடாளுமன்றின் முதல் அமர்வில் உரையாற்றிய சம்பந்தன், போரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் மக்களாட்சிச் சூழல் ஒன்றை ஏற்படுத்தியதற்காக அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு நன்றி கூறினார். இந்தக் கட்டத்திலும் சிங்கள ஆட்சியாளருக்கு நல்லெண்ண சமிக்ஞையை விட்டிருந்தார். அதனாலும் தமிழர்களுக்குப் பயன் ஏதும் கிட்டவில்லை.

சரத்பொன்சேகா அரச தலைவராகியிருந்தால் ரணில் விக்கிரமசிங்வின் பங்களிப்புடன் தமிழருக்கான அரசியல் தீர்வைக் காணும் வாய்ப்பு சம்பந்தனுக்கு இருந்தது. 2010இல் அதை இழந்த அவர் 2015இல் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகத் தேர்தலில் குதித்த பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்து தமக்குச் சாதகமாக எல்லாவற்றையும் முடித்துவிடலாம் என்று நம்பினார். நல்லாட்சியைத் தாமே கொண்டுவந்தோம் என்றும் கூட்டமைப்பினர் பெருமைப்பபட்டனர்.

### புரிதலற்ற காய் நகர்த்தல்கள்


தமிழருக்கான தீர்வை முன்வைக்கும் போது சிங்கள மக்களதும், பௌத்த பிக்குகளினதும் விருப்பம் மிக முக்கியமானது. அதைக் கையாளக்கூடிய வல்லமை மகிந்த தரப்புக்கு மட்டுமே எண்டு உன்பது புரியாமல் அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொண்டது தமிழ் தலைமை. எனவே அது தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கியல்ல என்பது வெளிப்படை. இத்தகைய பின்னணி அரசியலில்தான் தற்போதைய தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவு குறித்த விடயத்தையும் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். ஏனென்றால் தாம் எடுக்கும் எல்லா முயற்சிகளையும் மக்களுக்காகத்தான் எடுக்கின்றோம் என்றே அரசியல்வாதிகள் கூறுகின்றனர். ஆனால் உண்மை அப்படிப்பட்டதல்ல என்பதையே வரலாறு எமக்கு உணர்த்துகின்றது. எனவே இப்போது தொடங்கப்பட்டிருக்கும் முயற்சியும் உண்மையில் தமிழ் - முஸ்லிம் மக்கள் சார்ந்ததுதானா என்பது தீவிர ஆய்விற்குரியது.

தற்போது தமிழ் பேசும் மக்களுக்கான பொது ஆவணம் ஒன்றைத் தயாரிக்கத் தடுமாறிக்கொண்டிருக்கும் தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் தமது சார்பு நல்லாட்சியில் கோமாவில் இருந்தார்களா என்ற கேள்வி இந்தப் பின்னணியில்தான் எழுகிறது. இந்த விடயத்தை எப்போதோ செய்து முடித்திருக்கும் வாய்ப்பு கூட்டமைப்புக்கு இருந்தபோது ஏன் அதைத் தவறவிட்டார்கள்? அப்போது அவர்களின் அரசியல் ஞானத்துக்கும் சாணக்கியத்துக்கும் என்ன நடந்தது? நாடாளுமன்றில் நல்லாட்சிக்கு ஆதரவாகவும் எதிராகவும் (ஆனால் ஐ.தே.கவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக) கைகளை உயர்த்தி அதற்கான சன்மானங்களைச் சின்னச் சின்னதாக (தோரோடும் வீதிகளாகவும் ஒழுங்கைகளாகவும்) பெற்றுக்கொண்டார்களே தவிர தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஒரு காலக்கெடுவை வைத்துச் செயற்படவும் இல்லை,


தற்போது ஆவணம் ஒன்றைத் தயாரிக்க முயற்சிப்பதுபோல தமிழ் முஸ்லிம் கட்சிகள் அப்போது முயற்சிக்கவும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போலவே நல்லாட்சி அரசின் பங்காளிகளான முஸ்லிம் கட்சிகளுக்கும் அப்போது அவை தேவைப்பட்டிருக்கவில்லை. ஆனால் 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தோல்வியிலிருந்து கூட்டமைப்பு மீள்வதற்குள் தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் ஆதரவின்றியே கோட்டாபய ராஜபக்ச அரச தலைவரானார். இப்படி ஒரு விடயம் நடக்கும் என்று தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் நினைத்தும் பார்க்கவில்லை. தமது முழுப்பலத்தையும் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கியபோதும் சஜித்தைக் கோட்டாபய 13லட்சத்து 60ஆயிரம் மேலதிக வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார். இந்த வெற்றியின் மமதையால் தமிழ் - முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் இந்தத் தலைவர்களை அவர் தூசுக்குச் சமானமாக நடத்தினார். பதிலாக அரசோடு சேர்ந்து நிற்கும் தமிழர்களை மாற்றுத் தலைவர்களாக உருவாக்குவதில் அதிக கவனமெடுத்தார். அதற்கு முன்பாகவே நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளை நம்பிப் பயனில்லை என்று அரச சார்பு கட்சிகளுக்கும் வாக்களித்த தமிழர்கள் தமது எண்ணப்பாட்டை வெளிப்படுத்தினார்கள். இந்த நிலைதான்,

**2005இல் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 4 ஆண்டுகளின் பின்னர் புலிகளை அழித்த நவீன துட்டகைமுனு எனச் சிங்கள மக்களால் வர்ணிக்கப்பட்டவர். போர் முடிந் தவுடன் நடக்கும் தேர்தலில் சிங்கள மக்கள் போர் வெற்றியைக் கொண்டாடுவார்கள் என்பதைச் சம்பந்தன் கணக்குப் போடத் தவறியிருந்தார்**


பொன்சேகாவின் பரப்புரையில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளால் துளைக்கப்பட்ட அவரது கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



40

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

பழைய (வேண்டத்தகாத) குப்பைகளால் நிரப்பப்பட்ட எமது எண்ணங்களால் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியாது. அவை புதியவற்றுக்கு இடம் தராமலேயே இருந்து விடுகின்றன. நிதானமாகப் பழையதைக் கழித்து ஒதுக்குகிற சிரமதானத்தை எமக்குள் நாமே நடாத்தவேண்டும். அதற்கான கருவிகளாக வினாக்களை கையிலெடுப்பது அவசியம். பழையன எல்லாவற்றையும் அடியோடு ஒதுக்கி வைப்பதும் ஆரோக்கியமானதல்ல என்பதையும் கவனத்தில் வைத்திருக்கவேண்டும்.

பழையனவற்றிலிலிருந்து பட்டறிவினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு பெறவில்லையாயின் ஒரேயிடத்திலேயே சுழல வேண்டிய அவலத்துக்கு உள்ளாக வேண்டியிருக்கும். பழையவற்றிலிருந்து பெற்றுக்கொண்டவற்றை (நல்லதோ கெட்டதோ) சந்தர்ப்பத்திற்கேற்பவும் காலம் மற்றும் சூழலுக்கேற்பவும் பயன்படுத்தம் ஆற்றலை மேம்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் பழையவற்றை மீளவும் மீளவும் பேசிக்கொண்டே இருப்பது அறிவீனம். அதனால் காலம் விரயமாவதைத் தவிர எந்தவொரு பயனும் கிட்டிவிடாது.

சடங்குகளாகட்டும் சம்பிரதாயங்களாகட்டும் காரணமறிந்து கொண்டு அதனையோ அவற்றையோ ஆராய்ந்து பின் பற்றாவிடில் அவையும் பழைய குப்பைகள்தான் என்பதை நினைவில் வைத்திருப்பது அவசியம். கட்டுக்கதைகள் கருத்துருவாக்கங்கள் என்பனவும்கூட அவ்வாறானவையே. ஒதுக்கி வைக்க வேண்டியவற்றை, கழைந்தெறிய வேண்டியவற்றைக் காவித்திரிவதில் எந்தவித நன்மையும் கிட்டாது.

கழித்தொதுக்குவது எவ்வாறு? இதுதான் எமக்குள்ள தயக்கம். எமக்குள்ளாகக் கேட்டுத் தெளியவேண்டிய வினாக்கள் பல இருந்தும் நாம் எமக்கு வசதியாக அவற்றைத் தவிர்த்துவிடுகிறோம் என்பதுதான் உண்மை. எவ்வாறு என்பதிலேயே உறைந்து விடுகிறோம் அல்லது திகைத்து நின்று விடுகிறோம். குறித்த ஒரு விடயம் ஏன்? எதற்காக? எனக்கும் அதற்குமான உறவு என்ன? என்ன பயன்? போன்ற வினாக்களுக்குள்ளால் அணுக முயன்றிருக்கிறோமா? அதற்கு விடை இல்லையென்பதாகவே இருக்கும்.

பல வருடங்களுக்கு முன் நடந்த ஒரு விபத்தை உதாரணமாகக் கொண்டால் அது எப்படி நடந்தது என்பதையோ அதிலிருந்து எப்படி மீண்டேன் என்பதையோ பேசிக்கொண்டிருப்பதால் பயனேதும் கிட்டுமா? எப்படி நடந்தது என்பதையே இனிமேல் அப்படியொன்று நடக்காதிருக்க என்ன காப்புமுறையை பின்பற்ற வேண்டும் என்று ஒரு சுயநம்பிக்கையை கட்டமைத்திருக்கிறேனா? அப்படிக் கட்டமைத்திருப்பின் பேசிக் காலத்தை வீணடிக்கத் தேவையிராதல்லவா?


நடந்து முடிந்திருந்தவற்லிருந்து படிப்பினைகளைப் பெறுவதாக இருக்கவேண்டுமே தவிர எதிர்பார்ப்புகளை கட்டமைக்கக்கூடாது எதிர்பார்ப்பு என்பதுகூட அமைதியைச் சிதறடிக்கின்ற ஒன்றுதான் என்பதை நினைவில் கொள்வது அவசியம். இந்த எதிர்பார்ப்பு என்கிற விடயம் தொடர்பாக ஏற்கனவே பேசியாகிவிட்டது மீள மீளப் பேசுதல் என்பது மறத்தலைத் தவிர்க்கும் ஒரு வழிமுறைதான். அது கல்வி போன்ற விடயங்களுக்கு உதவக்கூடியது. செயற்பாட்டுக்கு அல்ல.

முற்றத்தில் துருத்திக்கொண்டிருக்கும் கல் காலில் தாக்கும் என்பது நிகழக்கூடிய ஒன்று. விலகி நடக்கவேண்டும் என்பது முன்னொருமுறை பட்ட அனுபவமாக இருக்கும். முற்றத்திலிறங்கும் ஒவ்வொரு முறையும் அதையே நினைத்துக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. அதற்காக எவ்வளவு காலத்துக்கு அதையே நினைத்துக் கொண்டிருக்க முடியும்? அதனையே நினைத்தபடி முற்றத்தில் உலவியபடி மலர்ந்திருக்கும் மலர்களை இரசிக்கமுடியுமா? அந்தக் கல்லை அகற்றிவிட்டால் மனதிலிருக்கும் நெருக்கடியகன்று மலர்களோடு ஒன்றிப்போகமுடியுமல்லவா?

முற்றத்திலிருக்கும் கல் போல ஏராளமான கற்கள் மனதினுள்ளேயே குடிகொண்டிருக்கின்றன. அவற்றை அகற்றும்வரை அவற்றைத் தவிர்த்து வேறொன்றையும் எண்ணவே முடியாது. நாமும் நிறையக் கற்களை அடுக்கிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம். அவற்றையே எண்ணிக் கொண்டு அலைகிறோம். எதையுமே ஆக்கபூர்வமாகச் செய்யமுடியாது தவிக்கிறோம். அமைதி தேடி அலைகிறோம். இப்போது மீண்டும் வினாவிற்கு வருவோம்.

பழைய குப்பைகளை அகற்றுவது எப்படி? என்பதை விடுத்து அவை தொடர்பான பிற வினாக்களுக்கூடாகச் சிந்திப்போம்.

## வாய்ப்பை ...



வேட்பாளராக வந்த சரத்பொன்சேகாவை நிமிர்ந்து கூடப் பார்க்க விரும்பாத அப்பாவித் தமிழ்த் தாய்.

தங்கள் அரசியல் பலத்தின் மீது விழுந்த அடிதான் இந்தத் தலைவர்களை ஒருமித்த செயற்பாட்டுக்கு நிர்ப்பந்திக்கிறதே தவிர வேறெதுவுமில்லை. "ஒற்றுமை" என்கிற முலாமைப் பூசிக்கொண்டு புதுப் பொலிவுடன் மக்கள் முன் போய் நிற்கவில்லை என்றால் இனித் தங்களுக்கு அரசியல் வாழ்வு கிடையாது என்கிற அச்சம் காரணமாகவே இந்தத் தலைவர்கள் ஒன்றுபட அல்லது ஒரு நிகழ்ச்சி நிரலில் செயற்பட முயற்சிப்பதற்கான காரணம்.

உண்மையில் அவர்களுக்கு அந்த நோக்கமும் மக்கள் நலன் சார்ந்த சிந்தனையும் இருந்திருந்தால் நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ரணில்-மைத்திரி கூட்டு ஆட்சிக் காலத்திலேயே அவர்கள் ஒற்றுமைப்பட்டு ஒரு நிகழ்ச்சி நிரலின்கீழ் வந்திருப்பார்கள். நல்லாட்சிக் காலம் என்பதே சம்பந்தனையும் கூட்டமைப்பையும் முஸ்லிம் கட்சிகளையும் மலையகக் கட்சிகளையும் பொறுத்தவரையில் எழுச்சியான காலம் அதை உரியவாறு பயன்படுத்தாதது இந்தத் தலைவர்கள் அனைவரதும் தவறே. அதை மறைத்துவிட்டு இவர்கள் பேசும் ஒற்றுமையை நம்பி இவர்களுக்கு வாக்களிக்க மக்கள் தயாரானால் அதைப் போல ஒரு முட்டாள்தனம் வேறு இருக்காது.

## கடற்கரை ...

எனக்குப் பின்னால் பறந்து வந்த உலங்கு வானூர்தியிலிருந்து ஒரு தகவல் கிடைத்தது. எனது உலங்கு வானூர்தியின் சில்லில் தொங்கியவாறு பயணித்த சிப்பாய் ஒருவர் கடலுக்குள் விழுந்துள்ளார் என்று. எனக்கு அந்தச் சம்பவம் துக்கமாக இருந்தது. இன்னொரு சில்லில் மற்றொரு சிப்பாய் தொங்கிக் கொண்டு பயணம் செய்வதாக. எனது உலங்கு வானூர்தியில் பயணித்த சிப்பாய் ஒருவர் கத்தினார்.


நான் வேகத்தைக் குறைத்து அவரை உள்ளே தூக்க முயன்றபோது பின்னால் பறந்து வந்த உலங்குவானூர்தியில் இருந்து உலங்கு வானூர்தியின் வேகத்தைக் குறைக்க வேண்டாம் கடலில் படகுகளில் கலைத்துக் கலைத்துக் கடற் புலிகள் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள் வேகமாகப் போங்கள் என்று அறிவுறுத்தல் கிடைத்தது. உடனடியாக உலங்கு வானூர்தியைப் பதித்துக் கடல் நீரின் மட்டத்தில் பறந்தேன். அவ்வாறு செய்ததால் புலிகளின் இலக்கிலிருந்து தப்ப முடிந்தது.

முல்லைத்தீவு படை முகாம் புலிகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் 3 நாள்கள் வரை அந்தப் பகுதி எங்கும் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டேன். முல்லைத்தீவு தாக்குதல் பற்றி தற்போது நினைக்கும்போதும் வேதனைப்படும் விடயம் தாக்குதலுக்கு முதல் நாள் அங்கு சென்றபோது தங்களையும் ஏற்றிக்கொண்டு போகுமாறு கேட்ட காவல் அதிகாரிகளை ஏற்றாது வந்ததே. அவர்களை அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்ற முடியாது போனமை கவலை. அவர்கள் 4 பேரும் தாக்குதலில் இறந்திருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**▌கு.கணேசன்**

# உடல் எடையைக் குறைக்க முதலில் அறிய வேண்டியது என்ன?



ஒரு நாட்டின் பகைவர்கள் யார், எவர், எங்கே, எப்படி ஒளிந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால், எத்தனை போர்களைக் கண்டாலும் அந்த நாடு எளிதாக வென்றுவிடும். அதுமாதிரிதான், உங்களுக்கு உடல் பருமனைக் கொண்டுவந்த எதிரியை நீங்களே உணர்ந்துகொண்டால், அதைக் குறைப்பதற்கான போராட்டத்தில் வெல்வது சுலபம்.

அதற்கு, திருவிளையாடல் திரைப்படத்தில் தோன்றிய நாகேஷ் மாதிரி சில கேள்விகளை நீங்கள் கேட்கவேண்டும். இவற்றுக்குப் பதில் சொல்ல சிவாஜிகணேசன் என்ற சிவன் தேவையில்லை, நீங்களே போதும்! ஆம். கேள்வியும் நீங்களே, பதிலும் நீங்களே!

உங்கள் எதிரிகள் யார்?

உங்கள் குடும்பத்தில் யாருக்காவது உடல் பருமன் பிரச்சினை இருக்கிறதா? இருந்ததா? பள்ளியில், கல்லூரியில் படிக்கும்போது உங்கள் உடல் எடை என்ன? வேலையில் சேர்ந்தபோது அல்லது திருமணமானபோது உங்கள் எடை சரியாக இருந்ததா? தைராய்டு பிரச்சினை, பிசிஓடி போன்று வேறு எதற்காவது மாத்திரை, மருந்து சாப்பிடுகிறீர்களா?

'கொஞ்சம் குண்டாகின மாதிரி இருக்கே' என்று எப்போது உங்களுக்குத் தோன்றியது? உங்கள் உணவுப் பழக்கம் என்ன? தினமும் நீங்கள் செய்யும் வேலைகள் என்ன? நடைப்பயிற்சிக்குப் போகும் பழக்கம் உண்டா? ஜிம்முக்கும் போகும் ஆசாமியா நீங்கள்? யோகா செய்வீர்களா?

சமீபத்தில் உங்கள் உணவுப்பழக்கம் மாறியதா? மேற்கத்திய உணவுகளை விரும்பிச் சாப்பிடுவீர்களா? அடிக்கடி கடைச் சாப்பாடு, பார்ட்டி என்று போகும் வழக்கம் உண்டா? மது அருந்துவீர்களா? மன அழுத்தம் உண்டா? இரவில் தேவையான அளவுக்கு உறக்கம் வருகிறதா?

என்ன காரணத்தால் உங்களுக்கு உடற்பருமன் வந்தது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? உங்கள் எதிரி யார்? உணவா? உடற்பயிற்சி இல்லாததா? உடல் பெருத்ததால் உங்களுக்கு இப்போது என்ன பிரச்சினை? உங்கள் உடற்பருமனைக் குறைக்க என்ன மாதிரியான முயற்சிகளை அல்லது பயிற்சிகளை மேற்கொண்டீர்கள்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் தயாரித்துக்கொள்ளுங்கள். அப்போது உங்களுக்கே புரியும் எதற்கு உங்கள் எடை கூடியது என்று!

**சிகிச்சை என்ன?**

உடல் பருமனுக்காக மருத்துவரிடம் போனால், அவர் முக்கியமாக கவனிப்பது இரண்டே விடயங்களை மட்டுமே! முதலாவது, பெருத்த பருமன்தான் பிரச்சினையா? இரண்டாவது, வேறு பிரச்சினைகளையும் அது துணைக்கு அழைத்துக்கொண்டதா?

பெருத்த பருமன்தான் பிரச்சினை என்றால் அதற்கென ஒரு தனி சிகிச்சை உள்ளது. பி.பி. கூடுதல், நீரிழிவு, கொஞ்சம் கொலஸ்ட்டிரால் எனப் 'பக்க வாத்தியங்கள்' பற்றிக்கொண்டிருந்தால் அதற்கு வேறு மாதிரியான சிகிச்சை தரப்படும். ஆனால், இரண்டுக்கும் ஓதப்படுகிற அடிப்படை மந்திரங்கள் இரண்டே இரண்டுதான்.... உணவைக் குறை உடற்பயிற்சியைக் கூட்டு.

அதற்கு முன், உங்கள் மனதில் உறுதி வேண்டும்! 'உடற்பருமனைக் குறைத்துக் காட்டுவேன்' என்று சபதம் எடுக்கவேண்டும். உங்கள் முனைப்பான செயல்கள் அடுத்தவர்களை ஆச்சரியப்படுத்தவேண்டும்.

அதேவேளையில், ஒரு மாத பயிற்சி செய்தால் உடற்பருமன் குறைந்துவிடும் என்று மட்டும் ஆசைப்படக்கூடாது; அணையிலிருந்து சாதாரணமாகக் கிளம்பி சலசலத்து ஓடும் ஆற்றுத் தண்ணீர்தான் அனைவருக்கும் பயனளிக்கும். அதுபோல் கொஞ்சம் கொஞ்சமாக எடையைக் குறைப்பதுதான் உடலுக்கு நல்லது.

மடை திறந்த பின் ஓடும் காட்டாற்று வெள்ளம் வேகமாக வடிந்துவிடும் ஆனால், எல்லோரையும் பயமுறுத்தும் பாதிப்பையும் ஏற்படுத்தும். அதேபோல் வேகமாக எடையை இழப்பது ஆரோக்கியத்துக்கு ஆகாது. களைப்பு, தசை இழப்பு, எலும்பு வலுவிழப்பு, நோய்த் தடுப்பாற்றல் குறைவு, வைட்டமின் சத்துக் குறைவு எனப் பல பிரச்சினைகளைக் கொண்டுவந்துவிடும். எனவே, மாதம் ஒரு கிலோ எடையைக் குறைத்துவிட்டால், நீங்கள் வெற்றிப் படிக்கட்டில் ஏறிவிட்டீர்கள் என்று அர்த்தம்.

உடல் பருமனைக் குறைக்கும் முதல் மந்திரம் 'உணவைக் குறைப்பது'. நம் உடலுக்கு ஆதாரமே உணவுதான். அதைக் கண்டபடி குறைத்துவிடவும் கூடாது. உணவைக் குறைப்பதற்கும் ஓர் அளவு இருக்கிறது. அந்த அளவுக்குப் பெயர்தான் கலோரி கணக்கு!

**கலோரி கணக்கு என்பது என்ன?**

கலோரி என்பது வெப்ப ஆற்றல் அலகு. நம் உடல் எனும் எந்திரம் இயங்க வேண்டுமானால் அதற்கு ஆற்றல் தேவைதானே? அந்த ஆற்றலை நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துகளிலிருந்து பெறுகிறோம். அந்த சத்துகள் செல்களில் செரிமானமாகும்போது வெப்பத்தை வெளியேற்றுகின்றன. அதை உடல் எந்திரம் பயன்படுத்திக்கொள்கிறது. அந்த வெப்பத்தைத்தான் நாம் கலோரிகளில் அளக்கிறோம்.

ஒரே எடைதான் என்றாலும், எல்லா உணவுகளும் ஒரே மாதிரியான வெப்பத்தை - அதாவது கலோரிகளைத் தருவதில்லை. துண்டு எல்லாமே நூலில்தான் நூற்கப்படுகிறது என்றாலும் கதர் நூல் என்றால் ஒரு விலை, பட்டு நூல் என்றால் அதிக விலை என்று இருக்கிறமாதிரி, உணவிலுள்ள சத்துகளைப் பொறுத்து அதன் கலோரிகள் மாறும். உதாரணத்துக்கு, 100 கிராம் சப்பாத்தி 100 கலோரி தருகிறது. 100 கிராம் ஆப்பிள் 65 கலோரிதான் தருகிறது.

தண்ணீர் இறைக்கும் மோட்டார் ஓடுவதும், ஏசி மெஷின் ஓடுவதும் ஒரே மின்சாரத்தில்தான் என்றாலும், இரண்டுக்கும் செலவாகிற மின்சக்தி வித்தியாசப்படும். அதுமாதிரி, நம் எல்லோருக்கும் உடல் எனும் இயந்திரம் ஒன்றுதான் என்றாலும், அதற்குத் தேவைப்படும் வெப்பம் - அதான் கலோரிகள் - ஆளுக்கு ஆள் வித்தியாசப்படும். உதாரணத்துக்கு, அமர்ந்திருந்தபடியே வேலை பார்க்கும் மென்பொருள் நிபுணருக்கு 1600 கலோரிகள் தேவை. தலையில் பாரம் சுமக்கும் ஒரு தொழிலாளிக்கு 3000 கலோரிக்குக் குறையக்கூடாது.

ஒரே சீரான ஓல்ட்டேஜில் மின்சாரம் வந்தால் எல்லா எந்திரங்களும் ஒழுங்காக இயங்கும். ஓல்ட்டேஜில் பிரச்சினை என்றால், எந்திரம் பழுதாகும். அதுபோல் உடலுக்குத் தேவையான கலோரிகளுக்கு உணவைச் சாப்பிட்டால், ஆரோக்கியம் கைகூடும். கலோரிகள் குறைந்தால் உடல் மெலியும், கூடினால் பருமனாகும். எனவே, அவரவருக்குத் தேவையான கலோரிகளைத் தெரிந்துகொண்டு, அந்த அளவுக்குத்தான் உணவு சாப்பிட

(11ம் பக்கம் பார்க்க)

| பிஎம்ஐ அளவு | கலோரிகள் |
|---|---|
| 18.5க்கும் குறைவு - உடல் எடை குறைவு | 35 x இருக்க வேண்டிய உடல் எடை |
| 18.5 முதல் 23.9க்குள் - சரியான உடல் எடை | 30 x இருக்க வேண்டிய உடல் எடை |
| 24 முதல் 29.9க்குள் - அதிக உடல் எடை | 25 x இருக்க வேண்டிய உடல் எடை |
| 30 முதல் 34.9க்குள் - உடல் பருமன் | 20 x இருக்க வேண்டிய உடல் எடை |
| 35 முதல் 39.9க்குள் - பெருத்த பருமன் | 15 x இருக்க வேண்டிய உடல் எடை |

| ஆண் குழந்தை | பெண் குழந்தை |
|---|---|
| வயது x 125 + 1000 கலோரிகள் | வயது x 100 + 1000 கலோரிகள் |

**இது நீரிழிவு உள்ளவர்களுக்கானது**

| உடல் எடை | லேசான வேலை (ஒரு கிலோ எடைக்கு) | மத்தியமான வேலை (ஒரு கிலோ எடைக்கு) |
|---|---|---|
| உடல் பருமன் இருப்பவர்கள் | 20 கலோரிகள் | 25 கலோரிகள் |
| சரியான எடை இருப்பவர்கள் | 30 கலோரிகள் | 35 கலோரிகள் |
| எடை குறைவு இருப்பவர்கள் | 40 கலோரிகள் | 40 கலோரிகள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள்...



38

▮ தர்மராசா ▮

## வழியில் நின்றவர்கள் சாப்பாடு வாங்கித் தந்தார்கள்

13.3.2002 அன்று என்னை அனுராதபுரச் சிறைக்கும் மற்றொரு கைதியைக் கொழும்பு மகசின் சிறைக்கும் ஏனைய சிலரைக் களுத் துறைச் சிறைக்கும் அனுப்புவதற்காக மட்டக்களப்புச் சிறையிலிருந்து பகல் 11 மணியளவில் ஏற்றினார்கள். என்னுடன் மேலும் 12 கைதி கள் இருந்தனர். விசிற்றுக்காக மட்டக்களப்புக்கு வந்த சேரனும் அதில் அடங்கியிருந்தார். இந்தப் பயணம் மிகவும் குதூகலமாக இருந்தது.

மட்டக்களப்பிலிருந்து பிரபாகரன் ஜெயிலர் இந்தப் பயணத்துக்குப் பொறுப்பாக வந்தார். பிற்பகல் 2.30 மணியளவில் வெலிக்கந்தையிலி ருந்து களுத்துறைப் பேருந்தில் ஏற்றப்பட்டோம். களுத்துறையிலிருந்து வந்த பேருந்தில் 4 பெண்கள் புலிச்சந்தேகநபர்களாக அழைத்து வரப்பட்டிருந்தார்கள். அவர்களுள் என்னுடன் ஏற்கனவே மட்டக் களப்புச் சிறையிலிருந்த ஐயரின் மனைவியும் அடங்கியிருந்தார்.

தேநீர் குடிப்பதற்காகக் ஹபரணச் சந்தியில் பேருந்தை நிறுத்தி விட்டுச் சிறை ஊழியர்கள் இறங்கிப் போனார்கள். பொதுமக்கள் பயணித்த வான் ஒன்றும் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது. அதில் எம்மு டன் பயணித்த கைதி ஒருவரின் உறவுக்காரர் இருந்தார். எம்மைக் கண்டதும் அவர் எமக்கு ஏதாவது சாப்பாடு வாங்கித் தர விரும்பி னார். அதைப் பற்றி ஜெயிலரிடம் கேட்டபோது அவர் சம்மதித்தார். அந்த ஜெயிலர் பெரிதாக எதையும் கண்டுகொள்வதில்லை. எந்த நேரமும் தலையை ஆட்டிக் கொண்டிருப்பார்.

தேநீர், சிற்றுண்டி, கொய்யாப்பழம் எனப் பலவற்றை எமக்கு வாங்கித் தந்ததுடன் சிறை ஊழியர்களுக்குச் சிகரெட் பைக்கற்றுகளும் வாங்கிக் கொடுத்தார். அதில் சிறப்பு என்னவென்றால் அன்றைய ஸ்கொட்டில் எங்களில் எவரும் புகைப்பவர்கள் இருக்கவில்லை. சாதாரணமாகப் 10 பேரில் நான்கு பேராவது புகைக்கும் பழக்கமுடை யவர்கள் இருப்பதுண்டு. ஆனால் அன்று அவ்வா றானவர்கள் எவரும் இருக் கவில்லை. இரவு 6.30 மணியளவில் அனுராத புரச் சிறையைச் சென்ற டைந்தோம். இந்த ஸ்கொட் மிகவும் சந்தோசமாக அமைந்ததற்குப் பூசாச் சிறையிலிருந்த பலர் அதில் இடம்பெற்றிருந்த மையே காரணமாகும்.

15.3.2002 அன்று அதிகாலை 3.30 மணிக்கு எழுந்து அனுபுரத்திலி ருந்து திருகோணமலைக் குப் போவதற்குத் தயா ரானேன். காலை 6.30 மணியளவில் சிறையை விட்டு வெளியே எடுத் தார்கள். சிறைச்சாலை வான் ஒன்றில் அழைத்துச் சென்றார்கள். என்னுடன் சிங்களக் கைதி ஒருவரைச் சேர்த்து விலங்கி டப்பட்டது. மேலும் இரு கைதிகள் வந்தார்கள். அதில் ஒருவர் சித்த சுயாதீனமற்ற நிலையில் இருந்தார். வைத்தியப் பராமரிப்புக்காக அங்கொடை மனநோயாளி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அவரை மீண்டும் திருகோணமலைக்குக் கொண்டு செல்லும் பயணமது. பேருந்தில் பயணிப்பதைவிட வான் பயணம் சுகமாக இருந்தது. கொறவப் பொத்தான பாதையால் பயணித்தோம். தேநீர் வாங்கித் தந்தார்கள்.

அன்று பொறுப்பாக வந்த ஜெயிலர் ஒரு சுவையான பேர்வழி. வேறு சிக்கல்கள் எதுவும் இருக்கவில்லை. காலை 9.30 மணியளவில் திருகோண மலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் மேல் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்டேன். 18ஆம் நாள் மறுதவணை போடப்பட்டதால் திருகோணமலைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டேன்.

18.3.2002 அன்று நீதிமன்றத்துக்குச் சென்றபோது வேறொரு தவணை போடப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில் திருகோணமலையில் இருந்து அனுராதபுரத்துக்கு ஏற்றினார்கள். உதயகுமார என்ற ஜெயிலர் அந்தப் பயணத்துக்குப் பொறுப்பாக இருந்தார்.

திருகோணமலை நீதிமன்றில் வழக்குள்ள கைதிகளை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அனுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்கு ஏற்று வது வழமை. வழக்கு முடிந்தவர்களை மீண்டும் மாலையில் அனுராதபுரத் துக்குக் கொண்டு செல்வது வழமை. எனது வழக்கு திங்கட்கிழமை இருந் ததால் ஞாயிற்றுக் கிழமை வரவேண்டிய அனுராதபுர ஸ்கொட் திங்கட் கிழமை காலையிலேயே வந்தது. ஆனால் வழக்கு முடிந்த கைதிகள் 10 பேர்வரை என்னுடன் அனுராதபுரத்துக்குப் பயணித்தனர். இதில் புலிச் சந்தேகநபர்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த பெண் பிள்ளைகள் இருவ ரும் அடங்கியிருந்தனர். அவர்களது கைகளில் விலங்கிடப்படவில்லை.

திருகோணமலை சிறைக் கைதிகளின் விவரங்கள் பதியப்பட்ட பின்னர் கைவிலங்கிடும்போது முஸ்லிம் கைதி ஒருவர் தனக்குக் காலில் சுகவீனம் என்று ஊன்றுதடியுடன் பெரிய பைகளை வைத்துக்கொண்டு இருந்தார். அனுராதபுரத்தில் தண்ணீர்த் தொட்டியில் தடுக்கி விழுந்த போது காலில் நோ ஏற்பட்டது என்று கூறினார். சிறைக்குள் அந்த ஊன்றுகோலை அவர் பயன்படுத்துவதே இல்லை. அங்கும் இங்கும் மிகச் சாதா ரணமாக ஓடித்திரிவார். எஸ் கொட்டின்போது கால் நடக்க முடியாது என்றால் சிலவே ளை கைவிலங்கு போடப்படு வதில்லை. அன்று வந்த ஜெயிலரிடம் கால் நடக்க முடியாது என்று அவன் கூறி யபோது கால் தானே நடக்க முடியாது கையில் விலங்கு போடலாம் என்றார் அவர். கையில் விலங்குகளுடன் ஊன்றுதடியை ஊன்றாமல் விடமுடியாது என்பதால் அதையும் பைகளையும் வைத்துக்கொண்டு அவர் அந்தப் பயணம் முழுதும் படாதபாடு பட்டார்.

**தேநீர் குடிப்பதற்காகக் ஹபரணச் சந்தியில் பேருந்தை நிறுத்தி விட்டுச் சிறை ஊழியர்கள் இறங்கிப் போனார்கள். பொதுமக்கள் பயணித்த வான் ஒன்றும் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது. அதில் எம்முடன் பயணித்த கைதி ஒருவரின் உறவுக்காரர் இருந்தார்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை தேடுகிறீர்களா?

## சுயவிவரக்கோவைதான் உங்கள் பிரதிநிதி

■ சிறீதர்.எஸ்

முதன் முதலாக வேலை தேடுவதற்கும் இருக்கும் வேலையில் இருந்து புதிய வேலைக்கு மாறுவதற்கும் மிக அவசியமானது பயோடேட்டா எனும் சுயவிவரக் கோவை. வேலை கேட்கும் புதிய நிறுவனத்தில் நாம் போய் நிற்பதற்கு முன்பே, நமது சுயவிவரக்கோவை போய் நிற்கும். அது நம்மைப் பற்றிய பிம்பத்தை நிறுவனத்திடம் கொண்டு போய்விடும். அப்படிப்பட்ட முக்கியமான ஆவணத்தை அதற்குரிய மரியாதையுடன் நாம் உருவாக்குகிறோமா?

பலர் சுயவிவரக்கோவை தயாரிக்கும்போது வெறுமனே அவர்கள் படித்த படிப்பு, வேலை செய்த நிறுவனங்கள், அவற்றில் அவர்கள் வகித்த பதவிகள் இத்துடன் நிறுத்திவிடுகிறார்கள். சிலர் அவ்வளவுகூட மினக்கெடாமல் தனது நண்பர்களிடம் இருந்து கிடைத்த ஏதாவது சுயுவிவரக் கோவையில் 'பட்டி டிங்கரிங்' பார்த்து தங்கள் தகவல்களை நுழைத்து தயார் செய்துவிடுகிறார்கள்.

அப்படி அனுப்பிய தங்கள் சுயவிவரங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மனிதவளத் துறைக்கு போகும். அங்கே அது எப்பேர்ப்பட்ட பிம்பத்தை உருவாக்கும் என்பது பற்றிய பிரக்ஞையே அவர்களுக்கு இருப்பதில்லை.

ஒன்றைப் புரிந்துகொள்வோம்: சுயவிவரங்கள் என்பது நமது பிரதிநிதி. ஆவண வடிவில் நாம் நம்மையே அங்கே அனுப்புகிறோம். நாமே நேரடியாக அங்கே போகும்போது எப்படி எல்லாம் நம்மை தயார்ப்படுத்திக் கொள்வோம் என்று யோசித்துப் பாருங்கள். ஆண்கள் என்றால் ஒழுங்காக ஷேவ்செய்து அல்லது தாடியை திருத்திக்கொண்டு, வாசனைத் திரவியம் எதையேனும் போட்டுக்கொண்டு, நன்றாக அழுத்தித் தேய்த்த சட்டை காற்சட்டை அணிந்து, தேவைப்பட்டால் டைகூட கட்டிக் கொண்டு போவோம். பெண்கள் என்றால் மேக்கப் போட்டுக்கொண்டு தலைமுடியை திருத்த வாரி, புதிய புடவை அல்லது சுடிதார் அணிந்து கொண்டு போவோம். நம்மை அங்கே கொண்டு போகும்போது கொடுக்கும் முக்கியத்துவத்தில் பாதியையாவது நாம் நமது சுயவிவரக் கோவைக்கும் கொடுக்க வேண்டாமா?

அப்படி முக்கியத்துவத்துடன் நமது சுயவிவரக்கோவையைத் தயார்செய்யும் வழிகள் தான் என்ன?

**1. சுயவிவரக்கோவை உங்களின் ஆவண வடிவம்**

மேலே சொன்னபடி சுயவிவரக்கோவை என்பது நமது பிரதிநிதி. எனவே அது தனித்துவமாகத் தொனிக்கவேண்டும். உங்களைப்போல வேறு யாரும் இந்த உலகில் இல்லை உங்கள் சுயவிவரக்கோவையும் வேறு எதனைப் போலவும் இருத்தல்கூடாது. எனவே நண்பர், உறவினர் கொடுத்த எதையும் அப்படியே பிரதி செய்ய முனைய வேண்டாம். பல்வேறு சுயவிவரக்கோவை வடிவங்களை 'கூகுள்' செய்து பாருங்கள். அவற்றைப் பார்த்து ஒரு பொதுவான புரிதலுக்கு வாருங்கள். பின்னர் அவற்றை எல்லாம் மூடிவிட்டு நீங்கள் சுயமாக உங்களுக்கென ஒரு வடிவத்தைக் கொண்டுவர முனையுங்கள். முடித்துவிட்டு அதை ஒரு பார்வை பார்க்கும்போது உங்களுக்கு 'இதுதான் நான்!' என்ற நம்பிக்கை வர வேண்டும்.

> **பெரும்பாலும் நம்மில் பலர் பொதுவாக ஒரே ஒரு சுயவிவரக்கோவை வடிவத்தை வைத்திருப்போம். எந்த வேலை என்றாலும் அதையே அனுப்பி பதிலுக்கு காத்திருப்போம். அப்படி செய்யவே செய்யாதீர்கள்**

**2. விண்ணப்பப் படிவம் அல்ல**

நம்மில் பலருக்கு அப்படித்தான் நினைப்பு இருக்கிறது. ஏதோ குடும்ப அட்டைக்கு விண்ணப்பம் கொடுப்பதுபோல சுயவிவரக்கோவை கொடுத்து வேலை கேட்கிறோம் என்று நினைக்கிறோம். அது தவறான சிந்தனை. உங்கள் திறமையையும் நிறுவனத்தின் தேவையையும் பொருத்திப் பார்க்கும் ஒரு முயற்சிதான் நேர்முகம். உங்களுக்குப் பொருத்தமான திறன் இருந்தால், அதற்கான மனநிலை இருந்தால் அதுபோதும். எனவே சுயவிவரக்கோவை தன்னம்பிக்கையுடன், தெளிவுடன் இருக்கவேண்டும். வேண்டுதலாக தொனிக்கக்கூடாது.




**3. வேலைக்குத்தான் ஆள் தேவை**

பல நேரம் 'உங்களுக்கு ஒரு நல்ல வேலை தேவை' என்பதைவிட அவசரமாக, தீவிரமாக ஒரு நிறுவனத்துக்குத் திறன் வாய்ந்த ஊழியர் தேவை என்பதே உண்மை. அது நம்மில் பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. பலமுறை நான் பார்த்திருக்கிறேன். நேர்முகம் எடுக்கும் முகாமையாளர் நேர்முகத்துக்கு வருபவரைவிட டென்ஷனாக இருப்பார். காரணம் அவர்கள் நிறுவனத்துக்கு ஒரு பெரிய திட்டம் கிடைத்து தொடங்குவதற்காகக் காத்திருக்கிறது. ஆனால், ஒழுங்கான அணி அமையவில்லை. அதன் விளைவாக நிறுவனத்தின் மனிதவளத் துறை மேல் அதீத அழுத்தம் விழுந்துகொண்டிருக்கிறது. 'இன்னைக்கு நேர்முகத் தேர்வில் நல்ல ஆளா மாட்டிறனும் பிள்ளையாரப்பா. உனக்கு தேங்காய் உடைக்கறேன்!' என்று முகாமையாளர் வேண்டிக்கொண்டிருப்பார்.

அதாவது அவர்களிடம் தேவை இருக்கிறது. உங்களிடம் அதற்கேற்ற திறன் இருந்தால் வேலை நிச்சயம். எனவே உங்கள் சுயவிவரக் கோவையை அவர்கள் அந்தப் பொருத்தம் இருக்கிறதா என்றுதான் பார்க்கப் பயன்படுத்துவார்கள். அதனைத் தெரிவிக்கும் முயற்சிதான் சுயவிவரக்கோவை.

**4. வேலைக்கேற்ற சுயவிவரக்கோவை**

பெரும்பாலும் நம்மில் பலர் பொதுவாக ஒரே ஒரு சுயவிவரக்கோவை வடிவத்தை வைத்திருப்போம். எந்த வேலை என்றாலும் அதையே அனுப்பி பதிலுக்கு காத்திருப்போம். அப்படி செய்யவே செய்யாதீர்கள். முதலில் ஒரு வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனில் அந்த வேலை விவரணை என்னென்ன என்று பாருங்கள். ஆங்கிலத்தில் ஜொப் டிஸ்க்ரிப்ஷன் என்று சொல்வார்கள். வேலை விளம்பரத்தில் அதைக் குறிப்பிட்டு இருப்பார்கள். குறிப்பிட்டு இல்லையேல் கொடுக்கச்சொல்லி தைரியமாகக் கேளுங்கள். அப்படி எந்த ஆவணமும் எங்களிடம் இல்லை என்று சொன்னால் அந்த வேலைக்கு சுயவிவரக்கோவை அனுப்புவதே நேர விரயம். காரணம், வேலைக்கு ஆள் எடுப்பதிலேயே தெளிவின்றி இயங்கும் நிறுவனம் வேலையை வாங்குவதிலும் தெளிவின்றியே இயங்கும் சாத்தியம் அதிகம். அங்கே உங்கள் திறமை வீணடிக்கப்படலாம். எனவே, தெளிவான வேலை விவரணை குறிப்பிடப்படாத வேலை வேண்டாம்.

அந்த வேலை விவரணை கிடைத்ததும் அதை முழுவதும் படித்துப் பாருங்கள். அது உங்கள் திறமைக்கும் ஆர்வத்துக்கும் பொருந்தி வருகிறதா? ஆம் எனில், அந்த விவரணைகளை வைத்து உங்கள் சுயவிவரக்கோவையை முழுவதும் மாற்றி எழுதுங்கள். அது முழுக்க முழுக்க நீங்கள் விண்ணப்பிக்கும் வேலைக்கு ஏற்றதாகவே இருக்கவேண்டும். அந்த வேலைக்குப் பொருந்தும் உங்கள் திறமைகள், அனுபவங்கள் என்னென்ன, என்று விளக்குங்கள். அப்படி தனிப்பட எழுதப்பட்ட அந்த சுயவிவரக் கோவை படிக்கும்போது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் முகாமையாளரால் தெளிவாக உங்களை அந்த வேலையில் வைத்துப் பார்க்க முடியும். அதுவே பாதி வேலையை உறுதிசெய்துவிடும்.

இதுபோல நீங்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வேலைக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை விவரணையைப் படித்து அதன்படி சுயவிவரக்கோவையைத் திருத்தி, மாற்றி எழுதி அனுப்ப வேண்டும். இப்படிச் செய்தால் ஒவ்வொரு வேலைக்கும் விண்ணப்பிக்க நேரம் பிடிக்குமே என்று கவலைப்படலாம். அது உண்மைதான். அதிக வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியாது. ஆனால், அதுவும் நல்லதுதான் என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெகிழிக் கழிவால் உலகை மூடும் அமேசான்!

அமேசான் உலகின் மிகப் பெரும் நிறுவனங்களில் ஒன்று. உலக நாடுகள் பலவற்றிலும் தனது கிளைகளைக் கொண்டுள்ளது. நேரடிக் காட்சி அறைகள் தவிர இணையவழிக் காட்சி அறைகள் மூலம் இந்த நிறுவனம் மிகப் பெருமளவில் வியாபாரம் செய்கிறது. அதன் இணையவழி வர்த்தகத்தின் மூலம் **2020**ஆம் ஆண்டில் மட்டும் **10.66** மில்லியன் கிலோ கிராம் நெகிழிக் (பிளாஸ்ரிக்) குப்பை கடலில் கலந்திருக்கிறப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

நாளுக்கு நாள் இணைய வர்த்தகம் பெருகிவருகிறது. குறிப்பாக அமேசான் நிறுவனத்தின் விற்பனையானது கடந்த ஒருசில ஆண்டுகளில் பன்மடங்காக அதிகரித்திருக்கிறது. அமேசானின் வர்த்தகத்தோடு சேர்ந்து அதன் நெகிழிப் பொட்டலங்களும் நதிகள் வழியே பயணித்துக் கடல்களை நிறைத்துக் கொண்டிருக்கின்றன.

கடல்களின் பாதுகாப்பு தொடர்பாக செயல்பட்டு வரும் ஓஷியானா (OCEANA) என்ற அமைப்பு ஓர் அதிர்ச்சிகரமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் அமேசான் நெகிழித் தலையணைகள் (காற்றடைத்த நெகிழிப்பைகள்) பொட்டலங்கள் மட்டுமே உலகை **600** முறை சுற்றும் அளவுக்கு அதிகமாக சூழலில் கலந்திருக்கின்றன என்றும் **2020**ஆம் ஆண்டு மட்டும் அமேசான் உற்பத்தி செய்த நெகிழிப் பொட்டலங்கள் **10.66** மில்லியன் கிலோ கிராம் என்றும் சொல்கிறது. இது ஒவ்வொரு **67** நிமிடமும் ஒரு விநியோக வண்டி முழுதுமான நெகிழிக் குப்பையைக் கடலில் கொட்டுவதற்குச் சமம்.

கவலைதரத்தக்க வகையில் அமேசானின் பெரும்பாலான நெகிழிப் பைகள் மறுசுழற்சி செய்யத்தக்கவை அல்ல என்பதைத் தனது ஆய்வுகள் மூலம் அம்பலப்படுத்தியிருக்கிறது ஓஷியானா. **610** பில்லியன் டொலர் வர்த்தகம் செய்யும் அமேசான் வர்த்தக உலகத்தில் ஜாம்பவானான அமெரிக்க நிறுவனமான வோல்மார்ட்டையே பெரும் வித்தியாசத்தில் முறியடித்து முன்னேறிக்கொண்டிருக்கிறது. அத்தோடு அதன் நெகிழிக் குப்பைகளும் ஒரே ஆண்டில் **29** விழுக்காடு அதிகரித்திருக்கின்றன.

சூழலுக்குப் பாதுகாப்பான மாற்றுகள் கைவசம் இருந்தும் தனது இலாபம் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அமேசான் செயல்படுகிறது எனக் குற்றஞ்சாட்டுகிறது ஓஷியானா. மறுசுழற்சி செய்யத்தக்கப் பொட்டலங்கள் திருப்பி செலுத்தத்தக்க மறுபயன்பாட்டுக்குரிய (RETURNABLE AND REUSABLE) பொட்டலங்கள் அமேசானின் நெகிழி மாசுபாட்டை வெகுவாகக் குறைக்கும் என்கிறது ஓஷியானா.

ஜெர்மனியில் அமேசான் மறுசுழற்சி செய்யத்தக்க நெகிழியை பயன்படுத்தி ஆண்டுக்கு பலநூறு மில்லியன் பார்சல்களை அனுப்புகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வர்த்தகத்தில் உலகின் மிகப்பெரிய ஜாம்பவானாக இருக்கும் அமேசான் நெகிழிக் குப்பை விடயத்திலும் உலகுக்கு ஒரு முன்னோடியாக இருக்கவேண்டும் என்று கோருகிறது ஓஷியானாவின் அறிக்கை.

---

## உடல் எடையைக் ...

வேண்டும். இது 'ஸ்லிம்' ரகசியத்தின் முதல் படி.

அது சரி, கலோரிகளை எப்படித் தெரிந்துகொள்வது?

மிக இலகு. அதற்கு ஒரு கணக்கு இருக்கிறது. முதலில் உங்கள் பிஎம்ஐ தெரியவேண்டும். (படிக்க: சென்ற அத்தியாயம்) அடுத்து உங்களுக்கு இருக்க வேண்டிய உடல் எடை தெரிய வேண்டும். உங்கள் உயரத்தை செ.மீ. அளவில் அளக்கவும். அதிலிருந்து **100**ஐக் கழிக்கவும். அதுதான் உங்களுக்கு இருக்க வேண்டிய உடல் எடை (கிலோவில்). இந்த இரண்டையும் வைத்து, பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பாருங்கள். உங்களுக்குத் தேவையான உணவுக் கலோரிகளைத் தெரிந்துகொள்ளலாம். (குழந்தைகளுக்கும் நீரிழிவு உள்ளவர்களுக்கும் தனிப் பட்டியல்கள்.)

உதாரணமாக, உடல் பருமன் இருப்பவர்கள் லேசான வேலை பார்ப்பதாக இருந்தால், தங்கள் எடையை **20** எண்ணுடன் பெருக்கிக்கொள்ள வேண்டும். அதன் விடைதான் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய உணவு கலோரிகள்.

---

## வேலை தேடுகிறீர்களா? ...

**5. அளவிடும் திறன்கள்**

சுயவிவரக்கோவையில் நிறையப் பேர், "நான் அந்த வேலை செய்தேன்", "நான் இந்தப் பணிகளை இழுத்துப்போட்டு செய்தேன்" என்றெல்லாம் எழுதுவார்கள். பல நேரங்களில் நிறுவனங்களுக்கு அது உங்களை தனித்துக் காட்டாது. காரணம் வேலைக்கு விண்ணப்பிக்கும் எல்லாருமே ஏறக்குறைய அதைத்தான் செய்திருப்பார்கள். "நான் கூகுள் சிறிலங்கா நிறுவன தொழில்நுட்பப் பிரிவில் வேலைசெய்தேன்" என்று சுயவிவரக்கோவையில் இருந்தால் அதை வைத்து உங்களை எப்படி எடை போட முடியும்? இப்படி எழுதுவதற்கு பதில், "காமாட்சி களஞ்சிய நிறுவனத்தின் மொத்த விற்பனையில் விற்பனையாளனாக என் பங்களிப்பு **40%**க்கும் அதிகமாக இருந்தது. அந்த நிறுவனத்தின் விற்பனை அணுகுமுறையில் சில புதிய உத்திகளை நான் அறிமுகப்படுத்தினேன். அவை விற்பனையை **15%** கூட்டின. அந்த உத்திகளை நிறுவனம் இன்று வரை பின்பற்றி வருகிறார்கள்" என்று எழுதினால் அது கவனத்தை ஈர்க்கும். (அந்த உத்திகள் என்ன என்று நேர்முகத் தேர்வில் கேட்டால் பதில் சொல்லத் தெரிந்திருக்கவேண்டும்!)

அதாவது நீங்கள் என்ன செய்தீர்கள் என்பது இங்கே தேவையில்லை. நீங்கள் என்னென்ன மாற்றங்களை, திறன் கொண்ட அணுகுமுறைகளை உங்கள் வேலையில் கொண்டுவந்தீர்கள் என்று எழுதுங்கள். அதனை முடிந்த அளவு அளவிடும் வகையில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது உங்கள் வேலையை எண்களுடன் கொடுக்க முயலுங்கள்.

'நான் உருவாக்கிய புதிய இணைய தளம் நிறுவனத்துக்கு அதிக அளவில் பார்வையாளர்களைக் கொண்டுவந்தது.'

VS.

'நான் உருவாக்கிய புதிய இணைய தளம் முந்தைய தளத்தைவிட **64%** அதிக பார்வையாளர்களைக் கொண்டுவந்தது.'

'நான் திட்டங்களைக் குறைவான செலவில் முடித்துக் கொடுத்தேன்.'

VS.

'நான் மேலாண்மை பார்த்த திட்டங்கள் நிறுவனத்தின் பிற திட்டங்களைவிட **24%** குறைவான செலவில் முடிக்கப்பட்டன.'

இப்படி அளவீடுகளுடன் உங்கள் வேலையை விவரிப்பது படிப்பவர்களுக்கு உங்கள் திறன் மீதுள்ள நம்பிக்கையைக் கூட்டும். நிற்க, இங்கே நீங்கள் கொடுக்கும் தரவுகள் உண்மையாக இருக்கவேண்டும். சும்மா அடித்துவிடக்கூடாது. நேர்முகத் தேர்வில் இதுபற்றி கேள்விகள் கேட்டால் நீங்கள் விளக்கமாக பதில் சொல்லும் அளவுக்கு அந்தத் தரவுகள் மேல் உண்மைத்தன்மை இருக்கவேண்டும்.

**6. பொய்மை தோற்கும்**

உங்கள் சுயவிவரக்கோவையில் பொய் சொல்லவே சொல்லாதீர்கள். நேர்முகத்தேர்வில் அவைபற்றி ஏதாவது கேள்வி கேட்டு நீங்கள் உளறி மாட்டிக்கொண்டுவிடக்கூடும். அப்படி மாட்டாமல் போனாலும் உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தை தெரிந்ததாக காட்டிக்கொண்டு வேலைக்கு சேர்ந்து அங்கே மாட்டிக்கொண்டால் அதைவிட மோசம். எனவே உங்கள் சுயவிவரக்கோவை நூறு சதவிகிதம் உண்மைத் தன்மையுடன் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

**7. வேலை தாண்டிய திறன்கள்**

உங்கள் சுயவிவரக்கோவை உங்களின் பிம்பம்தான் என்று குறிப்பிட்டேன். வேலைத் திறன்கள் தாண்டியும் உங்களுக்குத் திறமைகள் ஆர்வங்கள் இருக்கும். அவற்றையும் சுயவிவரக்கோவையில் குறிப்பிடுங்கள். நீங்கள் ஓவியம் வரைவீர்களா? வலைப்பூவில் தொடர்ந்து எழுதுகிறீர்களா? திரைக்கலை பற்றி கற்றுக்கொண்டு உலக சினிமா முதல் உள்ளூர் சினிமா வரை பிரித்து மேய்கிறீர்களா, அவற்றையும் குறிப்பிடுங்கள். இதிலும் மேலே குறிப்பிட்ட அணுகுமுறையை பின்பற்றுங்கள். எண்ணிக்கைகள், தரவுகள் அவசியம்.

'கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ந்து எழுதிவருகிறேன். **350**க்கும் அதிகமான வலைப்பூ கட்டுரைகள் எழுதி இருக்கிறேன். சுமார் **1.5** லட்சம் வார்த்தைகள் எழுதி இருப்பேன்.'

'ஐந்தாம் வகுப்பில் ஓவியப் பயிற்சி துவங்கினேன். இன்று வரை **500**க்கும் அதிகமான சொந்த ஓவியங்கள் தீட்டி இருக்கிறேன். அவற்றில் **25**க்கும் மேற்பட்டவற்றை விற்றதில் சுமார் **10** லட்சம் சம்பாதித்து இருக்கிறேன்.'

'திரைக்கலையை ரசிப்பது குறித்து யூடியூப் சானல் நடத்தி வருகிறேன். இதுவரை **75** வீடியோக்கள் பதிவேற்றி இருக்கிறேன். சராசரியாக **5000**க்கும் அதிகமான பார்வைகளை ஒவ்வொரு வீடியோவும் குவிக்கின்றன.'

இங்கும் ஒரு குறிப்பு. இவைபோல உங்கள் தனித்திறன் இருந்தால் குறிப்பிடுங்கள். பொய் வேண்டாம்.

கடைசியாக, உங்கள் சுயவிவரக்கோவையில் உங்களது தனித்த குரல் ஒலிக்கவேண்டும். அந்தக் குரல் உங்களுடையதாக அடையாளப்படுத்திக் கொள்ளும்படியாக இருக்க வேண்டும். தயாரித்து முடித்து பிரின்ட் எடுத்து பார்க்கும்போது, 'இது நான் தான்!' என்று நீங்கள் சொல்ல முடியும்படி இருக்கவேண்டும். அதுதான் உங்கள் சுயவிவிரக்கோவை. அதனை நீங்கள் தைரியமாக வேலைக்கு விண்ணப்பிக்க அனுப்பலாம். இப்படிப்பட்ட தனித்துவ சுயவிவரக்கோவை உங்களுக்கு அந்த வேலை கிடைக்கும் சாத்தியக்கூறைப் பற்பல மடங்கு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்: சமூக விலங்கு பெண்: குடும்ப விலங்கு

பெண்ணுக்கு ஊரில் சில மனி தர்கள் பாராட்டுவதைவிட, மாமியார் அல்லது மச்சாள்மார் பாராட்டுவது பெரும் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. குடும்ப உறவுகளுக்குள் தன்னு டைய பிடியையும் அதிகாரத்தையும் இறுக்கமாக்கிக்கொள்வதே அவளுடைய முதன்மையான தேவையாகிறது


அராத்து

ஆண் - பெண் உறவானது, மகிழ்ச்சியானதாக அமையவேண்டும் என்றால், இரு தரப்புகளும் சில சுயபரிசீலனைகளுக்கு உட்படுத்திக்கொள்வது முக்கியம். மனித இனம் எப்போதும் சமூக விலங்கு குணத்தையே இயற்கையாகக் கொண்டது. கொஞ்சம்போல அது குடும்ப விலங்கு குணத்தையும் கொண்டிருக்கும். ஆனால், இன்று ஆண் - பெண் இடையே இந்த குணம் பெரும் மாறுபாட்டைக் கொண்டிருக்கிறது. இதுவும் ஆண் - பெண் உறவுச் சிக்கலில் பெரும் பங்கு வகிக்கிறது.

எப்படி? ஆண் பெரிய அளவில் சமூக விலங்காகவும் பெண் பெரிய அளவில் குடும்ப விலங்காகவும் நிற்கிறார்கள். பெண்ணுமே சமூக விலங்காக இருப்பவள்தான். திருமணமான உடனே குடும்ப விலங்காக மாறி விடுகிறாள்.

### அங்கீகாரத்திலிருந்து நாம் தொடங்குவோம்

ஆண் பெண் இருவருமே அங்கீகாரத்துக்கும், பாராட்டுகளுக்கும் ஏங்குபவர்களாகத்தான் இருக்கிறார்கள். இதில் கொஞ்சம் கொஞ்சமாக ஆண் அப்படியே சமூக அங்கீகாரம் சார்ந்து செல்ல, பெண்கள் மட்டும் தங்களுக்கான சமூக அங்கீகாரம், பரந்துபட்ட அங்கீகாரம் போன்ற ஆசைகளை விட்டு, குடும்பத்திற்குள் அங்கீகாரம் கிடைத்தால்போதும் என்று தங்களைக் குறுக்கிக்கொள்கிறார்கள்.



உங்கள் அக்கம்பக்கத்தில் கவனித்துப் பார்த்தால் இதை நன்கு உணர முடியும். திருமணமான ஒரு பெண்ணுக்கு சமூகத்தில் பரந்துபட்டு கிடைக்கும் அங்கீகாரம் தரும் மகிழ்ச்சியைவிட, குடும்ப அளவில் குடும்ப உறுப்பினர்கள் மூலம் கிடைக்கும் பாராட்டு தரும் மகிழ்ச்சியில் அவள் நிறைவடைவதைக் காணமுடியும். சமூக உறவுத் தளங்களில் இருந்து தன்னை உதறிக்கொண்டு குடும்ப உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் மும்முரமாகிறாள்.

இதனால்தான் பெண்ணுக்கு ஊரில் சில மனிதர்கள் பாராட்டுவதைவிட, மாமியார் அல்லது மச்சாள்மார் பாராட்டுவது பெரும் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. குடும்ப உறவுகளுக்குள் தன்னுடைய பிடியையும் அதிகாரத்தையும் இறுக்கமாக்கிக்கொள்வதே அவளுடைய முதன்மையான தேவையாகிறது.

அதேநேரத்தில், ஆணை எடுத்துக்கொண்டால் அவனுக்குக் குடும்பமும் குடும்ப உறவுகளும் மெல்ல மெல்ல சிறுத்துப்போகின்றன. அவனுக்குக் குடும்பத்திற்குள் கிடைக்கும் அதிகாரமும் குடும்ப உறவுகளுக்குள் கிடைக்கும் அதிகாரமும் முக்கியத்துவம் குறைந்ததாகத் தெரிகிறது. அதற்கு அவன் பெரிதாக ஆசைப்படுவதும் இல்லை.

குடும்ப உறவுகளுக்குள் நவீன ஆணின் நடவடிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் கொஞ்சம் அவதானித்துப் பாருங்களேன். அவன் குடும்ப உறவினர்களையே நண்பர்களாகப் பாவித்துதான் பழகுவான். அதேசமயம், நவீன பெண்களையும்கூட எடுத்துக்கொண்டால் நட்பு வட்டாரத்தையே அவர்கள் உறவு வட்டமாகப் பாவித்துக் கொண்டு பழகிவருவது புரியும்.

பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். மாமனாரும் மருமகனும் நண்பர்கள் போலத்தான் பழகுவார்கள். இருவருக்குள்ளும் ஒத்துவரவில்லை எனில் பெரிதாகப் பழகவே மாட்டார்கள். இரு வேறு துறைகளைச் சார்ந்த உயரதிகாரிகள் பழகிக்கொள்வதுபோல மேம்போக்காக பழகிக்கொள்வார்கள்.

அதேதான் மாமன் மச்சான் உறவிலும். இறங்கினால் அடிடா புடிடா என்று நெருங்கிய நண்பர்களைப் போல உறவாடி கொள்வதையும், ஒத்துவரவில்லை என்றால் வெளிநாட்டு தூதுவர்களைப் போல மேம்போக்காக பழகிக்கொள்வதையும் பார்க்க முடியும்.

திருமணத்திற்குப் பின் நவீன கணவன் தன் மனைவியை அவள் விருப்பத்திற்கு விட்டுவிட்டு அவள் உலகில் வாழ அனுமதித்துவிடுகிறான். பரந்துபட்ட சமூக அரங்கிற்குள் அவளை வரச் சொல்லி வற்புறுத்துவது இல்லை. ஆனால், நவீன மனைவி அவனுக்கு ஒத்துவராத - முற்றிலும் பிடிக்காத குடும்ப உறவுகள் என்ற சுழலுக்குள் கொண்டுவர துடியாக துடித்துக்கொண்டே இருக்கிறாள்.

இதில் ஒரு நுட்பமும் இருக்கிறது. அது ஒன்றும் பெரிய இரகசியம் எல்லாம் இல்லை. பெண்களுக்கும் இது தெரிந்தே இருக்கிறது. ஒரே பெண் ஒரு தாயாக நடந்துகொள்ளும்போது, 'ஆண் இப்படித்தான்' என்று தன் மகனிடம் புரிந்து நடக்கிறாள் இதைப் போன்ற குடும்ப உறவு விடயங்களில் அவனைத் தொந்தரவுசெய்து ஈடுபடுத்த முற்படுவதில்லை. ஆனால், மனைவி என்ற பாத்திரத்தில் இருக்கும்போது அவளே அவனுக்குப் பிடிக்காத, ஒத்துவராத இந்த விடயத்தில் தொடர் ந்து அவனைத் தொந்தரவுப்படுத்திக் கொண்டே இருக்கிறாள்.

அவளுடைய விருப்பத்திற்காக குடும்ப உறவுகளைப் பேணும் வேலையில் அவன் இறங்கினாலும் அதிலும் எக்கச்சக்கக் குறைகளைக் கண்டுபிடித்து எரிச்சலையும், வெறியையும் உண்டாக்கிக்கொண்டிருப்பவளாகவே இருக்கிறாள்.

அதிலும் அவளுடைய குடும்ப உறுப்பினர்கள் எல்லாம் என்னமோ வேற்றுகிரகத்தில் இருந்து வந்தவர்கள்போலவும் அல்லது சிறப்பாக மரபணு வடிவமைப்பில் உருவாக்கியவர்கள் போலவும் இருக்கும் அவளுடைய செயல்பாடு.

அவளுடைய பெரியப்பாவிடம் எப்படிப் பேச வேண்டும் என்று வகுப்பெடுப்பாள். அவளுடைய மாமாவிடம் ஒருவிதமாகப் பேசவேண்டும், அவளுடைய தந்தையிடம் ஒரு விசித்திரமான நெறி [illegible] தொடங்கி அவர்கள் குடும்ப உறுப்பினர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் அவள் மிகப் பெரிய விதிமுறைக் கையேடுகளைத் தயாரிக்க மட்டுமல்லாமல் தொடர் பயிற்சி வகுப்பு எடுக்கவும் தொடங்கிவிடுகிறாள்.

பெண்ணின் உறவினர்களில் ஒருவன் படுமக்காக இருப்பான். அவன் வாய்க்கு வந்ததை எல்லாம் உளறிக்கொட்டிக்கொண்டு நம்மைத் தொந்தரவு செய்துகொண்டேயிருப்பான். நாம் இவளுக்காக அவனுடைய சாட்டை அடிகளைப் பொறுத்துக்கொண்டு அவனுக்கு ஒரு உயர்ரக மேன்மகன்போன்று பதிலளித்துக்கொண்டிருக்கவேண்டும். அவனுடைய அராஜக அத்துமீறல்களை எல்லாம் விட்டுவிட்டு இவள், நாம் அந்த மகானிடம் முழுமையாகப் பேசிக்கொண்டு இருப்பதில் மிகப் பெரிய குறையைக் கண்டுபிடித்து அந்த நாளையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிடுவாள்.

இதை வைத்துப் பெண்களைப் பிறந்த வீட்டு நலனில் அக்கறை கொண்டவர்கள் அல்லது பிறந்த வீட்டு உறவினர்கள் மேல் மிகப் பெரும் மரியாதை வைத்திருப்பவர்கள் என்றும் எடுத்துக்கொள்ளமுடியாது.

**சில உறவுகளில் கவனித்திருப்பீர்கள்...** மாமனார் மருமகன் அல்லது மாமன் மச்சான் போன்ற இருவருக்கிடையே இயற்கையாகவே நிறையவற்றில் ஒத்துப்போகும். இப்படி இருவரும் நெருக்கமாகப் பழகத் தொடங்கினால், இவளுக்குப் பேரானந்தமாகத்தானே இருக்கவேண்டும்? ஆனால் அதுதான் இல்லை.

இவளுக்குப் படபடவென ஆகிவிடும். நன்றாக இருக்கும் இருவர் உறவுகுள்ளும் வெட்டியாக தலையை நுழைத்து ஏதேனும் குழப்பம் விளைவிக்கப் பார்ப்பாள். "என்னன்டே தெரியயேல்ல அப்படித்தான் செய்யவேணும் போல இருக்கு...!" என்று சொல்லும் தோழிகள் எனக்கு உண்டு.

குடும்ப உறவுகளுக்குள் அரசியல் செய்வது அவளுக்குத் தேவைப்படுகிறது இந்தத் தேவை எந்த ஒரு விளைவையும் முடிவையும் எதிர்பார்த்து அல்ல குடும்ப உறவுக்குள் அரசியல் செய்வது அவளுடைய அன்றாடச் செயல்களில் ஒன்றாக இருக்கிறது.

குடும்பத்திற்கு உள்ளான உறவுகளை ஒன்றுபடுத்துவதில் எப்படி அவள் தேர்ந்தவளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்...**

இருக்கிறாளோ அப்படியே குலைப்பதிலும் அவள் கை தேர்ந்தவளாக இருக்கிறாள். இதற்கான காரணம் என்ன? தெளிவான விடை எனக்குத் தெரியவில்லை. ஓரளவு யோசித்துப் பார்த்தால் குடும்ப உறவுகள் அனைத்தையும் தன் பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அவளது ஆசையாக இருக்குமோ என்று தோன்றுகிறது. யாரும் தன்னை மீறிப் போய்விடக்கூடாது என்ற பாதுகாப்பு உணர்வும் காரணமாக இருக்கலாம்.

முன்பெல்லாம் சிறுவயதில் திருமணங்கள் நடந்தேறின. அப்போது உருவான ஆண் பெண் உறவுச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதில் குடும்பங்கள் ஒரு முக்கியப் பங்காற்றி வந்தன.

இப்போது ஓரளவு விவரமான வயதுக்குப் பிறகு நடக்கும் திருமணங்களில் ஆண் பெண் உறவுச் சிக்கல்கள் ஏற்படுவதற்குக் குடும்பத்தையும் குடும்ப உறுப்பினர்களையும் ஒரு முக்கிய காரணியாக மாற்றி வைத்திருப்பதில் பெண்களின் பங்கு அளப்பரியது.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் காதல் என்ற உணர்விற்கே பெண்கள் எதிரிகளோ இரண்டு நாட்கள் தொடர்ந்தாற்போல் எந்தச் சண்டை சச்சரவும் இல்லாமல் காதல் வாழ்வு சென்றுகொண்டிருந்தால், பெண்களுக்கு ஏதோ குறைவதுபோல தோன்றிவிடுமோ என்று எண்ணத் தோன்றும் அளவுக்குப் பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்கிறார்கள்.

ஒரு சதம் பெறாத உப்புச் சப்பில்லாத ஏதோ ஒரு பிரச்சினையை உருவாக்கி அதை மிகப் பெரிய சண்டையாக வளர்த்தெடுத்து ஒன்று தான் துன்பப்படுவது அல்லது அடுத்தவரை துன்பத்தில் தள்ளுவது என்று இறங்கிவிடுகிறார்கள். இதற்குக் குடும்பம் சார்ந்து தங்கள் வரையறைகளைச் சுருக்கிக்கொள்வது அல்லது அப்படி தாம் சுருக்கப்படுவதை அனுமதிப்பதே முக்கியமான காரணம் என்பதை அவர்கள் உணருவதில்லை.

எந்த அளவுக்குக் குடும்பம் எனும் அமைப்பிலிருந்து வெளியே ஒரு பெண் சிந்திக்கிறாளோ அந்த அளவிற்கு அவர்கள் மகிழ்ச்சியானவளாக மாறுகிறாள். ஆணும் அப்படித்தான்.

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பிரச்சினைகள் வரலாம் - வரத்தான் செய்யும். அது என்ன விதமான பிரச்சினை என்பதில்தான் இருவருக்குள்ளும் பெருத்த வேறுபாடுகள் நிலவுகின்றன.

தனிப்பட்ட பழக்கவழக்கங்கள், தன்னிடம் ஒழுங்காக நடந்துகொள்ளாதது, தன்னை விட்டுவிட்டு வேறு ஒரு உறவுக்குச் செல்வது போன்ற பிரச்சினைகளால் ஆண் பெண்ணுக்கு இடையே சண்டையோ சிக்கல்கள் வந்தால் அது புரிந்துகொள்ளக் கூடியது; அதுதான் இயல்பானது. ஆனால், அதை எப்படி அணுகுகிறோம் என்பது முக்கியமானது.

எனக்குப் பல சமயங்களில் நண்பர்கள் மத்தியில் ஏற்படும் சண்டைகள் தலையைச் சுற்றி அடிக்கும். அவன் உண்மையில் இவள் மேல் அதிக பட்ச காதலோடு இருந்துகொண்டிருப்பான். அதைத் தவிர அவனுக்கு வேறு ஒன்றும் தெரியாது. ஆனாலும், இவள் அவன் மேல் அடுக்கும் புகார்களை அடுக்குவாள். "வரவர பெண்கள் காதலுக்கு முற்றிலும் எதிரானவர்களாக மாறிக்கொண்டிருக்கிறீர்கள். ஒரு சில நாட்கள் அல்லது ஒரு சில காலம் வரைதான் உங்களால் காதலில் அனுபவித்து, திளைத்திருக்க முடிகிறது. காதலனும் காதலும் எந்தச் சிக்கலும் இல்லாமல் அப்படியே நீடித்தால் உங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. மூச்சு முட்டுகிறது. ஏதேனும் சிக்கல்கள், பிரச்சினைகளை மெனக்கெட்டு உருவாக்கிக் கொண்டு ஒரு குருதிச் சகதியான வாழ்க்கைக்கு உள்ளேயே இருக்க உங்களை அறியாமலேயே விருப்பப்படுகிறீர்கள்" என்றுகூட நான் சில தோழிகளிடம் சொல்வது உண்டு.

யாரையாவது, கைக்குள் அடக்கவேண்டும் என்று எப்போது நினைக்கிறோமோ அப்போது எதிர்த்தரப்பின் சுதந்திரத்தை மட்டும் நாம் முடக்குவது இல்லை, நம்முடைய சுதந்திரத்தையும் முடக்கிக்கொள்கிறோம். முந்தைய காலத்தில் ஆண் இப்படி தன் மகிழ்ச்சியை அதிகாரத்தால் இழந்து நின்றான். இப்போது பெண் நிற்கிறாள். தேவை இல்லை. சுதந்திரமாக இருக்கலாம். சமூக விலங்குகள் ஆகவே பறக்கலாம். இரு தரப்புக்கும் அது மகிழ்ச்சி தரும்.

(பேசுவோம்...)

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## ஆட்டோப் பக்திமான்களிடத்தே பல திருகுதாளங்கள்

**சிறீரஞ்சன் - கோப்பாய்**

யாழ்ப்பாண முச்சக்கர வண்டிகள் பலவற்றின் பின்புறமாக ஏதாவது ஒரு கடவுள் துணை என்று விளம்பரப்படுத்தியிருப்பதைக் காண முடியும். இவ்வாறான ஆட்டோ பக்திமான்களில் பலரிடம் பல்வேறுபட்ட சுத்துமாத்துகள் இருக்கின்றன. இவ்வாறான முச்சக்கர வண்டிகளை மறித்து ஏறும் அல்லது வாடகைக்கு அமர்த்துகின்ற பயணிகள் கடவுளின் துணையோடு ஓடும் இந்தச் சாரதி நியாயமாக நடந்துகொள்வார் என்று நினைக்க அந்தச் சாரதியோ ஏனைய முச்சக்கர வண்டிச் சாரதிகளைவிட அதிக பணத்தை அறவிடுபவராக இருந்துவிடுவார். இதனால் பலர் பலத்த ஏமாற்றத்துக்கு உள்ளாகின்றனர். அத்தோடு ஏகப்பட்ட பொய்கள், புரளிகள் மற்றும் மிரட்டும் தொனியிலான பேச்சு என இந்தச் சாரதிகள் பல தீமைகளுள்ளவர்களாக இருக்கின்றனர்.

வேறு எங்கோ தூரத்தில் நின்றுகொண்டு அருகில் வந்துவிட்டேன் என்று கைபேசியில் அழைப்பெடுக்கின்ற மறு தரப்பினருக்குப் பெய் சொல்கின்றனர். முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தி இறங்குமிடத்தையும் சொல்லி அதில் ஏறும்போதே அந்தப் பயணத்துக்கு எவ்வளவு பணம் அறவிடுவீர்கள் என்று கேட்டால், 'நான் உங்களிட்டக் காசு கேட்டனானே...? தாறதைத் தாங்கோ' என்று அவர்கள் பதுமையாக - அவர்கள் நம்பத்தக்கதாகக் கூறி ஏற்றிவிட்டு இறங்கும்போது அதிக பணத்தைக் கேட்கிறார்கள். 200 ரூபா வாங்கும் சவாரி என்றால் அதற்கு 300 ரூபாவுக்கு மேல் கேட்பார்கள். அது பற்றிப் பயணிகள் மேலும் ஏதாவது கேட்டால் என்ன விளையாடுகிறீர்களா? என்று நாட்டாமை காட்டும் பண்பும் இந்தக் கடவுள் துணைக்காரர்களிடம் அதிகம் உண்டு.

அவர்களின் இயல்பான சுத்துமாத்தை மறைப்பதற்காகவே கடவுளின் பெயரை வைத்துத் தம்மை மறைத்துக்கொள்கின்றனரோ என்று தோன்றுகின்றது. நல்லூரான் துணை, நகபூசணி அம்மன் துணை, ஐயனார் துணை, அம்மாச்சி துணை என்றெல்லாம் தமது ஓட்டோக்களுக்குப் பெயர் சூட்டியிருப்பதால் இந்தக் கடவுளரை வணங்கும் பக்தர்கள் அட இது நம்ம முச்சக்கரவண்டி என மனதுக்குள் குதூகலிக்கின்றனர். அந்த ஒரு நொடிப் பொழுதின் நம்பிக்கையை முச்சக்கரவண்டிச் சாரதிகள் தமது முதலீடாக்கி விடுகின்றனர்.

அதேவேளை இந்தச் சாரதிகள் கோவில் நூல்களைக் கை நிறையக் கட்டிக்கொண்டு, குங்குமப்பொட்டு, வாயில் வெற்றிலை எனத் தம்மைக் கடவுளின் பிள்ளைகளாகவும் காட்டி வருகின்றனர். இதை மிகச் சாதாரணமாக விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், ஓரிடத்துக்குப் போவதற்கு எவ்வளவு என்று கேட்டாலேபோதும், அதற்குரிய தொகையைச் சொல்லாமல் மழுப்புவார்கள். வற்புறுத்திக் கேட்டால் மற்றவர்களைவிட அதிக விலை சொல்வார்கள். போதாதற்கு முச்சக்கர வண்டிக்குள் சாமிப் படங்கள், பட்டுத்துணி, நூல், சந்தனத்தால் எழுதிய ஓம் என முச்சக்கரவண்டிக்குள் ஒரு சிறு கோவிலாகவே ஆக்கியிருப்பார்கள். இதைவிட அவர்களது கைபேசி அழைப்புச் சத்தத்தில் பக்திப் பாடல் அல்லது தேவாரம் இருக்கும். இவை அனைத்தும் பயணிப்பவர்களுக்கு நல்ல நம்பிக்கையைக் கொடுக்கும்.

> **நோயாளர்கள், வயோபர்களை ஏற்றி இறக்குவதில் இலக்கு வைத்துச் செயற்பட்டுப் பணம் கறப்பதிலும் இவர்கள் கில்லாடிகளாக இருப்பர்**





இவை எல்லாமமே சுத்துமாத்தின் அடையாளங்கள் என்பதை அவ்வாறானவர்களுடன் நெருங்கிப்பழகும்போது கண்டுபிடிக்க முடியும். இத்தகைய சாரதிகள் பல வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்குரியவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் கேட்கும் பணம் என்பதற்கு அப்பால் கடவுள் நம்பிக்கையுள்ளவர் எனச் சாரதியை எடைபோடுவதால் தொடர்ந்தும் உழைக்கும் வாய்ப்புகளை இந்தச் சாரதிகள் உருவாக்கிக் கொள்கிறார்கள். நோயாளர்கள், வயோபர்களை ஏற்றி இறக்குவதில் இலக்கு வைத்துச் செயற்பட்டுப் பணம் கறப்பதிலும் இவர்கள் கில்லாடிகளாக இருப்பர். இது ஒரு சுத்துமாத்து எனக் கண்டுபிடிப்பதற்குப் பலருக்கு நீண்ட காலம் எடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டுக்கல்லுக்குப் பூமாலை போடுறமோ?

▪ கதிரேசன் காத்தவராயன் ▪



கோயிலடிப் பக்கம் கனகாலமாப் போகேல்லை எண்டிற நினைப்பு வர அங்கை போனன். கோயில் முகப்பிலை கரிக் கரியாய் அடுப்பெரிஞ்ச அடையாளங்கள் கனக்கக் கிடந்துது. எனக்குக் குழப்பமாக் கிடந்துது... தைப்பொங்கல் முடிஞ்சுதோ எண்டு? சூரியனுக்குப் பொங்கிறதிலை சாமிக்கும் பின்னேரமாப் பொங்கிறனாங்களல்லே? அப்பிடியே யோசிச்சபடி மண்டபத்துக் குந்திலை இருப்பமெண்டு போக முருகேசர் தம்பர் கனகர் எண்டு வேறையும் ரண்டு மூண்டு பேர் அங்காலிப் பக்கம் நிலத்திலை இருக்கிறதைக் கண்டு அவடத்துக்கு போயிருந்துகொண்டன்.

"ஏன்னப்பா நீங்கள் கூட்டம் கூடுகிறியள்... கூடிக் கதைச்சுக் கலைஞ்சு போறதுதானே இப்ப பாஸன்..." எண்டு நான்தான் தொடக்கினன். "கதிரேசு அப்பிடியும் இல்லையெண்டால் பொழுது எப்பிடியப்பா போகும்?" எண்டு முருகேசர் சிரிச்சார். "ஓமோம்.. முருகேசண்ணை சொல்லுகிற மாதிரி எங்களுக்கு மட்டுமே பொழுதுபோகும்? நாங்கள் இதிலை இருந்து என்ன கதைச்சிருப்பம் எண்டு யோசிக்கிறதிலை உதாலை போய் வாற வைக்குமல்லே பொழுது போகப்போகுது?" எண்டு கனகர் சிரிச்சார்.

"கூடிக் கதைச்சவைக்குள்ளை குழப்பமாமல்லே? எங்களையும் அவையையும் ஒப்பிடலாமோ? நாங்கள் ஒருத்தனையும் ஏமாத்தேல்லையல்லே?" எண்டார் தம்பர். புது வரியம் ஆளை நல்லாத் தெளிவிச்சிருக்குப்போலை எண்டு சொல்ல வாயெடுத்துப்போட்டு சொல்லாமலே விட்டிட்டன். "தம்பு உந்தத் தெளிவு எல்லாருக்கும் இருக்குமெண்டால் ஒரு பிரச்சனையும் இராது" எண்டு மட்டும் சொன்னன். "தெளிவு வராமலே போகப் போகுது... ஆனாலென்ன காலம் கடக்கப் போகுது..." எண்டார் அதிலை இருந்த ஒராள்.

"குழப்பம் எண்டுறது எங்கடை பரம்பரைச் சொத்து கண்டியளோ...எந்த விசயத்தைத்தான் குழம்பாமல் குழப்பாமல் செய்யிற பழக்கமிருக்குது சொல்லுங்கோபாப்பம்" எண்டு நிப்பாடினார் முருகேசர். "உண்மைதான் முருகேசு... உங்கை பார் உந்தப் பொங்கின கரியை... நான் தை பிறந்திட்டுதோ எண்டு குழம்பியல்லே போனன்... உப்பிடிக் கூட்டமாப் பொங்கிறதும் மடை பரவுறதம் இஞ்சை வழக்கமில்லையில்லே?" எண்டு என்ரை குழப்பத்துக்கு விடை கிடைக்குமோ எண்டு கேட்டன்.

"கதிரேசண்ணை இஞ்சை ஆனியுத்தரப் பொங்கலுக்குத்தான் உந்த பொங்குகிற வழமையிருக்குது...ஆனால் இப்ப உது வரிசப் பொங்கல்" எண்டு விளக்கம் சொன்னார் கனகர். "என்னடாப்பா கனகு இதுகளெல்லாம் புதிசாயல்லே நடக்குது..." எண்டு முருகேசர் கேட்டார். அதுக்கு தம்பர் "அது இங்கிலிஸ் வருசப்பிறப்புப் பிறப்புக்கல்லே பொங்கியிருக்கினம்..." எண்டார்.

"அட அப்ப கிறிஸ்தவ வருசத்துக்கும் இந்துக் கோயில்லை பொங்கிறம் எண்டிறியோ?" எண்டார் முருகேசர். "ஓஓ.. முருகேசண்ணை அப்பிடித்தான் நடந்திருக்குது... என்ரை மேளும் பொங்கினவள்..." எண்டார் தம்பர். "என்னடாப்பா அப்ப உதுகளை எங்கடை சமயத் தலைவர்மார் கண்டு கொள்ளுறதில்லையோ? மதம் மாத்திறாங்கள் மாட்டை வெட்டிறாங்கள் சனத்துக்கு காசு குடுக்கிறாங்கள் எண்டெல்லாம் கூப்பாடு போடுகிறவைக்கு இப்பிடிப் பொங்கிறது சரியெண்டுபடுகுதோ?" எண்டு முருகேசர் உண்மையாயே குழம்பித்தான் போனார்.

"என்ன முருகேசண்ணை கூட்டமெண்டு நாலுபேர் சேந்தால் கூடிக்கதைச்சு அது முடிய ஒரு அறிக்கை விடுகிறது வழக்கமல்லே? சைவத் தலைவர்மாரும் அப்பிடித்தான்..." எண்டார் கனகர். "உதுகளை விட சைவரோ இந்துவோ எண்டிறதிலையே சரியானதெளிவில்லை. அதுக்குள்ளை மற்றச் சமயங்களை குறை சொல்லுறதே பிழைப்பாப்போச்சுது...." எண்டார் அதிலையிருந்த மற்றொராள்.

"ஓமோம்... உந்த விசயம் சரிதான்... அதுகளை மட்டும்தான் சொல்லிக்கொண்டே இருக்கினம். பாக்கவேண்டின கனக்க விசயங்களை பாக்கிறேல்லை... அதிலை ஒண்டுதான் இங்கிலிஸகாறனின்ரை கிறிஸ்தவ வருசத்தை கோயிலைதான் கொண்டாட வேணுமோ? வருசமோ சமயமோ என்னவெண்டாலும் மனிசரெண்ட முறையிலை கொண்டாடுகிறது பிழையில்லை... அதுக்காக கோயிலிலை பொங்கிறதை என்னெண்டு சொல்லுகிறது?" எண்டார் கனகர்.

"சமயமும் ஒண்டுதான்... கடவுளும் ஒண்டுதான்... நாங்கள்தான் வேறை வேறை... பூசையாகுது" எண்டு எழும்பிப் போட்டன்.

---

# கிரிக்கெட் வீராங்கனையாக அனுஷ்கா




இந்தியக் கிரிக்கெட்டின் முன்னாள் வீராங்கனையான ஜூலன் கோஸ்வாமியின் கதையான 'சக்தா எக்ஸ்பிரஸ்' படத்தில் அனுஷ்கா சர்மா நடிக்கிறார். இப்படத்தின் டீசரையும் அவர் பகிர்ந்துள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீராங்கனையும், இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனுமாக இருந்தவர் ஜூலன் கோஸ்வாமி. இவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாகி வரும் படம் 'சக்தா எக்ஸ்பிரஸ்'. இப்படத்தில் ஜூலன் கோஸ்வாமி கதாபாத்திரத்தில் அனுஷ்கா சர்மா நடிக்கிறார். ப்ரோசித் ராய் இயக்கும் இப்படத்துக்கு அபிஷேக் பானர்ஜி கதை, திரைக்கதை எழுதுகிறார்.

இப்படத்தின் டீசரை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள அனுஷ்கா ஷர்மா அத்துடன் ஒரு பதிவையும் எழுதியுள்ளார். அதில் அவர், "இது மிகவும் தனிச்சிறப்பு மிக்க ஒரு திரைப்படம். காரணம், இது ஒரு மிகப் பெரிய தியாகத்தின் கதை. முன்னாள் இந்திய கேப்டன் ஜூலன் கோஸ்வாமியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட 'சக்தா எக்ஸ்பிரஸ்' திரைப்படம், மகளிர் கிரிக்கெட் உலகின் கண்களை திறக்கும். ஜூலன் ஒரு கிரிக்கெட் வீரராகவும், உலக அரங்கில் தனது நாட்டை பெருமைப் படுத்தவும் முடிவு செய்த காலகட்டம் என்பது பெண்கள் விளையாட நினைப்பதற்குக்கூட மிகவும் கடினமானதாக இருந்தது. இந்த திரைப்படம் ஜூலனின் வாழ்க்கை மற்றும் மகளிர் கிரிக்கெட்டை வடிவமைத்த பல நிகழ்வுகளின் வியத்தகு நினைவுகூரலாக இருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அனுஷ்கா சர்மா இறுதியாக 2018ஆம் ஆண்டு வெளியான 'ஜீரோ' படத்தின் ஷாரூக் கானுக்கு ஜோடியாக நடித்திருந்தார். அப்படம் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் பெரும் தோல்வியைத் தழுவியது. அதன் பிறகு அனுஷ்காவுக்கு குழந்தை பிறந்ததால் நடிப்பிலிருந்து விலகி இருந்தார். தற்போது மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு அனுஷ்கா நடிக்கும் திரைப் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



▪ சோபியா சமாட்டர்
▪ தமிழில் சுபத்திரா

# பராமரிப்பாளர்

**கடந்த வார தொடர்ச்சி...**

அப்பெண் ஒரு உணவுவிடுதிக்குச் சென்றாள். இருளில் அமர்ந்தாள். அறையின் எதோ ஒரு இடத்தில் ஒரு விலங்கு சிறிய ஒலியெழுப்பிக்கொண்டே இருந்தது.

மீண்டும் ரபி- 'கண்ணால் மட்டும் பார்க்கப்பட்ட காட்சி அல்ல அது. என்றென்றைக்குமாக ஒட்டுமொத்தமாக அது உணரப்பட்டது.'

நான் நினைத்து ஏக்கமடைகிற சில விஷயங்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவற்றைப் பற்றி யோசிக்கவும்கூட என்னால் முடியாதுதான் என்றாலும், எப்போதேனும், ஒரு மீன்கொத்திப் பறவையின் குரலை என்னால் நினைவுகூர முடியும். அக்குரல் இரண்டு வகையிலானது. யாரோ ஒருமுறை என்னிடம் சொன்னார்கள்- அவற்றில் ஒன்று, 'ஒரு வெறிபிடித்த பெண்ணின் சிரிப்பை ஒத்தது'. மற்றொன்று, 'இவ்வுலகிலேயே துக்கமான ஒலி'. இதையும் அதே நபர்தான் சொன்னார். காடுகளைப் பின்னணியாகக்கொண்டு எடுக்கப்படும் படங்களில், வித்தியாசமான ஒலி தேவைப்படுகிற போது, மீன்கொத்திப் பறவையின் குரல்தான் அதிகமும் பயன்படுத்தப்படுகிறது. அது பொருத்தமற்று உபயோகப்படுத்தப்பட்டாலும், அதை அறிந்தவர் எவராலும் அதனை உணர்ந்துகொள்ள முடியும்.

சில சமயங்களில் எனக்கு அப்படித் தோன்றியிருக்கிறது. தவறான இடத்தில் செருகப்பட்ட ஒரு குரல். வெறிபிடித்த ஒரு பெண். முட்டாள்தனமானது. உலகிலேயே சோகமானது.

வனப்பகுதியின் மத்தியில் அமைந்துள்ள எனது இந்தப் பெரிய கண்ணாடிக்கூடானது, குறைந்தபட்சம், கூச்சலிடுவதற்கு ஒரு மகத்தான இடம்தான்.

பராமரிப்பாளர்கள்தான் இவ்வுலகின் ஆன்மாக்களுக்குப் பொறுப்பேற்றிருக்கிற புதிய மதகுருக்கள் என என் காயமுற்ற தோழிக்கு ஒரு கருத்து இருக்கிறது. அதுதான் இதன் உச்சபட்ச முரண்.

ஜே. ராபர்ட் ஓபன்ஹெய்மர்- 'இயற்பியலாளர்கள் பாவம் பற்றி அறிந்திருக்கிறார்கள் இந்த அறிதலை அவர்களால் உதிர்க்க முடியாது.'

என்றாலும், என்னால் என்னை ஒரு மதகுருவாக நினைக்க முடியாவிட்டாலும், நான் குறைந்தபட்சம் ஒரு சாது. ஒரு பணிப்பெண். ஒரு நோயுற்ற தோழியின் படுக்கைக்கருகே அமர்ந்திருப்பது போலத்தான் நான் பூமியுடன் அமர்ந்திருக்கிறேன். நான் இப்போது ரொம்பவும் மென்மையாக இருக்கிறேன், புவியின் வலியை என் உடல் முழுவதும் என்னால் உணரமுடிகிறது. அடிக்கடி நான் என் கன்னம் தரையில் படும்படி படுத்துக்கொண்டு அழுகிறேன். இப்போதெல்லாம் எனக்கு அந்த இன்னொரு உலகத்தின் மீதான விருப்பமே இல்லாமல் போய்விட்டது. அவ்விருப்பத்தைப் புரிந்துகொள்ளவும்கூட முடிவதில்லை. அந்த வேட்கைதான் நிறைய அற்புதங்களையும் சாத்தான்களையும் தோற்றுவிக்கிறது, அதுதான் நஞ்சூட்டவும் பரிசுத்தப்படுத்தவும் செய்கிறது. இக்கதையில் இருக்கிற பெண்ணைப் போல, வேறு எந்த உலகமும் இல்லை என்பதை நானும் புரிந்துகொள்கிறேன். நாம் உருவாக்கிய இந்த ஒரு உலகம் மட்டும்தான் இருக்கிறது.

கருப்பராகிய மோசே- 'உனது அறைக்குள் அமர்ந்திரு, உனது அறை உனக்குக் கற்றுத் தரும்.'

ஒரு குழந்தை கண்ணாடியை நோக்கி ஓடி வருகிறாள். பாதுகாப்பான இடைவெளியில் நின்றபடி நீலமும் வெளிர்சிவப்புமான மேகங்கள் வரையப்பட்ட ஒரு சித்திரத்தை உயர்த்திக்காட்டுகிறாள். இப்படத்தில் என்ன இருக்கிறது? ஒரு ஸ்பூன் முழுக்க ஐஸ்கிரீமுடனான பிற்பகல் வாசிப்பாய் இருக்கலாம் அது. அல்லது, உறங்கும்முன் உலகுடன் நிகழ்த்துகிற விவாதமாய் இருக்கலாம். கண்ணாடிக்கு இப்புறம் இருக்கும் பெண், குழப்பங்கள் நிறைந்த தினசரி செயல்பாடுகளாலான உலகிலிருந்து பிரித்து வைக்கப்பட்டிருக்கிறாள். குழந்தை காட்டிய சித்திரம்தான் அவளுக்கு அந்த உலகின் மேற்பரப்பு. அக்காகிதம் குழந்தையின் வியர்வையினால் துவண்டிருக்கிறது. அந்த வேர்வை நீர், சர்க்கரை, உப்புக்கள், அமோனியா, தாமிரம் இரும்பு ஈயம் உள்ளிட்ட பிற தாதுக்களாலும் ஆகியிருக்கிறது.

**பராமரிப்பாளராக ஆவதற்கு முன்பு நான் பனியை நேசித்தேன். எனது சுற்றுப் புறத்தை ஐரோப்பிய நகரம் போலத் தோன்றச் செய்த மழைக்கால ஜன்னல்களை நேசித்தேன்.**

குழந்தையின் சுவாசம் சற்றே நச்சுத்தன்மை கொண்டிருக்கலாம். அப்பெண் அதை ஆராயவில்லை அவளால் தன் குழந்தையின் உடலை ஆராய முடியாது. 'நான் உன்னை நேசிக்கிறேன்' எனக் குரல் எழுப்புகிறது குழந்தை. அவளது கண்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. இது அவள் தன் அம்மாவைப் பார்வையிடும் வழக்க மான வருகைதான் அதன்பிறகு அவள் குளத்திற்குச் செல்வாள்.


அப்பெண்ணின் காயமுற்ற தோழி கண்ணாடிக்கு மறுபுறமிருந்து சிரிக்கிறாள். வாக்களித்தபடி குழந்தையைக் குளத்திற்கு அழைத்துச்செல்லும் முன்பு, சில வலிமிக்க அழகான சைகைகளை மெதுவாகக் கைகளால் செய்துகாட்டுகிறாள். குழந்தையின் படத்தையும் ஒரு புத்தகத்தையும் கடத்தும் பெட்டியில் வைக்கிறாள். அது, பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த செருப்பு வியாபாரியான ஜேக்கப் பொஹிமே எழுதிய அரோரா புத்தகம். அவர் இறைமையின் வடிவத்தை ஈயப்பாத்திரத்தில் (PEWTER DISH) பிரதிபலித்த ஒளியின் வழியாகக் கண்டார். அரோராவைப் பற்றிச் சொல்லுகையில் மாதாகோயில் மணியக்காரர் க்ரிகோரியஸ் ரிச்டர் பின்வருமாறு எழுதுகிறார். 'இப்புத்தகத்தில் எவ்வளவு வரிகள் இருக்கின்றனவோ அவ்வளவு தெய்வநிந்தனை இருக்கிறது செருப்புத் தயாரிப்பவனின் கீல் வாசனையையும் அருவருப்பையும் அது கொண்டிருக் கிறது'.



'பாருங்கள்', பொஹீம் எழுது கிறார், 'மனித உடலில் பித்தப்பை இருக்கிறது, அது விஷம்தான். ஆனால் அது இல்லாமல் மனி தனால் வாழ முடியாது உருவமற்ற ஆன்மாவினைச் செயல் படுவதாகவும் மகிழ்வதாகவும் வெற்றியடைவதாகவும் சிரிப்பதாகவும் அதுதான் வைத்திருக்கிறது. ஏனென்றால் அதுதான் மகிழ்ச்சியின் ஆதாரம்.'

பராமரிப்பாளராக ஆவதற்கு முன்பு நான் பனியை நேசித்தேன். எனது சுற்றுப் புறத்தை ஐரோப்பிய நகரம் போலத் தோன்றச் செய்த மழைக்கால ஜன்னல்களை நேசித்தேன். விளம்பர நடிகைகளின் படங்களை பத்திரிகை களிலிருந்து கத்தரித்து வண்ணங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தி நோட் டில் ஒட்டிவைத்திருக்கிறேன். அதிலிருந்த நீல வண்ணக் காட்சிகள் இரவில் நான் மேற்கொள்கிற இரயில் பயணங்கள் பற்றியும் மஞ்சள் வண்ணக் காட்சிகள் இடைக்காலப் பாலங்கள் பற்றியும் சிந்திக்கச் செய்தன. அடிக்கடி நான் இரண்டாம் நிலைக் கடைகளிலிருந்து ஆடைகள் வாங்கி அவற்றைத் துவைக்காமல் அணிந்து கொள்வேன். அப்போதுதானே என்னால் இன்னொருவர் போல உணரவும் கமழவும் முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாயாட்டு

சினிமா சினிமா

2021இல் வெளியாகிக் கவனம் ஈர்த்த மலையாளத் திரைப்படங்களில் ஒன்று 'நாயாட்டு'. வெளியான சில நாள்களிலேயே வரவேற்பைப் பெற்றது. அது பேசும் அரசியலால் பரவலாக விமர்சிக்கப்பட்டது.

மார்ட்டின் பிரபாகட் இயக்கத்தில் ஜோஜு ஜார்ஜ், குஞ்சாக்கோ போபன், நிமிஷா சஜயன் ஆகியோர் நடிப்பில் வெளிவந்த இந்தப் படம், அரசியலுக்கும் அதிகாரத்துக்கும் இடையிலான சூதுவாதுகளுக்குள் சிக்கித் தவிக்கின்ற மனிதர்களின் வாழ்க்கையைத் திரைப்படுத்துகிறது.

தமிழில் வேட்டை என்று இந்தப் படத்தின் தலைப்பை மொழியாக்கம் செய்கிறார்கள். காவல்துறையைச் சேர்ந்த மூவர், காவல்துறையினராலேயே வேட்டையாடப்படும் நிலையை யதார்த்தத்துடன் பேசுகிறது படம்.

**கதை**

பெண் காவலரான சுனிதா (நிமிஷா சஜயன்), தன்னைத் தொந்தரவு செய்யும் உறவுக்கார இளைஞன் ஒருவனைக் காவல் நிலையத்துக்குக் கொண்டு வருகிறார். அந்த இளைஞனுக்கும், புதிதாகக் காவல் துறையில் சேர்ந்திருக்கும் பிரவீன் (குஞ்சாக்கோ போபன்), மூத்த அதிகாரி மணியன் (ஜோஜு ஜார்ஜ்) ஆகியோருக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. இதனால், காவல் நிலையச் சிறையில் அடைக்கப்படுகிறான் அந்த இளைஞன். இருந்தாலும் அவருடைய அரசியல் செல்வாக்கால் சில நிமிடங்களில் சிறையிலிருந்து விடுவிக்கப்படுகிறார். அதன் பின்னர் ஏற்படும் எதிர்பாராத விபத்து, இந்த மூன்று காவல்துறை அதிகாரிகளுக்கும் பெரும் சிக்கலை ஏற்படுத்துகிறது. அவர்கள் மீது கொலை வழக்குப் பதியப்படுகிறது.

இரண்டு நாள்களில் இடைத்தேர்தல் நடக்க இருப்பதால், அது முடியும்வரை தங்கள் பக்கம் உள்ள உண்மையை விளக்க முடியாது என்று நினைத்து மூவரும் தப்பித்து ஓடுகின்றனர். அதன் பிறகு அவர்களின் வாழ்க்கை என்ன ஆகிறது? அரசியல் மற்றும் அதிகாரத் தரப்பின் ஆட்டம் எப்படியிருக்கிறது என்பதே மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

குஞ்சகோ போபன், ஜோஜு ஜோர்ஜ், நிமிஷா ஆகியோரின் சிறந்த நடிப்பு கதைக்குப் பலத்தை அளிக்கிறது. இதன் திரைக்கதை ஆசிரியரான ஷாஹி கபீர் முன்னாள் காவல்துறை அதிகாரி என்பதால், அரசியல் குறுக்கீடு, அதிகார அத்துமீறல், காவல்துறையின் கையாலாகாத நிலை ஆகியவற்றைத் தத்ரூபமாக விவரித்துள்ளார். குஞ்சகோ போபன், ஜோஜு ஜோர்ஜ், நிமிஷா சஜயன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்க விஷ்ணு விஜயன் இசையமைத்திருக்கிறார்.

மெதுவாக தொடங்கும் கதை படிப்படியாக வேகமெடுத்து, விறு விறுப்புடன் முடிகிறது. அது ஏற்படுத்தும் திகிலுடன் பதைபதைப்பான பின்னணி இசையும், சில இடங்களில் இசையின் அமைதியும் அற்புதமான ஒளிப்பதிவும் கூடுதல் பலம். ஆனாலும் சினிமாத்தனம் சிறிதுமற்ற யதார்த்த மொழியே இந்தப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம். ஒரு சாதாரண கதையை உண்மைக்கு வெகு அருகிலிருக்கும் விதமாக அமைத்து அதன் மூலம் ஓர் அனுபவத்தைப் பார்வையாளர்களுக்குள் கடத்தியிருக்கிறார் இயக்குநர்.




## இப்பிடியெல்லாமுமா இருப்பாங்க!

நாட்டில் யாழ்ப்பாணத்தில் மட்டும் மூன்றாவது கட்ட கொரோனா தடுப்பூசியைப் போடுவதில் மக்கள் நாட்டம் காட்டவில்லை என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் அறிவித்திருக்கும் நிலையில் இந்தியாவில் நடந்த சம்பவம் ஒன்று ஆச்சரிய மூட்டியிருக்கிறது.

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் 84 வயதான ஒருவருக்கு 11 முறை தடுப்பூசி போடப்பட்டமை தொடர்பாக அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். சுகாதார அதிகாரிகளை ஏமாற்றி 12ஆவது முறையாகத் தடுப்பூசி போடுவதற்கு அவர் முயற்சித்தபோது பிடிக்கப்பட்டார் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் அடையாள அட்டைகள் தொலைபேசி எண்களைப் பதிவு செய்து ஒவ்வொரு முறையும் இவர் தடுப்பூசிகளைப் பெற்றுவந்திருக்கிறார் என்று தொடக்க விசாரணைகளில் தெரியவந்திருப்பது அதிகாரிகளை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

2021 மாசி மாதம் 13ஆம் நாள் முதல் தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட அவர் தொடர்ந்து வரிசைக் கிரமமாக ஊசிகளைப் போட்டிருக்கிறார். மார்கழி மாதத்திற்குள் தான் 11 முறை தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டார் என்று தெரிவித்திருக்கிறார். அவர் சொல்வது உண்மையா என்று அறிவதற்கான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இலங்கையில் முதல் கட்ட ஊசியையே போடாமல் பல லட்சக்கணக்கானவர்கள் அலைகையில் இந்த விசித்திர மனிதர் 11 கட்ட ஊசிகளையும் ஏற்றுக்கொண்டு இன்னமும் ஏற்றுவதற்கு முன்னிற்பதைப் பார்த்து மருத்து உலகம் ஆச்சரியப்பட்டு நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குறிஞ்சா இலைப் புட்டு. . .!

இந்த வாரச் சமையல் பகுதியில் குறிஞ்சா இலைப் புட்டை எவ்வாறு சமைத்தெடுப்பது என்று பார்ப்போம். குறிஞ்சா என்பது மருத்துவ குணங்கள் நிறைந்த தாவரம். சித்த வைத்தியர்களும் கிராமத்து மனிதர்களும் இற்றைவரை அதைப் பல தேவைகளுக்குப் பயன்படுத்தும் பழக்கம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக நீரிழிவு நோயாளர்கள் இதைத்தேடி உண்கிறார்கள். குறிஞ்சா இலையில் வறை வறுத்து, அதன் சாற்றைப் பிழிந்தெடுத்து உணவுப்பொருள்களுடன் சேர்த்து என்று எதோ வொரு வகையில் குறிஞ்சாவை உணவுடன் சேர்க்கிறார்கள்.

குறிஞ்சா இலைச் சாற்றைத் தனியாக்கிச் செய்யும் உணவுப் பொருள்களில் ஒன்றுதான் குறிஞ்சா இலைப் பிட்டு. குறிஞ்சா இலையின் சாற்றைத் தனியாக்கி அதைப் புட்டுடன் சேர்த்துச் சமைத்து உண்ணும் பழக்கமே தொடக்கத்தில் இருந்தாலும் பின்னர் மின் அரைப்பான்களால் குறிஞ்சா இலையை நன்கு அரைக்க முடிவதால் சாறு, இலை என எல்லாவற்றையும் அப்படியே புட்டுக் கலவையுடன் சேர்த்துச் சமைக்கும் பழக்கமும் இருக்கிறது. கசப்புச் சுவையிருப்பதால் இதற்காக இனிப்புப் பதார்த்தங்களும் சேர்க்கப்படுகின்றன. அந்த வகையில் இந்தமுறை குறிஞ்சா இலைப் புட்டுத் தயாரிப்பது எவ்வாறு என்று பார்ப்போம்.

**என்னென்ன பொருள்கள் தேவை...?**

குறிஞ்சா இலைகள் 10, சீரகம் - ஒரு தேக்கரண்டி, தேங்காய்ப்பால் பாதித் தேங்காயினது, பனங்குட்டான் - ஒன்று, சின்ன வெங்காயம் 50 கிராம் அளவில், மஞ்சள் தூள் - அரைத் தேக்கரண்டி, உப்பு தேவையான அளவு, அத்தோடு புட்டு அவிப்பதற்குத் தேவையான கோதுமை மா.


**எப்படிச் செய்வது...?**

வழமையாகப் புட்டு அவிப்பதுபோலக் கோதுமை மாவைப் பதப்படுத்திப் புட்டை அவித்துக்கொள்ளுங்கள். குறிஞ்சா இலைகளைச் சுத்தம் செய்து மின் அரைப்பானில் இட்டுச் சிறிதளவில் நீர்சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளுங்கள் (அல்லது அரைத்தபின் வடிகட்டிச் சாற்றை மாத்திரம் எடுக்கலாம்). தாச்சி ஒன்றில் தேங்காய்ப்பாலை விட்டு அதற்குள் பனங்குட்டானைத் துண்டுகளாக்கிப்போட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சுங்கள். தேங்காய்ப்பால் கலவை சூடானதும் குறிஞ்சா இலைச்சாற்றை அதனுடன் சேருங்கள். கையோடு நறுக்கிய சின்ன வெங்காயம், சீரகத்தூள், மஞ்சள் தூள், உப்பு ஆகியவற்றையும் போடுங்கள். பால் கலவை நன்கு கொதித்ததும் ஏற்கனவே அவித்து வைத்துள்ள புட்டை அதற்குள் கொட்டிக் கிளறுங்கள். கிட்டத்தட்ட பால் புட்டுப் பதத்தில் வரும். அதன் பின்னர் இறக்கிச் சூடாக இருக்கும்போதே பரிமாறுங்கள். சூடாக இருக்கும்போது உண்டு முடிக்காவிட்டால் பசைத் தன்மையாவதுடன் சூடாறும்போது குறிஞ்சாவின் கசப்பும் நாவில் ஒட்டிக் கொள்ளும்.



குறிஞ்சா இலைகளைப் புட்டாக்குவதில் இதைவிடவும் பல செயன்முறைகள் இருக்கின்றன. சிலர் குறிஞ்சா இலைச்சாற்றைத் தனியாக்கிப் புட்டுக்கு மாக்குழைக்கும் உப்புச் சேர்த்த சுடுநீராகப் பயன்படுத்துகிறார்கள். சிலர் குறிஞ்சா இலைகளை நன்கு அரைத்துப் புட்டுடன் சேர்த்துக் குத்தி அவிக்கிறார்கள். ஆனால் பலரோ பால்பிட்டுப்போல கலவை செய்தே குறிஞ்சாவில் புட்டுத் தயாரிக்கிறார்கள். காரணம் கசப்புச் சுவையும், பச்சை வாசனையும் உடைய அதற்குத் தேங்காய்ப்பால், பனங்குட்டான், சீராகம், மஞ்சள் ஆகியவை இனிப்பையும், புதிய வாசனையையும் வழங்கும் என்பதாலேயே.

# நடிகையின் ஆதரவு!



'ஹாரி பாட்டர்' பட நடிகையான எம்மா வாட்சன் பாலஸ்தீனப் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக வெளியிட்டுள்ள பதிவு வைரலாகியுள்ளது. அதேநேரம், இஸ்ரேலிய அதிகாரிகள் எம்மா வாட்சன் செயலுக்குக் கண்டனங்களையும் பதிவு செய்துள்ளனர்.

'ஹாரி பாட்டர்' சீரிஸ் படங்களில் ஹெர்மியோன் பாத்திரத்தின் மூலமாகப் புகழ்பெற்ற நடிகை எம்மா வாட்சன், அண்மையில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பாலஸ்தீனப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பாலஸ்தீனிய சார்பு பேரணி புகைப்படத்தைப் பதிவிட்டார். காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய 11 நாள் தாக்குதலைக் கண்டித்துச் செல்லப்பட்ட பேரணியில் எடுக்கப்பட்ட புகைப்படம் அது.


புகைப்படத்துடன், "ஒற்றுமை என்பது அர்ப்பணிப்பு மற்றும் வேலை. அதே போல் நமக்கு ஒரே மாதிரியான உணர்வுகள் அல்லது உயிர்கள் அல்லது உடல்கள் இல்லாவிட்டாலும், நாம் பொதுவான அடிப்படையில் வாழ்கிறோம் என்பதை அங்கீகரிப்பது ஒற்றுமைதான்" என்று ஆஸ்திரேலிய ஆர்வலர் சாரா அகமதுவின் வரிகளையும் எம்மா வாட்சன் பதிவிட்டுள்ளார்.

இந்தப் பதிவு ஒரே நாளில் ஒரு மில்லியன் லைக்குகள் மற்றும் 89,000க்கும் மேற்பட்ட கமெண்டுகள் என வைரலாகியுள்ளது.

பாலஸ்தீன ஆதரவாளர்கள் பலரும் எம்மா வாட்சனின் ஆதரவிற்கு நன்றி தெரிவித்துள்ளனர். ஆதரவுகள் ஒருபுறம் இருக்க, ஐ.நா. சபைக்கான இஸ்ரேலின் தூதர் கிலாட் எர்டன், எம்மா வாட்சனின் பதிவை விமர்சித்துள்ளார். "புனை கதைகள் 'ஹாரி பாட்டர்' படத்தில் வேண்டுமானால் எடுபடும். ஆனால் உண்மை வாழ்க்கையில் புனை கதைகள் வேலைக்கு ஆகாது" என்று பதில் கொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்...? எப்படி...?



01

நட்சத்திரா

**இலங்கையில் மட்டுமல்லாது உலகு முழுதும் தமிழர்கள் பரந்து வாழ்கிறார்கள். இந்த மக்களின் மொழி தமிழாக இருந்தபோதும் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாகவும் பல்வேறு பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.**

**குறிப்பிட்ட பிரதேசத்தில் நீண்டகாலம் வாழ்கின்ற தமிழர்கள் தொடர்ச்சியாகச் சில பழக்க வழக்கங்களையும், உணவு முறைகளையும், கலாசார விழுமியங்களையும் பேணி வருகின்றனர். பிறப்புத் தொடக்கம் இறப்பு வரையான சடங்குகள், வாஸ்து பார்த்தல், திருமணச் சடங்குகள், செத்தவீட்டுச் சடங்குகள், விதைப்பு, அறுவடை, உணவுப் பழக்க வழக்கங்கள், கலைகள் எனப் பல்வேறு விடயங்கள் தமிழரைச் சுற்றி நிகழ்கின்றபோதும் ஏன் அப்படிச் செய்கிறோம்...? என்பதில் பலருக்குத் தெளிவில்லை. அதற்கான விளக்கம் தெரியாமலேயே 'அது அப்படித்தான்' என்று முடித்துவிடுகின்றனர். இவற்றின் பின்னணியை ஆராயும் தொடராகவும் அவற்றின் பின்னணியிலுள்ள உண்மைகளை அறியச் செய்யும் தொடராகவும் செம்மண்ணில் இந்தப் பகுதி வெளியாகிறது.**

குசினிக்கு அருகில் கிணறு இருக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் வீடொன்றைக் கட்டுவதற்கு முன்பு வாஸ்து பார்ப்பது, நிலையம் எடுப்பது எனப் பல நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன. அதில் ஒன்று குசினியில் சோறு அவியும் சத்தம் கிணற்றடியில் நிற்கும்போது கேட்கவேண்டும் என்பது. வாஸ்து பார்ப்பவர்கள் இதை வலியுறுத்துவது வழமை. சில முதியவர்களும் இதைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று இறுக்கமாகக் கூறுவதைக் காணலாம். இவர்கள் கூறுவது சரியா...? ஏன் அப்படியான ஒரு வழக்கம் வந்தது?

**காரணம் 1** - முன்னைய காலத்தில் வீடுகள் பனையோலை அல்லது கிடுகால் வேயப்பட்டவை. மண்சுவர், தகரம், சுண்ணாம்புச் சுவர், சீமெந்துச் சுவர் எனப் படிப்படியாக வளர்ச்சி கண்டவை. இவை வருவதற்கு முன்னர் கிடுகால் ஆன தட்டிகளாலும் பனை மட்டைகளாலுமே குசினிகள் அடைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான ஓலை வீடுகளில் எரியும் விறகடுப்பிலிருந்து தீப்பொறி பறந்து குசினி, வீடு என எல்லாமே எரியக்கூடிய வாய்ப்புகள் அதிகமிருந்தன. கிணறு அருகில் இருந்தால் அயலவர்கள் ஓடிவந்து இலகுவாக அதிலிருக்கும் தண்ணீரை எடுத்து ஊற்றி அணைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால் குசினிக்கு அருகில் கிணற்றை அமைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

**காரணம் 2** - அப்போதைய கிணறுகள் நிலத்திலிருந்து உயரமாகக் கட்டப்படாது நில மட்டத்தில் அமைக்கப்படுவது வழக்கம். தண்ணீர் அள்ளுவதற்குத் துலா பயன்பாட்டில் இருந்தது. துலா அறுந்து கிணற்றுக்குள் விழுவது, கால் வழுக்கிக் கிணற்றுக்குள் விழுவது என அடிக்கடி கிணற்றில் விழும் சந்தர்ப்பங்கள் இருந்ததால் கிணற்றுக்குள் விழுபவர் எழுப்பும் அவலக்குரல் அல்லது துலாக்கொடி அறுந்து அடிபடும் சத்தம் என எதையாவது குசினிக்கு அருகில் கிணறு இருந்தால் குசினுக்குள் இருப்பவர் அறிவதற்கு இலகுவாக இருக்கும். அதன் மூலம் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

**காரணம் 3** - குசினிக்கு அருகில் கிணறு இருந்தால் சமையால் பாத்திரங்களை கழுவுவதும், சுத்தமாக வைத்திருக்கவும் வாய்ப்பாக இருக்கும். தூரத்திலிருந்து தண்ணீர் அள்ளி வந்து பாத்திரங்களைக் கழுவுவதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க முடியும். இதனால் நிரந்தரமாக நிலத்தில் அமையும் கிணற்றைக் குசினிக்கு அருகில் அமைக்கத் தீர்மானித்திருக்கலாம். தண்ணீரைப் பெறுவதற்குச் சிரமம் இருக்கும் போது அசுத்தமாக இருக்கும் சமையல் பாத்திரங்களில் தொற்றுநோய்கள் ஏற்படவும் வாய்ப்பிருக்கும்.

தற்போது விறகடுப்புகளோ, புகைபோக்கிகளோ இல்லாத குசினிகளே அதிகம். உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள தொட்டியில் தண்ணீரை ஏற்றி குழாய்கள் மூலம் குசினிக்குள்ளேயே பாத்திரங்களைக் கழுவும் வசதி வந்துவிட்டது. கிணறோ, துலாக்களோ இல்லாது குழாய்க் கிணறுகள் அடிக்கப்பட்டு மின் மோட்டர்களால் தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆனால் தற்போதும் வாஸ்துக்காரர்கள், நிலையம் பார்க்கின்ற சிலர் குசினிக்கு அருகில் கிணறு இருக்கவேண்டும் என்கின்றனர்.

சில இடங்களில் குசினிக்கு அருகில் கிணறுபோல வட்ட வடிவில் தொட்டி கட்டித் தண்ணீர் அள்ளிப் புழங்கி வருகிற நிலையும் காணப்படுகிறது. எதையும் செய்வாதற்கு முன்னர் ஏன் அப்படி? என்று தேடிப்பார்ப்பது சிறந்ததல்லவா...?

---

## அழிவிலிருந்து மீண்ட மீன்கள்



முற்றிலும் அழிந்துபோனதாக நம்பப்பட்ட சிறிய மீனினம் ஒன்றை மீண்டும் அதன் வாழிடத்தில் அறிமுகப்படுத்துவதில் அறிவியலாளர்கள் வெற்றி கண்டுள்ளார்கள். மெக்சிக்கோ நாட்டில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது.

அந்த நாட்டில் உள்ள ஒரு வகைச் சிறிய மீனின் பெயர் டெக்கீலா. இந்த மீனினம் மெக்சிக்கோ காடு சார்ந்த நீர்நிலைகளில் வாழ்கிறது. இது முற்றிலும் அழிந்துபோய்விட்டதாக 2003 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தது. அதனையே அறிவியலாளர்கள் மீளுருவாக்கம் செய்து மீண்டும் சூழலுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

நன்னீரில் வாழும் உயிரினங்கள்தான் பூமியில் அதிக அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன, நன்னீர் உயிரிகள், நிலம் அல்லது கடலில் வாழும் உயிரினங்களை விட வேகமாக அழிந்து வருகின்றன என்கிறது இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம். அந்த வகையில் டெக்கீலா முக்கியமானது.

செஸ்டர் விலங்குக் கண்காட்சிச் சாலையில் இருந்து 10 சோடி மீன்களைப் பெற்ற மெக்சிக்கோ மிச்சோகானா பல்கலைக்கழக அறிவியலாளர்கள் அவற்றை இனப் பெருக்கம் செய்து 1,500 மீன்களை நீர்நிலைகளில் விட்டார்கள். அவை இப்போது 10 ஆயிரம் வரை பெருகியுள்ளன என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றாழை

ஐ.கிருத்திகா



உள்ளாடை நனைந்ததில் திக்கென்றிருந்தது. இப்படித்தான் அடிக்கடி நனைந்துபோகும். தெரிந்ததுதான். இருந்தும் மனசு அவசர அவசரமாய் கணக்கு போட்டுப் பார்த்தது. இருபத்தியிரண்டு நாட்களாகியிருந்தன. இருபத்தியிரண்டில் வருவதற்கு வாய்ப்பேயில்லை. இருபத்தைந்திலிருந்து எதிர்பார்க்கலாம். இருபத்தியெட்டிற்குள் கட்டாயம் வந்துவிடும்.

நிறம் மாறியிருந்தால் பிரச்சினையில்லை. சிவப்பு அச்சம் தரும் நிறம். வெள்ளை சமாதானம். மனதைச் சமப்படுத்தும். இருந்தும் அதுவும் கசகசப்புதான். வடித்த கஞ்சி போல, சில சமயம் பாலேடு போல... நடக்க நடக்க உடலோடு உராயும் உள்ளாடையின் கொழ கொழப்பு எதிராளியின் புருவங்களை உயர்த்த வைக்கும். முகத்தின் சுருக்கங்கள் அவர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும்.

ஒரு கப் நீரூற்றிக்கொண்டால் தேவலாமென்றிருந்தது. அடித்து ஊற்றிக்கொள்ள வேண்டும். பின்பு சுடிதாரில் அழுந்த துடைத்துக்கொள்ளலாம். சற்று இதமாயிருக்கும். அது வெள்ளைதான் என்று மனசு அடித்துச் சொல்லிற்று. ரஞ்சனி அந்தப் பெரிய மரமல்லி மரத்தினடியில் ஒதுங்கினாள்.

'அப்பெல்லாம் எங்களுக்கு யாரு அது வாங்கிக் குடுத்தா... உள்பாவாட நனையும். ஒக்கார்றப்ப இழுத்து விட்டுக்கிட்டு ஒக்காருவோம். வெட்டச்சூடு ஒடம்பு. எப்பப் பாத்தாலும் பாவாட ஈரமாயிட்டேயிருக்கும்.'

அம்மா ஒருமுறை முகம் சுழித்துச் சொன்னாள்.

'இப்ப போட்டுக்கயேன். நான் வாங்கித் தர்றேன்.' ரஞ்சனி கண்ணடித்துச் சிரித்தாள்.

'எல்லாம் வத்திப்போச்சு. இனிமே எதுக்கு? யாரும் பாக்காதப்ப காலை அகட்டி வச்சு ஒரு தொடை தொடைச்சிக்கறது. காலம் அப்படி போச்சு.'

அம்மாவின் முகம் தாழ்ந்திருந்தது.

மரமல்லிப்பூக்கள் தரையில் உதிர்ந்திருந்தன. நீண்ட காம்புடைய வெள்ளைப்பூக்கள். காலைப் பனியில் பூக்கள் சில்லிட்டன. கால்களில் பட்ட பூக்கள் குளிர்ந்து சிலிர்க்க வைத்தன. ரஞ்சனி ஒரு பூவை எடுத்து கையில் வைத்து அழகு பார்ப்பது போல் சிறிதுநேரம் நின்றிருந்தாள். குப்பை போட வந்த எதிர்வீட்டுப் பெண் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு குப்பைப் பையை வீசியெறிந்துவிட்டு உள்ளே போனாள். தெருவில் யாருமில்லை என்பதை ரஞ்சனி உறுதிசெய்துகொண்டு சட்டெனச் சுடிதாரில் அழுந்தத் துடைத்துக்கொண்டாள். அம்மாவின் ஞாபகம் வந்தது.

'நல்லத குடுத்தியோ இல்லியோ கெட்டத குடுத்துட்ட...'

'ஆமா, நான் குடுத்தேன். போடி இவளே...'

அம்மாவின் இடக்கைப் பழக்கம் ரஞ்சனிக்கு வாய்க்கவில்லை. தோசை சுடுவதிலிருந்து, தலை சீவுவது, வீடு பெருக்குவது வரை எல்லாம் இடக்கையால் தான். சிங்கார் சாந்தை இடக்கையால் அழகாக வட்டமாக இட்டுக்கொள்வதைப் பார்த்து ரஞ்சனியும் பல தடவை முயன்று தோற்றிருக்கிறாள். அம்மாவுக்கு கருகருவென நீண்ட முடி. ரஞ்சனியுடையது பூஞ்சை முடி.

'உன் முடியத் தர்றியாம்மா? ஆசையா இருக்கு.'

இழுத்து தன் தலையோடு சேர்த்து வைத்து கூந்தலை முன்னால் போட்டு கண்ணாடியில் அழகு பார்ப்பாள். அம்மாவுக்கு நல்ல வடிவான உடல். ரஞ்சனி நேர்க்கோடு.

'அவுங்கத்த மாதிரி ஒடம்புவாகு. அதுங்க ரெண்டும் கோடு கிழிச்சாப்ல இருக்குங்க. அப்படியே வந்து பொறந்துருக்கு இதுவும்.'

அம்மாவுக்கு வாய் ஓயாது.

'ஒழுங்கா பேடட் பிரா போடு.'

தோழியின் அறிவுரையின் பேரில் உடலில் கொஞ்சம் வசீகரம் கூடிப்போனது. எதிரே வருபவர்கள் தன்னைக் கவனிக்கிறார்கள் என்று உணரும்போது திடுமென இதயம் அதிரும். அது ஒருவித புது சுகத்தைத் தந்தது. துணிக்கடைக்குப் போனால் முதலில் உள்ளாடைப் பிரிவுக்குத்தான் செல்வாள். வெவ்வேறு கம்பெனிகளின் விதவிதமான ரகங்களைக் காட்டச்சொல்லிப் பார்ப்பாள். தொட்டுப் பார்த்து மிகவும் நுணுக்கமாகத் தேர்ந்தெடுப்பாள். விளைவு பீரோவில் பேடட் ரகங்கள் அதிகமாய் சேர்ந்துவிட்டிருந்தன.

**இரவுக்குச் சில்வண்டுகள் உயிர் கொடுப்பதாக ரஞ்சனி நினைத்துக்கொள்வாள். இரவுகளை அவள் மிகவும் விரும்பினாள். இருள் ஒரு பாதுகாப்பு. உடல் தெரியாத இருட்டில் தன்னைக் கரைத்துக்கொள்வதாக உள்ளே கற்பனை ஓடும். எவரும் பார்க்க முடியாது தன்னுடலை இருள் போர்த்திக் கொள்வது அவ்வளவு பிடித்திருந்தது**

உடலின் நிமிர்வு கொஞ்சம் தைரியத்தைத் தந்தது. சுடிதாரை மீறித் தெரியும் கவர்ச்சி செயற்கையானது என்று யாருமறியப் போவதில்லை. அதுவே குதூகலமாயிருந்தது. சுடிதாரின் நிறத்துக்குப் பொருத்தமாக நிறைய வாங்கி வைத்துக்கொண்டாள்.

'அசத்தறடி...' என்றாள் தோழி.

அம்மா தன் பங்குக்கு ஏதேதோ கை வைத்தியம் செய்தாள்.

'இதெல்லாம் எதுக்குடி? எனக்குப் புடிக்கல' என்றாள்.

ரஞ்சனிக்கும் பிடிக்கவில்லைதான். குதூகலத்தை மீறிய ஒவ்வாமை மனதில் எரிச்சலை உண்டு பண்ணிக்கொண்டேயிருந்தது. அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்ததும் முதல்வேலையாக உள்ளாடையை உருவியெறிவாள். அப்போது, ஒட்டிக்கொண்டிருந்த அட்டைப்பூச்சியை வழித்து வீசியது போல பெருமூச்சு எழும். ஓவல் வடிவக் கண்ணாடியின் முன்னே வெற்று மார்புடன் நின்றிருப்பாள்.

கடவுளின் கொஞ்சூண்டு கருணை போல மலர்ந்திருக்கும் ஸ்தனங்களை வெறுப்புடன் உற்று நோக்குவாள். சிலசமயம் முகம் சுழித்து அழ ஆரம்பிப்பாள். அது பல நேரங்களில் நீள் அழுகையாய்த் தொடரும். கோபத்துடன் மார்புகளைக் கசக்கிவிட்டுக்கொள்வாள். இரு கைகளையும் குழித்து மூடிக்கொள்வாள். உள்ளங்கை அளவுகூட போதுமானதாயிருந்தது அழுகையின் வீரியத்தைக் கூட்டிற்று.

உடன் பணிபுரியும் ராதிகாவின் மார்புகள் தளும்பி வழிவதை நினைவுக்குக் கொண்டுவந்து ஓங்கி தலையில் கொட்டிக்கொள்வாள். ராதிகா அபூர்வமாய்த்தான் புடவை உடுத்துவாள். புடவையில் மறையும் வடிவம் சுடிதாரில் விம்மித் தணியும். துப்பட்டா சரியும் நேரங்களில் ரஞ்சனியின் பார்வை இயல்பாய் அவள் மேல் படிந்து அவசரமாய் விலகும். கோவில் சிலையின் அதீத வளர்ச்சிக்கு இணையான ஸ்தனங்கள்.

'பஸ்ஸுல கூட்டத்த சாக்கா வச்சு பொறுக்கிப் பசங்க தொழாவுறானுங்கடி. பத்திக்கிட்டு வருது' என்று புலம்பிய ராதிகா திடீரென ஒருநாள் ஸ்கூட்டியில் வந்திறங்கினாள்.

'இனிமே தடவுற தொந்தரவு இல்லாம நிம்மதியா ஆபீசுக்கு வந்துட்டுப் போவேன்.'

தோள்களைக் குலுக்கி அவள் சொன்னபோது குலுங்கிய அழகுகளை ரஞ்சனியின் கண்கள் அனிச்சையாக வெறித்தன.

'நீயும் பேசாம லோனைப் போட்டு வண்டி வாங்கிக்கயேன்.'

அம்மா திடீரென ஒருநாள் சொன்னாள்.

'நானும் அதாம்மா யோசிக்கிறேன். வண்டி இருந்தா லீவு நாள்ல உன்னை ஏத்திக்கிட்டு ஊரை வலம் வரலாம்ல?' தலையாட்டிக் கேட்டாள்.

'எங்க போவலாம் சங்கரான்னுதான் இருக்கு.'

அம்மாவின் உதடுகள் சுழித்தன.

'இருவத்தினாலு வயசாவுது. மாநெறம். ஆனா நல்ல லச்சணம். ஒல்லியாதான் இருப்பா. கல்யாணமானா சதை போட்டுடப் போவுது' என்பாள் அம்மா.

'உன் பொண்ணுக்கு நீதாம்மா மார்க்கெட்டிங் ஆபீசர்...'

ரஞ்சனி தலையிலடித்துக்கொண்டு சிரிப்பாள்.

ராதிகா அவளைப் பார்த்த வேகத்தில் ஸ்கூட்டியைக் கிறீச்சிட்டு நிறுத்தினாள்.

'எங்கடி போயிக்கிட்டிருக்க?'

'பஸ் இந்தப் பக்கம் வராதாம். ஏதோ மீட்டிங்காம். அதான் பஸ் ஸ்டாண்ட் போய்க்கிட்டிருக்கேன்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒக்காரு நான் கொண்டுபோய் விடறேன்.' அமரப்போனவளை அவசரமாய் நிறுத்தினாள்.

'நீ ஓட்டுறியா...?'

ரஞ்சனிக்குக் கண்கள் விரிந்தன.

ராதிகா இறங்கி பின்பக்கம் வருவதற்குள் ஒரு முறை சுடிதாரில் அழுந்தத் துடைத்துக்கொண்டு வண்டியைப் பற்றிக்கொண்டாள்.

வண்டி பள்ளத்தில் இறங்கியபோது ராதிகாவின் மென்ஸ்பரிசம் முதுகில் அழுந்திற்று. உடல் சிலிர்த்தது. வேண்டுமென்றே இரண்டு மூன்று முறை பள்ளத்தில் இறக்கி ஏற்றினாள்.

'புது வண்டிடி. பாத்து ஓட்டு...'

ராதிகாவின் உடல் அழுந்திற்று. ரஞ்சனி ஹேண்ட்பாரை இறுகப் பற்றிக்கொண்டாள். அசுரத்தனமாகச் செலுத்தி எதன் மீதாவது மோத வேண்டும் போலிருந்தது. கீழுதட்டைக் கடித்துக் கொண்டாள். ஹெல்மெட் முகத்தை மறைத்திருந்ததில் அதன் தீவிரத்தன்மை எதிரே வருபவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லாமல் போனது. கால் விரல்கள் மடங்கி நிமிர்ந்தன.

பாலத்து சுவரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியில் கதாநாயகி பாதி மார்பு திறந்து காட்டி சிக்கனமாகப் புன்னகைத்துக்கொண்டிருந்தாள். ரஞ்சனியின் கண்கள் அவள் மார்பில் பதிந்திற்று. மிரர் வேலைப்பாடு செய்த ஜாக்கெட் புடைத்திருந்ததில் தலையை உலுக்கிக்கொண்டாள்.

'அம்மா சேரில் கிடந்த துப்பட்டாவைக் காட்டிக் கேட்டபோது ரஞ்சனி பதில் சொல்லவில்லை. கழிவறைக்குள் புகுந்து மடேரெனக் கதவை அறைந்து சாத்தினாள். பேண்ட்டின் நாடா முடிச்சை நீக்கி அவிழ்த்து குந்துகால் வைத்து அமர்ந்தாள். வாளியில் தளும்பிய நீரைக் கப்பில் மோந்து ஆத்திரம் தீருமட்டும் அறைந்து ஊற்றிக்கொண்டாள். குளிர்ந்த நீர் அந்தரங்கப் பிரதேசத்தைத் தழுவி ஓடியபோது மனதுக்கு ஆசுவாசமாயிருந்தது. மெல்ல எழுந்து நின்றவள் ஆடைகளைக் களைந்து வீசிவிட்டு சுவரில் சாய்ந்து நின்றாள்.

'வெட்டச்சூட்டுக்கு வெந்தயம் நல்லது. தெனமும் ஊரவச்சு முளைகட்டி குடு' என்று கோகிலா சொன்னதிலிருந்து அம்மாவுக்கு இரவு வெந்தயம் ஊறவைக்கும் வேலை சேர்ந்துகொண்டது. வெந்தயக்கசப்பு தொண்டையைப் பிடித்தது. வெறும் வயிறு குமட்டிக்கொண்டு வந்தது.

'காபி குடிச்சிட்டு திங்கறேம்மா...'

ரஞ்சனியின் கெஞ்சல் அம்மாவிடம் எடுபடவில்லை.

'வெறும் வயத்துல தின்னாதான் பலன் கெடைக்கும். ஒடம்பு தேறணும்னா ஒழுங்கா முழுங்கித் தொலை.'

அம்மாவின் கடுப்பேறிய முகம் ஓரொரு சமயம் எரிச்சலில் சுருங்கும். இயலாமையில் எழும் வெறுப்பை மறைத்துக்கொள்ள அவள் சட்டென முகத்தைத் திருப்பிக்கொள்வாள்.

'வெள்ளைப் படுறது நின்னுடுச்சின்னா ஒடம்பு நல்லா பூரிச்சு வந்துடும். டாக்டர்ட்ட போனா மருந்து, மாத்தர குடுத்து கட்டுப்படுத்திடுவாங்க. ஆனா அது கொஞ்ச நாளைக்குதான். மாத்தரைய நிப்பாட்டுனா மறுபடியும் பட ஆரம்பிச்சிரும். அதனால கை வைத்தியமா செஞ்சுதான் அதக் கட்டுப்படுத்தணும்.'

கோகிலா சொல்ல அம்மா தலையசைத்துக் கேட்டுக்கொண்டாள்.

வார, மாதப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கும் மருத்துவக் குறிப்புகள் ஒவ்வொன்றாக அரங்கேறின.

'இப்ப கொஞ்சம் தேவலாம் போல இருக்காடி...?'

நாலைந்து நாட்களில் இந்தக் கேள்வி வந்து விழும். தேவலாம் போலத்தான் ரஞ்சனிக்கும் தோன்றும். மெதுவாகத் தலையசைத்து வைப்பாள். அம்மாவின் சந்தோஷம் கரைகாணாது போகும். வைத்தியம் தீவிரமடையும். அளவுகள் கூடும். இரண்டாவது கேள்விக்கு ஒருவாரம் இடைவெளி விடுவாள்.

'இப்ப எப்படி இருக்கு...?'

ரஞ்சனியின் பார்வை எங்கோ இருக்கும். உதடுகள் பிதுங்கும். அம்மாவுக்கு உள்ளே இடிந்து போகும். அந்த வைத்தியம் அத்தோடு விடை பெறும்.

இரவுக்குச் சில்வண்டுகள் உயிர் கொடுப்பதாக ரஞ்சனி நினைத்துக்கொள்வாள். இரவுகளை அவள் மிகவும் விரும்பினாள். இருள் ஒரு பாது காப்பு. உடல் தெரியாத இருட்டில் தன்னைக் கரைத்துக்கொள்வதாக உள்ளே கற்பனை ஓடும். எவரும் பார்க்க முடியாது தன்னுடலை இருள் போர்த்திக் கொள்வது அவ்வளவு பிடித்திருந்தது. ஆனாலும் பகலில் தன்மேல் பார்வை விழ அவள் ஏங்கினாள். ஆணின் வசீகரப் பார்வையில் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்பதை அவள் பெரிதும் விரும்பினாள்.

அதற்காகவே எதிரே வருபவர்களின் கண்களை எதேச்சையான பாவனையில் ஆராய்வாள். இப்போதெல்லாம் கொஞ்சம் பார்க்கத்தான் செய்கிறார்கள். மெத்தென்ற உள்ளாடையின் தழுவலில் சில மோதல்கள் நிகழ்ந்தன. பேருந்தின் கூட்ட நெரிசலில் வேண்டுமென்றே இடித்துவிட்டு 'சாரி' சொன்னார்கள். ரஞ்சனி பரவாயில்லை என்பது போலத் தலையசைத்து உள்ளூர சிலிர்த்தாள்.

சில்வண்டுகள் ரீங்கரித்தன. விடிவிளக்கின் வெளிச்சத்தில் அம்மா ஒரு ஓவியம் போல உறங்கிக்கொண்டிருந்தாள். ஒருக்களித்தவாக்கில் படுத்திருந்தவளின் முந்தானை விலகிச் சரிந்திருந்தது. ரஞ்சனி கண்களை மூடிக்கொண்டாள்.

அம்மாவைப் பார்ப்பது பிடிக்கவில்லை. கண்களைப் பிடுங்காவிட்டால் காட்சி மனதில் நிலைத்துவிடும். அது எரிச்சலை உண்டாக்கும். மூளையில் உறைந்துபோகும். பின் அக்காட்சியிலிருந்து மனதை அப்புறப்படுத்தவே முடியாது. அந்தப் பயம் அவளுக்கு. அப்படியும் சில நேரங்களில் வெண்திரட்சி தட்டுப்பட்டுவிடும். ரஞ்சனி அலமலந்து போவாள்.

மனதைச் சமப்படுத்த முடியாமல் அறைக்குள் புகுந்து கண்ணாடி முன் நின்றுவிடுவாள். உடைகளைக் களைந்துவிட்டு ஆங்காரமாய் உடலை நோக்குவாள். இலேசான குமிழ்களாய் மொட்டுவிட்டிருக்கும் அரும்புகள் அவளைப் பார்த்து கேலியாய்ச் சிரிப்பது போலத் தோன்றும் உணர்வில் கைகளைப் பெருக்கல் குறியாக்கி தோளில் பற்றிக்கொள்வாள். வயிறு குழைய அப்படியே நின்றிருப்பாள். மனதின் இரைச்சல் அடங்கும் வரை நின்ற கோலத்திலேயே இருப்பாள்.

சிலநேரம் கைகளைப் பின்னால் வளைத்துக் கோர்த்துக்கொண்டு நெஞ்சை நிமிர்த்தி நிற்பாள். அப்போது சற்று பெரிதானதைப் போலத் தோன்றும். மூக்கு விடைக்க அழுதுகொண்டே சிரிப்பாள். உடனே கைகளை விடுவித்து அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொள்வாள். ஒருமுறை கண்ணாடியை நெஞ்சோடு அழுந்த அணைத்துக்கொண்டாள். சில்லிட்ட கண்ணாடி, மார்புகளை சிலிர்க்கச் செய்தது. உள்ளே எரிந்த தீ மெல்ல மெல்ல அவிந்திருந்தது.

அழுகை கொஞ்சம் அடங்கியது. அவள் தன் இரு கரங்களையும் கோர்த்து வயிற்றில் பதித்துக் கொண்டாள். பெருமூச்சு விடுத்து அப்படியே தளர்ந்து குந்தினாள். கண்கள் மூடி எதுவமற்று கரைந்துவிட பெரும் பிரயாசைப்பட்டாள். ஜன்னல் திரைச்சீலைகள் [illegible] சிதறிய திரைச்சீலைகள் அவளின் சோகத்தைப் பங்கு போட்டுக்கொள்வது போல் அசைந்தாடின.



மென்காற்று அவளுடல் தழுவி ஆசுவாசப்படுத்த முனைந்தது. இடைவிடாத தழுவல் இதமான ஸ்பரிச உணர்வைத் தந்ததில் ரஞ்சனி கண்களை மூடிக்கொண்டாள். அம்மாவின் குரல் கேட்டது.

'உள்ளாற என்ன பண்ற....'

புரண்டு படுத்த அம்மா விழிப்பு தட்டி குரல் கொடுத்தாள்.

'வர்றம்மா....'

மெலிதாய் முனகினாள். பல நேரங்களில் கண்களின் சிவப்பு காட்டிக் கொடுத்துவிடுமென்று அச்சமாயிருக்கும். அம்மாவிடம்கூட இயலாமையை வெளிப்படுத்த அவமானமாயிருந்தது. கரை உடைத்து வரும் வெள்ளத்தைப் பலவந்தமாக அடக்குவாள். அம்மாதிரி நாட்களின் இரவுகள் பெரும் பாதுகாப்பானவையாக அவளை நம்ப வைக்கும். அம்மா படுத்ததும் உறங்கிவிடுவாள். அது ரஞ்சனிக்கு வரப்பிரசாதமாகி விட்டிருந்தது.

வெள்ளத்தை இஷ்டத்துக்கு உடைப்பெடுக்கச் செய்து தலையணையை நனைப்பாள். தெருவில், பேருந்தில் அலுவலக லிஃப்ட்டில் உடன்வரும் பெண்களின் முகங்கள் பற்றி அவள் பெரிதாக அலட்டிக்கொண்டதில்லை. அவளின் பார்வை கழுத்துக்குக் கீழே நிலைத்திருக்கும். செழுமையான பெண்களைக் கண்டால் அவள் முகம் சுருங்கிப்போவாள்.

'நெஞ்ச நிமித்திக்கிட்டு குதிர மாதிரி என்ன நடை வேண்டிக்கெடக்கு...' என்று மனதிற்குள் கத்துவாள்.

'யூரின் கண்ட்ரோல் பண்ண முடியலையா உனக்கு..?'

அப்போதுதான் கவனித்தது போல ராதிகா ஒருநாள் கேட்டாள். ஆறுமாதப் பழக்கத்தில் உரிமையோடு வந்து விழுந்த கேள்வி. ரஞ்சனிக்கு அவள் மார்புகள் மீதுதான் எரிச்சல். அவளைப் பிடிக்கும். எத்தனையோ முறை வேலையில் அவள் தவறு செய்தபோது அருகிலிருந்து திருத்தியிருக்கிறாள். அவளை இருக்கையில் அமர்த்தி இவள் குனிந்து சொல்லித்தருவாள். அப்போது அனிச்சையாக பார்வை ஆடைக்குள் நுழையும். அரைகுறையாய்த் தெரியும் முலைகள் வயிற்றில் தீப்பந்தத்தால் துழாவும். பற்களைக் கடித்து கைவிரல்களை மடக்கிக்கொள்வாள்.

'எதுக்குடி அடிக்கடி போற...?'

ராதிகா விடாப்பிடியாகக் கேட்டாள்.

'யூரினரி பிராப்ளம் இருந்தா போவணும் போல தோணிக்கிட்டேயிருக்கும். அதானே..... ?'

அவளே மறுபடியும் கேட்டதில் ரஞ்சனி தலையசைத்தாள்.

அலுவலகம் கிளம்பும் நேரத்தில் எந்த பெர்ஃபியூமை உபயோகிக்கலாம் என்பதில் ரஞ்சனிக்குக் குழப்பம் ஏற்படும். மூக்கைத் துளைக்கும் பெர்ஃபியூம் அவளுக்குப் பிடிக்காது. இதமான வருடல் போன்ற வாசனை ரொம்பப் பிடிக்கும். அதனைப் பார்த்துப் பார்த்து தேர்வுசெய்வாள். உடலின் இயல்பான வாடை குறித்த ஒரு உணர்வு தீப்பொறி போல் கனன்றுகொண்டேயிருந்தது.

'ஒரு வாடையுமில்ல. ஒனக்குத்தான் தோணுது. அப்படித் பாத்தா நான் எப்படி பயந்துருக்கணும். என்னளவுக்கு ஒனக்கில்லையே. கொறைச்சல்தான். அத நெனச்சு சந்தோஷப்படு...

அம்மாவுக்கு பெர்ஃபியூம் அடித்துக்கொள்வது சுத்தமாகப் பிடிக்கவில்லை. ரஞ்சனி இரண்டு அக்குளிலும் பீய்ச்சிக்கொள்வதைப் பார்த்துவிட்டு முகம் சுழிப்பாள். டேபிளை நிறைத்த திரவிய பாட்டில்களை அவள் போனபிறகு வெறுப்போடு நோக்குவாள்.

ஒருநாள் அம்மாவுக்குத் திடீரென அந்த எண்ணம் உதித்தது.

'பேசாம தெனமும் ஒரு நாப்கினை வச்சிக்கிட்டுப் போயிடேன்.'

தீர்வுகண்டுவிட்ட தினுசில் ஒளிர்ந்த கண்கள் ரஞ்சனியின் அலட்சியமான முகத் திருப்பலில் சுருங்கின.

'ஏன்டி?'

'மாசத்துல ஏழு நாள் வச்சிக்கிட்டுப் போறதே எரியுது. இதுல தெனமும் வச்சா தோலு வழுவுண்டு போயிடும். புரியுதா...?'

அம்மாவுக்குத் தலை கவிழ்ந்தது. பேசாமல் உப்புமாவைக் கிளறினாள். ரஞ்சனி ஐந்தாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும்போது முதலில் அதைக் கண்டாள். பார்த்த மாத்திரத்தில் திக்கென்றாகிப் போனது. உடலிலிருந்து வெளியேறிய அத்திரவம் அசூயையைத் தந்ததோடு பயத்தை அதிகம் தந்தது. அம்மாவிடம் ஓடினாள்.

'என்னன்னு தெரியலம்மா. இங்க பாரேன்.'

பாவாடையைத் தூக்கியவளைப் பார்த்து அம்மாவுக்குச் சொரேரென்றது. நெஞ்சில் கைவைத்து நின்றுவிட்டாள். பார்த்தபிறகே மூச்சு வந்தது.

'ஒன்னுமில்லியேம்மா....?'

'இல்ல போ' என்று சொல்லிவிட்டாளேயொழிய தன் உடம்புவாகு வாய்த்துவிட்டதில் சோர்ந்து போனாள். அவளுக்கும் கிட்டத்தட்ட அந்த வயதிருக்கும் போதுதான் பட ஆரம்பித்தது.

'பொண் ஜென்மமே போராட பொறந்த ஜென்மம்' என்பாள் அவள் அம்மா. பழைய உள் பாவாடைத் துணிக்கிழிசல் ஏனோ ஞாபகத்துக்கு வந்தது. சின்னதும் பெரிதுமான நாடுகளின் வரைபடங்கள் போன்ற பரவல்கள். அழுத்தி, கசக்கித் தேய்த்து அலசியும் போகாத சிவந்த ஓரங்கள்.

'நல்லா கசக்கித் தொலை. இல்லாட்டி வீச்சமடிக்கும்.'

அம்மா நறுக்கென்று கொட்டுவாள். மழைநாட்களில் மறைவிடத்தில் காயும் துணியிலிருந்து அடிக்கும் கவிச்சி வாசம் குடலைப் புரட்டும்போது அவள் அம்மா சொன்னதை நினைத்துக்கொள்வாள்.

'கத்தாழைய தோல் சீவிட்டு நல்லா அலசி அடிச்சி மோர்ல கலந்து குடுத்தா வெள்ளைப்போக்கு மட்டுப்படும்.'

டிவியில் நலம்தரும் நாட்டு வைத்தியம் நிகழ்ச்சியில் சொன்னார்கள். அம்மா குறிப்புப் புத்தகத்தை எடுத்து எப்போதும் அருகில் வைத்திருப்பாள். அதையெடுத்து குறித்துக்கொண்டாள். புத்தகம் குறிப்புகளால் நிரம்பி வழிந்தது. குறிப்பெழுத ஆரம்பிக்கும் முன் தவறாமல் பிள்ளையார் சுழி போடுவாள்.

'புள்ளையாரப்பா.. இந்த குறிப்பாவது நல்லா வேலை செய்யணும்.'

அட்சரம் பிசகாமல் முணுமுணுப்பாள். அவ்வப்போது அலைபேசியில் கோகிலாவிடம் ஆலோசனை கேட்பாள்.

நர்சரியிலிருந்து இரண்டு கற்றாழைத் தொட்டிகள் வந்திறங்கிவிட்டன. வாள் போன்ற கற்றாழை வீச்சு, வீச்சாய் வளர்ந்திருந்தது. அதை வெட்டுவதற்கு அம்மா புதுக்கத்தி வாங்கி வைத்திருந்தாள். ஏற்கனவே இரண்டு கத்திகளிருந்தன.

'அதெல்லாம் சாணைப் புடிக்காம கெடக்கு. சரிப்பட்டு வராது.'

அம்மாவுக்குப் புதியதாய்த் தொடங்குவதைப் புதிதிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமென்றிருந்தது. ஏனோ இது கைகூடி வருமென்று தோன்றிவிட்டது. முதல்நாள் மாலை விளக்கேற்றும்போது கத்தியை சாமிப் படத்தின் முன் வைத்து கேசரி நைவேத்தியம் செய்தாள். மனம் விம்மித் தணிந்துவிட்டது. கத்தி பளபளப்பாய் இருந்தது.

'நடு வெரலளவு வெட்டினாப் போதும்.'

வலதுகை கத்தியை இறுகப் பற்றியிருந்தது.

'நாப்பத்தெட்டு நாள் தொடர்ந்து குடிச்சிட்டு வந்தா நின்னுடும்.'

உள்ளே குறிப்பு ஓடியது. ரஞ்சனி வாயில் பிரஷுடன் பின்னால் நின்றிருந்தாள். கற்றாழை மடல்கள் இளம்பச்சையில் செழித்திருந்தன.

'ஏழு தடவை அலசணும். அப்பதான் கசப்பு போவும். நல்லா அலசி மிக்சியில அடிச்சி மோர்ல கலந்து குடிக்கணும்.'

அந்தப் பெண்மணிக்கு நல்ல வளமான குரல். அம்மா ஒரு மடலை வாகாகப் பிடித்து கத்தியை வைத்ததுமே அது வழுக்கிக்கொண்டு இறங்கியது. அவ்வளவு கூர்மை. துண்டாய்க் கையோடு வந்த மடலிலிருந்து சொட்டிற்று கொழகொழப்பான வெண்ஒழுக்கு. ரஞ்சனி ஓங்கரித்தபடி உள்ளே ஓடினாள். அம்மா பட்டெனக் கற்றாழை மடலை வீசிவிட்டு புரட்டிய வயிற்றைப் பிடித்தபடி அமர்ந்துவிட்டாள். ■

# விளையாட்டில் அரசியல்

■ இ.மகாதேவன் ■

**2015**இல் சர்வதேச ஒலிம்பிக் குழு உறுப்பினர்கள் ஒன்றுகூடி, **2022** குளிர்கால ஒலிம்பிக் போட்டியை எங்கு நடத்துவது என்று விவாதித்தபோது, சீன தலைநகர் பெய்ஜிங் என்ற முடிவு சிறிய ஆதரவுடனே வெற்றிபெற்றது. சில லட்சம் கோடி ரூபாய் செலவாகும் என்பதால், பல ஐரோப்பிய நாடுகள் போட்டியில் இருந்து பின்வாங்கிய நிலையில், சர்வதேச ஒலிம்பிக் குழுவிற்கு இரண்டு இடங்கள் எஞ்சியிருந்தன. ஒன்று சீனாவின் பெய்ஜிங், மற்றொன்று கஜகஸ்தானில் உள்ள அல்மாட்டி நகரம்.

இதில், சீனா வெற்றிபெற்றபோது, இது ஒரு பாதுகாப்பான தேர்வு என்று சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் தாமஸ் பாக் மகிழ்ச்சியடைந்தார். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு பெய்ஜிங் சிறந்த தேர்வாக அவருக்குத் தோன்றியிருக்கலாம். ஆனால், இன்று மனித உரிமை மீறல்களுக்காக பலத்த எதிர்ப்பை சீனா சந்தித்து வருவதால், ஒலிம்பிக் குழு சார்ந்தவர்கள் தடுமாறி வருகின்றனர்.

தற்போதைய நிலையில், பன்னாட்டுப் புறக்கணிப்பு அச்சுறுத்தல்கள் குறைந்துவிட்டாலும், பெய்ஜிங்கில் நடைபெறும் போட்டிக்கு தங்கள் இராஜதந்திரப் பிரதிநிதிகளை அனுப்புவதில்லை என்று அறிவித்துள்ள அமெரிக்காவின் நிலைப்பாடு, சீனாவுக்கு தனிப்பட்ட முறையில் எரிச்சலையும், சர்வதேச அளவில் பெரிய சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

டோக்கியோவில் நடைபெற்ற கோடைக் கால ஒலிம்பிக் போட்டி, கொரோனா தொற்று காரணமாக பெரிய நெருக்கடியை எதிர்கொண்ட நிலையில், தற்போது பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டி அரசியல் புறக்கணிப்பு, ஒமைக்ரான் தொற்று பரவல் என்ற இரு நெருக்கடிகளை எதிர்கொள்கிறது.

உய்கர், கசாக்ஸ் பிற இன சிறுபான்மையினரை நடத்தும் விதத்தில், சீனாவுக்கு எதிராக சர்வதேச அளவில் கடும் கண்டனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கற்பித்தல் முகாம்கள், கலாசார அழிப்பு, இனப்படுகொலை, ஹாங்காங்கில் மக்களாட்சி (ஜனநாயக) சார்பு ஆர்வலர்கள் மீதான ஒடுக்குமுறைகள், திபெத், மங்கோலியா, தைவானில் நடைபெறும் ஆக்கிரமிப்பு செயல்பாடுகள் ஆகியவை சீனாவைப் பிறநாடுகளில் இருந்து தனிமைப்படுத்தியுள்ளன.

மார்கழி மாதம் திபெத்திய மாணவர்கள் ஸ்விட்சர்லாந்தின் லொசானில் உள்ள சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைமையகத்திற்கு வெளியே, ஒலிம்பிக் வளையங்களில் தங்களை சங்கிலியால் பிணைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




அமெரிக்க நாடாளுமன்ற அவைத் தலைவர் நான்சி பெலோசி, "பெய்ஜிங்கை குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நகரமாக அனுமதிப்பது, ஒலிம்பிக் சாசனத்தை கேலிக்கூத்தாக்குகிறது. விளையாட்டின் உலகளாவிய நெறிமுறை கொள்கைகளுக்கு மரியாதை அளிக்க வேண்டும்' என்று கூறியுள்ளார்.

விளையாட்டுகளில் அரசியல் ஊடுருவியதற்கு வரலாற்று முன்னுதாரணங்கள் உள்ளன. சோவியத் யூனியன், ஹங்கேரி புரட்சியை நசுக்கியதற்கு பதிலளிக்கும் விதமாக, **1956** கோடைக்கால ஒலிம்பிக் போட்டியில் இருந்து மூன்று ஐரோப்பிய நாடுகள் விலகின. **1976**இல் தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக் கொள்கை தொடர்பான போராட்டத்தால், **20**க்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க, அரபு நாடுகள் போட்டிகளில் பங்கேற்க மறுத்தன.

சோவியத் ஒன்றியம், ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்ததை எதிர்த்து **1980** மாஸ்கோ விளையாட்டுப் போட்டியை **65** நாடுகள் புறக்கணித்தன. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், **1984**இல் லாஸ் ஏஞ்சலீஸில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை சோவியத் ஒன்றியம் தவிர்த்தது.

ஆனால், தற்போதைய நிலையில், அமெரிக்கா கடுமைக் குறைவான புறக்கணிப்பை அறிவித்துள்ளது. குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்காக கடுமையாகப் பயிற்சி செய்து, போட்டியை எதிர்பார்த்திருக்கும் வீரர்களுக்கு தண்டனை விதிப்பது சரியான நடவடிக்கையாகக் கருதவில்லை என அது கூறியுள்ளது.

பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் அமெரிக்காவை வழிமொழிந்து குளிர்கால ஒலிம்பிக் போட்டியை ராஜீய ரீதியில் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன. மனித உரிமைகள் கண்காணிப்பகம், மனித உரிமை மீறல்களைத் தவிர்க்க பெருநிறுவன ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிலையில், கடந்த நவம்பர் மாதத் தொடக்கத்தில், சீன டென்னிஸ் வீராங்கனை பெங் ஷூவாய், முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒருவர் மீது பாலியல் குற்றம் சுமத்தினார். இது ஊடகங்களில் பரவிய நிலையில், அந்த வீராங்கனை காணாமல் போனார்.

சீன கட்சிப் பிரமுகர்களை விமர்சிப்பவர்கள் காணாமல் போகும் நிலையில், வீராங்கனை காணாமல் போனது அச்சத்தை ஏற்படுத்தியது. சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர்கள் கடும் வேதனை அடைந்தனர்.

இந்த நிலையில், குழுத் தலைவர் தாமஸ் பாக், டென்னிஸ் வீராங்கனை பெங் ஷூவாயுடன் **30** நிமிட காணொலி அழைப்புக்கு ஏற்பாடு செய்தார். அப்போது, வீராங்கனை பெங், தான் பாதுகாப்பாகவும், நலமாக இருக்கிறார் எனவும், பெய்ஜிங்கில் உள்ள தனது வீட்டில் வசிக்கிறார் எனவும் விளக்கினார். இதைத் தொடர்ந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் அரசியல் ரீதியிலான புறக்கணிப்பை பாக் நிராகரித்தார்.

மேலும், சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன், "அமெரிக்கா, தனது நடவடிக்கைகளுக்கு உரிய விலை கொடுக்க நேரிடும்' எனக் கூறியுள்ளது, விளையாட்டில் புகுந்துள்ள அரசியல் போர் தொடரும் என்பதையே காட்டுகிறது. மேலும், பல ஐரோப்பிய நாடுகள் சீனாவை விமர்சித்தாலும், அதனுடனான வர்த்தக உறவுகள் பாதிக்கப்படக்கூடும் என்பதால், அதை நிராகரிக்கத் தயங்குவதாகக் கூறப்படுகிறது.

மொத்தத்தில், உலகத் தலைமை கொள்வதற்கான போட்டியில், அமெரிக்கா, தன்னுடைய இடத்தை தக்க வைப்பதற்காக, சீனாவை தனிமைப்படுத்தும் நடவடிக்கையின் ஒருபகுதியாகவே இந்த ராஜீய ரீதியிலான புறக்கணிப்பை அறிவித்துள்ளதாகக் கருதப்படுகிறது. அதை முறியடிக்க சீனாவும் தனக்குத் தெரிந்த அனைத்து வித்தைகளையும் பயன்படுத்தி வருகிறது.

இதற்கிடையே வளரும் நாடுகள், யார் பக்கம் செல்வதென தெரியாமல் தவித்து வருகின்றன. பெய்ஜிங்கில் ஒலிம்பிக் போட்டிகள் நல்லபடியாக நடந்துமுடிந்தாலும், ராஜீய ரீதியிலான புறக்கணிப்புகள் தொடர்ந்த வண்ணம் இருக்கும் என்பதே உண்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானியங்களின் ஆண்டு

**கதிரவன்**


2023 சிறுதானியங்களுக்கான ஆண்டு என்று முழு உலகுக்கும் அறிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் அமைப்பு.

நம் முன்னோர்களால் ஆதி காலத்திலிருந்தே உண்ணப்பட்டுவந்த ஆரோக்கியமான உணவில் முதல் இடத்தைப் பிடிப்பவை சிறுதானிய வகைகளான குதிரைவாலி, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, கம்பு, பனிவரகு, சோளம் போன்றவைதான். அதிக சத்துக்களுடன் நிறைய மருத்துவ குணங்களையும் உள்ளடக்கிய சிறுதானியங்கள் பின்னாளில் ஏழைகளின் உணவாக மட்டுமே பார்க்கப்பட்ட நிலை ஏற்பட்டது. தற்போது அந்த நிலை மாறி, சிறுதானிய உணவுப் பழக்கம் வீடுகளில் தொடங்கி உணவகங்கள் வரை பரவத் தொடங்கியுள்ளது.

பாரம்பரியமிக்க சிறுதானிய வகைகளை உலக மக்களிடையே பிரபலப்படுத்தும் விதமாக இந்தியாவுடன் வங்கதேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, ரஷ்யா, செனகல் ஆகிய நாடுகள் இணைந்து எடுத்த முன்னெடுப்பை 70 நாடுகள் வழிமொழிய ஐ.நா. சபையின் 193 உறுப்பு நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக ஆதரித்ததால், வருகிற 2023ஆம் ஆண்டை சிறுதானியங்களுக்கான சர்வதேச ஆண்டாக ஐ.நா. அறிவித்திருக்கிறது.

**மருந்தாகும் சிறுதானிய உணவுகள்**

உடலுக்கு நல்லது என்று பல உணவு வகைகளைப் பயன்படுத்தும் நாம், சிறுதானிய உணவுகளை உண்பதைக் காலப்போக்கில் மறந்துவிட்டோம். ஆரோக்கியத்தைப் பேணுவதற்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் சிறுதானியங்களில் உள்ளன. சிறுதானியங்களில் நார்ச் சத்து, கால்சியம், இரும்பு, பொஸ்பரஸ் போன்ற தாது உப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதால் நாம் உண்ணும்போது நம் உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கிறது. சிறுதானியங்களில் சத்துக்களுடன் பல மருத்துவக் குணம் கொண்ட நுண்ணுயிர் எதிர்ப்பு வேதிப்பொருட்களும் ஆக்சிஜனேற்ற எதிர்ப்பொருட்களும் உள்ளன. சிறுதானியங்களில் உள்ள கிளைசிமிக் இன்டெக்ஸ் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்தது.



இதிலுள்ள மாவுச்சத்து மெதுவாகச் செரிமானமாவதால் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்த உணவு ஆகும். சிறுதானியங்களில் உள்ள லிக்னின் என்ற பொருள் மருத்துவக் குணம் உடையது. இது குடல் சுத்தமாவதற்கு மிகவும் உதவுகிறது. மாதவிடாய் பிரச்சினை, இதய நோய், குருதி அழுத்தம் போன்றவற்றைச் சீராக்கும் வல்லமை சிறுதானிய உணவுக்கு உண்டு. குழந்தைகளுக்கு ஆஸ்துமா, தும்மல் போன்ற பிரச்சினைகள் வராமல் சிறுதானியங்கள் தடுக்கின்றன. சிறுதானியங்களில் உள்ள பொஸ்பரஸ், மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்கள் உடல் செல்களை உறுதிப்படுத்தி எலும்புகளுக்கு உறுதி அளிக்கின்றன.

**சாகுபடிக்கேற்ற சிறப்பியல்புகள்**

சிறுதானிய சாகுபடியால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், அவை நம்முடைய சூழலுக்கு எவ்வாறு ஏற்றதாக உள்ளன என்பது பற்றியும் பெரும் பகுதியினருக்குத் தெரிவதில்லை. சிறுதானியங்கள் எளிதாக அனைவரும் சாகுபடி செய்ய ஏதுவான பல சிறப்பியல்புகளைக் கொண்டவை. நெல் விளைவதற்கு 120-180 நாட்கள் மற்றும் அதிக அளவு தண்ணீர் (1,000 - 4,500 மி.மீ) தேவைப்படும். ஆனால், சிறுதானியங்களுக்கு குறைவான அளவு தண்ணீர் (250-400 மி.மீ) இருந்தாலே போதுமானது.

பெரும்பாலான சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் அதாவது 65-90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். மிதமான தட்பவெப்ப நிலையிலும் நன்றாக வளரக்கூடியவை, மண்வளம் குறைந்த இடங்களிலும் சாகுபடி செய்யலாம், பெரும் போகச் செய்கைக்கும் ஏற்றவை, வறட்சியைத் தாங்கி வளரக்கூடியவை, சிறுதானியங்கள் சாகுபடியில் பூச்சி, நோய்த் தாக்குதல் மிகக் குறைவு. மற்ற பயிர்களுக்குக் கொடுப்பதைப் போல அதிகமான ஊட்டத்தை சிறுதானியப் பயிர்களுக்குக் கொடுக்கத் தேவையில்லை.

குறைவான அளவுக்குக் கொடுத்தாலே போதுமானது. நெல் மாதிரியான பகலில் 'பூக்கும்' பயிர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறும்போது, அதிகமான வெப்பம் இருந்தால் சரியான முறையில் விதைகள் உற்பத்தியாகாது. ஆனால், சிறுதானியப் பயிர்கள் அனைத்தும் இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணிக்குள் மகரந்தச் சேர்க்கையை முடித்துக்கொள்வதால், வெப்பநிலைப் பிரச்சினைகள் இல்லாமல் முழுமையான அளவில் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று அதிக மகசூல் கிடைக்கும். புவி வெப்பமாதலால் ஏற்படும் இழப்புகள் சிறுதானியத்தில் மிகவும் குறைவு. சிறுதானியச் சாகுபடியில் குறைந்த அளவு வேலையில், குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதானியங்கள் சாகுபடி பெரும் பங்கு வகிக்கிறது.

சிறுதானியப் பயிர்களில் ஒன்றான சாமையில் மலயச்சாமை, பெருஞ்சாமை, வெள்ளச்சாமை, கட்டவெட்டிச்சாமை, திருகுலாச்சாமை, சடஞ்சாமை, கருஞ்சாமை, செஞ்சாமை, சிட்டஞ்சாமை, பில்லுசாமை போன்ற நாட்டு ரகங்கள் இந்தியாவில் இல்லாமல் தினையில் கெண்டித்தினை, செந்தினை, மரத்தினை, பாலாந்தினை, வெள்ளைதினை, பைந்தினை, சிறுதினை, நாட்டுத்தினை, மாப்புத்தினை போன்ற நாட்டு ரகங்களும். வரகுப் பயிரில் திரிவரகு, புறவரகு, பெருவரகு, உடும்புக்காலி வரகு, செங்காலி வரகு, சிட்டுக்கீச்சான் வரகு போன்ற நாட்டு ரகங்களும்... கேழ்வரகுப் பயிரில் சாட்டைக் கேழ்வரகு, காரக் கேழ்வரகு, கண்டாங்கிக் கேழ்வரகு, பெருங்கேழ்வரகு, பிச்சாகாடிக் கேழ்வரகு போன்ற ரகங்களும் பரவலாகக் காணப்படுகின்றன. எனினும் இலங்கையில் இவற்றில் மிகச் சொற்பமான ரகங்களே இப்போது பயிரிடப்பட்டு வருகின்றன.

சோளத்தில் செஞ்சோளம், கருஞ்சோளம், உப்பஞ்சோளம், கருப்பு ரட்டு சோளம், சிகப்பு ரட்டு சோளம், கோவில்பட்டி மொட்ட வெள்ளைச் சோளம், அரியலூர் நெட்ட மஞ்ச சோளம் போன்ற நாட்டு ரகங்கள் இந்தியாவில் உண்டு. பனிவரகு என்பது அற்புதமான ஒரு சிறுதானியம், பனிக்காலத்தில் எந்தப் பாசனமும் இல்லாமலேயே பனிப்பொழிவினால் கிடைக்கும் நீரிலேயே வளர்ந்துவிடக் கூடியது.

கொரோனா பெருந்தொற்று பரவத் தொடங்கியதிலிருந்து மக்களின் உணவு முறையில் ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் நிறைந்த உணவு வகைகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. அது தொடர்பான விழிப்புணர்வு அதிகளவில் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இவ்வளவு சிறப்பு மிக்க நம் நிலத்தின் பயிர்களான சிறுதானியச் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, கவனம் செலுத்துவதன் மூலம் உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி, விவசாய நிலங்களின் சூழலியல் சமநிலையையும் பாதுகாத்து சிறுதானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

அரசு சேதன விவசாயத்தை ஊக்குவிப்பதைப் போலவே இந்த சிறுதானியப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கவும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அசேதன உரத்தை நிறுத்தியதைப் போன்றல்லாமல் சரியான சிறப்பான திட்டமிடலுடன் அதனைச் செய்ய வேண்டும். ■

**வரலாற்றைத் ...**

வேளாளர் பரம்பரை வாழ்கின்றது. இதைவிட வத்தை என்ற விகுதியில் முடியாத பல ஊர்களிலும் இவர்கள் வியாபித்துள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க வத்தை என்ற ஊர்ப் பெயர்களின் விளக்கம் தெரியாமல் நமது அரசியல்வாதிகள் சிங்களப் பகுதிகளில் உள்ள வத்தைப் பெயர்களைக் கொண்ட ஊர்கள் எல்லாம் தமிழருக்குச் சொந்தமானவை என உரிமை கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கோவியர் என்கிற இந்தச் சிங்கள வேளாளர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் போன்று தென்னிந்திய இனக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் தோற்றத்தில் வித்தியாசம் இல்லை. யாழ்ப்பாண வேளாளர்கள் தமக்குக் கீழ் இருந்த சாதிகளை ஒடுக்கவும், கண்காணிக்கவும் அவர்களிடமிருந்து வேலை வாங்கவும் கோவியர் என்ற சிங்கள வேளாளர்களைப் பயன்படுத்தினார்கள்.

இந்தச் சாதியினர் தமிழில் கோவியர் அல்லது கோயிலார் என்றும் அழைக்கப்பட்டனர். மன்னாராட்சியில் நடந்த சண்டைகளில் பின்களப் போராளிகளாகக் காயப்பட்ட போர் வீரர்களைச் சுமப்பவர்களாகவும் கோவில்களில் சாமி காவுபவர்களாகவும் இருந்தனர். பின்னர் தமது வாழ்வாதாரத்துக்காகப் பிணம் தூக்குபவர்களாகவும் இறந்த வீட்டில் கூலிக்கு மாரடித்தல் என மார்பில் அடித்து அழுபவர்களாவும் இருந்துள்ளனர். அவர்களைத் தவிர மற்றைய எல்லாச் சாதியினரும் தென்னிந்திய சாதியை ஒத்தவர்களாகவே இங்கும் இருக்கின்றனர்.

இதுவரை எழுதப்பட்ட வரலாற்று ஆய்வு நூல்களையும் தெல்லியல், மானிடவியல் ஆய்வுகளையும் தமிழ் மக்கள் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். ஓர் இனத்தின் வரலாற்றை அரசியல்வாதிகள் எழுந்தமானத்தில் பேசிவிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

சிங்களவர்கள் பேசுவதைப் போன்றே வரலாற்றைத் திரிபுபடுத்தி தமிழ் அரசியல்வாதிகளும் பேசக்கூடாது. யாழ்ப்பாணத்தை யாழ்பாடிக்குப் பரிசாக வழங்கியமை பற்றி யாழ்ப்பாண வைபவ மலையில் குறிப்புகள் உண்டு. ஒல்லாந்து அதிகாரி ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க மயில்வாகனப் புலவரால் 1736 வரலாற்றை தொகுத்து எழுதப்பட்ட நூல் இது. இதை எழுதுவதற்கு அவர் கைலாய மாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா. இராசமுறை ஆகிய நூல்களை மூல நூல்களாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

அவ்வாறு பார்த்தால் யாழ்ப்பாணத்தின் பிதாமகனான யாழ்பாடியின் வரலாற்றை யாழ்ப்பாணத் தமிழர்கள் மறந்துள்ளனர். யாழ் பாடிக்கு ஒரு சிலையோ, நினைவுச் சின்னமோ எழுப்பாதிருப்பதுகூட யாழ்ப்பாணத் தமிழர் வரலாற்றை தென்னிந்தியாவுடன் தொடர்புபட்டதல்ல எனக் கட்டுவதற்காக மறைக்கப்பட்டதா என்பதும் ஆராயப்பட வேண்டும். யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும், யாழ் மாநகர சபையும் அறிக்கை ஒன்றின் மூலமாக யாழ்பாடிக்கு ஏன் சிலை வைக்கவில்லை என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் நியாயமானது. இனிவரும் காலங்களிலாவது வரலாற்றைத் தெளிதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிழற்றும் மொழி அமிழ்தமாகிறது

கி.சேதுபதி

ஒரு சொல், ஒற்றைச் சொல் மட்டுமல்ல. ஓராயிரம் சொற்களை விளைவிக்கவல்ல நெல்மணியை ஒத்தது. களஞ்சியத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு, களத்தில் விதைக்கப்படும் ஒரு தானிய மணி, உரிய முறையில் விளைந்து, ஓராயிரம் தானிய மணிகளை எவ்வாறு உருவாக்கித் தருமோ, அப்படிப்பட்டதுதான், நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும்.

நெல்மணிகளை மண்ணில் விதைப்பதுபோல, சொல்மணிகளை மனங்களில் விதைக்க வேண்டும். அதற்கேற்ற கழனிகள் நிகர்த்தவை, மழலைகள் ஆகிய பிள்ளைகள். அவர்கள் மனங்களில், தானே விழுந்து முளைப்பவையும் உண்டு. அவை கவையாகிக் கொம்பாகிப் பயன்தரும் பழமரங்களாகப் பரிணமிக்கும் ஆற்றல் உடையவை; சுவையாகிப் பின்னர் கேட்போர்க்குச் சுவைக்கத் தருகிற தேன்நிறை இசையாக மலர்கிற அழகும் உடையவை; மனம் நிறைக்கும் மணமும் தருபவை.

பொருள் அறிந்தோ அறியாமலோ முதன்முதலில் தன் செவியில் விழுந்த சொல்லைப் பலபட நாவசைத்துச் சொல்லிப் பார்க்கும் மழலை, அதற்கு இனமான எதுகைகளையும் மோனைகளையும் இணைத்துச் சொல்லும் இணைச் சொற்களையும் எதிர்ச்சொற்களையும் தானே உருவாக்கிக்கொள்ளும். "வைக்காதே' என்று கட்டளையிடும் சொல்லுக்கு எதிராக, "நான் அப்படித்தான் வைப்பேன்' என்று உறுதிபட மொழிய நினைக்கும் குழந்தை, "வைக்கேன்' என்பதுண்டு. "கிடையாது' என்பதற்கு மழலை மொழியின் எதிர்ச்சொல், "கிடையும்'.

கொஞ்சம் நேரம் ஒதுக்கி, அவரவர் தத்தம் குழந்தைகளிடம் கொஞ்சிப்பார்த்தால், இப்படிப் புதிய புதிய சொற்களைச் செவிமடுக்கலாம். அவை, அவரவர்க்கே உரிய குரல்களில் இசையொழுங்கோடு பிறப்பதையும் கேட்டு அனுபவிக்கலாம்.

ஒரு சொல்லை, எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி சொல்வது இல்லை. ஒவ்வொன்றுக்கும் சுருதி பேதம் உண்டு. அவை அபசுருதியாகாமல் சுபசுருதியாக மலர்வதைக் கேட்பது சுகம். பத்துக் குழந்தைகளைப் பக்கத்தில் வைத்துப் பாடம் சொல்லிக்கொடுக்கிறபோது இந்தச் சுகத்தை நான் மிகமிக அனுபவித்து மகிழ்ந்திருக்கிறேன். அப்போது, எனக்குள் ஆயிரம் சிந்தனைப் பூக்களைச் செந்தேன் சுவையுடன் மலர்த்தித் தந்தது, இந்தத் திருக்குறள்.

**குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்**
**மழலைச் சொற் கேளாதவர்**


குழலும் யாழும் கருவிகள். அவை உயிரற்றவை. அவற்றுக்கு உயிரளிப்பது வாசிப்பவர்களின் உணர்வு. முன்னதாய்ச் சொல்லப்படும் கருவியை முத்தமிட்டு முத்தமிட்டு உயிர்மூச்சை உட் செலுத்தினால் உண்டாவது இசை. குழல் நமது ஆதிக் கருவி. புல் இனத்து மூங்கிலை வண்டு துளைத்துவிட, இளம் காற்று உள்புகுந்து முன்மொழியத் தோன்றிய இசையைக் கண்டு எடுத்த முதற் கலைஞன் யாரோ, அவன்தான் புல்லாங்குழலை இயற்கையிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். அது புல் ஆம் குழல்.

அசையும் மூங்கிலில் துளைக்கப்பட்டு விளங்கும் துளைவழியாக உள் சென்று வெளிவந்த கோடையாகிய மேற்காற்று குழல் இசையைக் கொடுக்கின்றது. இது இயற்கை விளைத்த இசைக்கருவி. இதை, அகநானூற்றுப் பாடல் ஆக்கி இசைக்கிறார் கபிலர்.

**ஆடமைக்குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழல் இசையாக (அகம்-82)**

கண்டு, எடுத்துக் காலகாலத்திற்கும் இசைக்கிற கருவியாய் ஆக்கிக் கொடுத்தவன் இறை நிகர்த்தவன். மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தவனுக்கும், காடுஉடைய முல்லை நிலத்தவனுக்கும் சொந்தமானது குழல். குழல் உடைய முருகனைக் குழலன் என்று "திருமுருகாற்றுப்படை' குறிக்கிறது. மாயவனாகிய கண்ணனுக்கு இசைந்த கருவியாய்க் குழலைக் கொடுத்தவை, நமது இலக்கியங்கள். இதற்கு மூச்சுக் காற்றே முதல். முத்தமிடும் குழந்தை, இரகசியமாகச் செவிக்கு அருகில் செந்தேன் சொரியச் சொல்லும் அனுபவத்தை, இந்த இசையோடு ஒப்பிட்டுப் பார்த்து உணரலாம். அப்போது அது மொழியும் உறவுச் சொல், உயிர்ச் சொல்லாய்ப் பரிணமிக்கும் அற்புதம், எழுதி மாளாது.

அடுத்ததாய்ச் சொல்லப்படும் கருவி யாழ். நரம்புகளால் யா(ஆ)க்கப்பட்டமையால், இது யாழ். நரம்புக்கருவிகளுக்கெல்லாம் ஆதிக் கருவி இது. வேட்டைக்குப் பயன்படுத்திய வில்லையே யாழாகப் பயன்படுத்தியவனின் உள்ளத்து இசைதான் இதன் முதல் மெல்லிசையாக ஒலித்திருக்க வேண்டும். வில்யாழில் இருந்துதான் விதவிதமான யாழ்கள் தோற்றம் கொண்டன. இதனை, ஆரத் தழுவி அணைத்து மெல்விரல் கொண்டு மீட்டுவதால் உருவாவது நல்லிசை. ஓடிவந்து தோள் தழுவி இறுக அணைத்துக் கொள்ளும் குழந்தையை மடியில் கிடத்திய பிறகு, அது சொல்லத் தொடங்கும் அனுபவங்களைச் செவிமடுத்தால் அதனைவிட அதிசய இராகம் வேறு ஏது?



இந்த மழலை அவரவர் தாம் பெற்ற சொந்த மழலையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. சொந்தம் என்று சொல்லிக் கொள்ளாமலேயே பந்தமாகிவிடுகிற பாசத்தால் உருவாகிற தன்மை உடையவை. தாய் மாமனை விடவும் தாங்கிக் கொள்கிற வாடகைக்கு வந்து குடியிருக்கும் புதுமாமன் குழந்தையின் நேசத்துக்கு உரியவன். தாய்ச்சொல்லைக் கூடத் தவிர்த்துவிடும் குழந்தை, அது பயிலும் வகுப்பு "மிஸ்' சொல்லை, "மிஸ்' பண்ணுவதே இல்லை.

**நாவொடு நவிலா நகைபடு**
**தீம் சொல்,**
**யாவரும் விழையும் பொலந்தொடிப்**
**புதல்வனை, (அகநானூறு: மருதம்: 16)**

வாரியணைத்த பெண்ணொருத்தியைப் பார்த்து, "நீயும் தாயை இவற்கு' எனக் கூறிய மருதநிலத் தாய் சங்க இலக்கியத்தில் இன்னும் வாழ்கிறாள்.

இப்போதிருக்கும் அவசர யுகத்தில் பெற்ற பிள்ளைகளைக் கொஞ்சும் நேரம் பெற்றோர்க்கு வாய்ப்பதில்லை. தத்தம் பிள்ளைகளைக் கொஞ்சமுடியாத குறையைப் பேரக்குழந்தைகளைக் கொண்டு தீர்த்துக் கொள்கிறார்கள் பெரியவர்கள். அதுவும் இந்த பொதுமுடக்கக் காலத்தில், கேட்டு மகிழ்ந்த மழலைச் சொற்கள் மிகமிக அதிகம். திட்டப் பயன்படுத்திய சொற்களைக் கூட, திகட்டாத அமுதமாகத் திருப்பி வழங்கிய குழந்தைகள் பலர். இந்தப் பின்புலத்தோடு திருக்குறளை இணைத்துப் பார்த்தால், அது மழலையிசையின் மாண்பை, விரித்துக்கொண்டே செல்வதை அனுபவித்து உணரலாம்.

குழலையும் யாழையும் கொண்டுவந்து இசைத்துக் காட்டி, குழந்தையின் மழலைக் குரலுக்கு இவை இணையில்லை என்று மூடிவைக்கிற அழகில்தான், திருக்குறள் இசைநூலைவிடவும் இனிமையாகிறது.

இதற்கு உரையெழுதிய காலிங்கர், "பரதம் பற்றிய குழலின் ஓசையும் பண்ணினைப் பற்றிய யாழின் ஓசையும்' எனக் குறித்துள்ளார். குழல் நாட்டியத்திற்கு உரியது. அதாவது பரதத்திற்குப் பக்கவாத்தியம் (வங்கியம்). யாழ் இசைக்குரிய துணை வாத்தியம். இதனை இன்னும் நயம்பட விளக்குவார் தண்டபாணி தேசிகர். "யாழோசை போல மழலைச் சொல் மனம் ஒன்றச் செய்வது எனவும், பரதத்திற்குத் துணையான குழலோசை போல மழலை சுவைத்து மெய்ப்பாட்டால் ஆடவும் செய்வது எனவும் அறிய உதவுகிறது' என்பது அவர்தம் விளக்கம்.

ஆட முடியாத பாட்டியை ஆட்டுவிப்பதும், பாட முடியாத பாட்டனைப் பாட்டுவிப்பதும் இந்த மழலைகள் அல்லாமல் வேறு யார்? தங்களை முதுகில் சுமக்கும் யானைகளாய்ப் பெரியவர்களை ஆக்கிவிடுவதில் இவர்களுக்கு நிகர் எவர்? "ஆனை ஆனை ஐயா யானை' என்று தானே பாடும் குழந்தைதானே, பின்னர் கவிஞனாகிறது.

இவ்வாறு, பேசுமொழி யாவும் ஆசுகவி ஆக விடாமல் அதட்டி, ஆங்கிலம் புகட்டப்படுவதால்,அவர்கள் இதழ்களில், தானே உதயமாகும் தாய்மொழி மறுக்கப்படுவதால், அனேகக் குழந் தைகள் தத்தம் மழலைமையை இழக்கிறார்கள் என்பதை மீளவும் வலியுறுத்துகிறது, இந்தக் குறள்.

மழலை மிழற்றும் அமுத மொழி "தமிழ்' என்று சொல்வதில் தயக்கம் தேவையில்லை. இதைத்தான் "தென்றலுடன் பிறந்த பாஷை' என்று மொழிகிறார் மகாகவி பாரதி.

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்' என்று பாடினார் பாரதிதாசன். வாயைத் திறந்ததும் வருகிற காற்றில் ஒலியாய் விளைவது மொழி. மொழியப்படுவதால்தான் மொழி.

திருவள்ளுவர் காட்டும் மழலைச் சொல் எந்த மொழிக்கு உரியது? அவரவர்தம் சொந்த மொழிகளுக்கெல்லாம் உரியது. அது எது? அவரவர்தம் பெற்றோர் பேசும் மொழி. அதனால்தான், "தம் மக்கள்' என்ற தனிச்சொல்லை, மழலைக்கு முன்னர் வைக்கிறார் அவர். அது தாய்மொழியாகவும் இருக்கலாம்; தந்தை மொழியாகவும் இருக்கலாம். தாயும் தந்தையும் வெவ்வேறு மொழிக்காரர்களாய் இருந்தால், பேசப்படும் மொழி, இரண்டுக்கும் உரியதாகத்தானே இருக்கும்? அண்டை வீட்டார் இரண்டு மொழிகளும் அறியாதவர் ஆயின், அவர்வீட்டு மொழியையும், குழந்தை, தானே கற்றுக் கொள்ளும் என்பதே நடைமுறை உண்மை.

**ஐய! காமரு நோக்கினை, "அத்தத்தா'**
**என்னும் நின்**
**தே மொழி கேட்டல் இனிது (கலித்தொகை: 80)**

என்கிறார் மருதனிளநாகனார்.

மேலும், இந்தக் குறள் இன்னொரு நுட்பத்தையும் எடுத்து விளக்கக் காணலாம், மழலையின் இனிமைக்கு உவமையாக எடுத்துச் சொல்லி, விளக்கிக் காட்டிப் பின்னர் விலக்கவும் படுகிற இக் கருவிகள் இரண்டும் நம் ஆதிக்கருவிகள். எடுத்தவுடன் இக்கருவிகள் பாடலைத் தருவது இல்லை. சற்றே சரிசெய்யும் வரை, அவை தன் போக்கில்தான் ஒலியெழுப்பும். மழலை மொழியின் மாண்பும் அத்தகையதுதான்.

புத்தம்புது இராகங்கள் இந்தக் கருவிகளில் இருந்து புறப்படுவதுபோல, புத்தமுதச் சொற்களை விளைக்கும் உயிர்த்தன்மை, மழலைக்கு உண்டு. கவனித்துப் பார்த்தால், அகராதிகளில் அகப்படாத பல புதிய சொற்களை, குழந்தைகளின் குரல் வழியாகச் செவிமடுக்கலாம்.

ஆக, மழலை தன் நாவில் மிழற்றும் மொழி அமுதம் ஆகிறது. மொழிய மொழியத்தான் வளரும் மொழி. பெரியவர்கள் பேசுவதைவிடவும் பிஞ்சுமழலைகள் பேசும்போதுதான், மொழிக்கு உயிராற்றல் வருகிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-ஆன்கொலின்-



**அண்மையில் வெளியாகி யாழ்ப்பாணத் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடி முடித்த "புத்திகெட்ட மனிதரெல்லாம்" திரைப்படத்தின் இயக்குநர் ராஜ் சிவராஜ். தின்னவெலியைப் பூர்வீகமாகக் கொண்டவர். அவருடனான சிறிய உரையாடல் இது...!**

**யாழ்ப்பாணத்திரையரங்குகளில் ஓடி முடித்துத் தலைநகரிலும் படத்தைத் திரைப்படுத்தியிருக்கிறீர்கள். பார்வையாளர்களின் வருகை எப்படியி ருந்தது?**

கொழும்பில் ஹவுஸ் புள் என்டில்லை. ஆனால் ஒரு 75வீதமான கிறவுட் இருந்தது. யாழ்ப்பாணத்திலைதான் 75வீதத்தையும் தாண்டியிருந்தது. இங்க - யாழ்ப்பாணத்தில ஹவுஸ் புள்தான். முதலில் 3 நாள்கள் ஓடுவதாக அறிவித்து அதற்குக் கிடைச்ச றெஸ்பொன்சால யாழ்ப்பாணத்தில இப்ப வரைக்கும் ஓடிக்கொண்டிருக்குது படம்.

**யாழ்ப்பாணத்தில 3 நாள்கள்... அதுவும் இருக்கைகள் நிறைந்த பார்வையாளர்கள்...! இதை எப்படிச் சாத்தியப்படுத்தினீர்கள்...?**

ஈழச் சினிமாவிலை இவ்வளவு நாளும் சாத்தியப்படேல்ல. முந்தி நடந்திருக்குது. குத்துவிளக்கு அந்தக் காலத்தில... 80ஆம் ஆண்டு... அதற்கு முதல் காலங்களிலை வந்த படங்கள் 50நாள், 100நாள் ஓடுறதெல்லாம் சும்மா சர்வ சாதாரணமாக நடந்திருக்கு...! பிறகு வந்த படங்கள் ஒண்டும் அப்பிடி ஓடேல்ல. ஒரு நாள் ஓடுறதே பெரிய விசயமாயிருந்தது.

எங்கட அதையும் தாண்டி ஓடியிருக்கு.

அதுக்குக் காரணம்..., எங்கட மக்கள் கதைக்கிற மொழியில நாங்கள் படம் எடுத்துதான். அதாலதான் எங்கட படத்தை வந்து ஆதரிச்சிருக்கினம் என்டு நினைக்கிறன். நானும் நீங்களும் கதைக்கிற வழமையான மொழியிலதான் படம் இருக்கு. போருக்குப் பின்னரான படங்கள் வந்து இப்பிடியிருந்ததில்லை. பெரும்பாலும் இங்க எடுத்த படங்கள் இங்க நடக்கிற கதையா இருக்காது அல்லது யாழ்ப்பாணத்தில நடக்கிற படமா இருக்காது இலங்கையில நடக்கிற படமா இருக்காது. அது வந்து இந்தியச் சாயலில இந்தியாவிலயிருந்துவாற படம் மாதிரி ஒரு பார்வையில தான் முதல் வந்த படங்கள் ரெண்டு, மூண்டு இருந்தது. ஒண்டு, ரெண்டு விதிவிலக்கா வந்தாலும் பெரும்பாலும் அப்பிடித்தான் இருந்தது. அப்ப அதை வந்து மக்களாள ஏற்றுக்கொள்ள ஏலாம இருந்தது. இதை எங்கட படம் என்டிற காரணத்தாலதான் மக்கள் எங்களுக்கு இவ்வளவு ஆதரவு தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறன்.

மற்றது நாங்கள் வந்து மக்களைத் தேடிப்போனாங்கள். நாங்கள் தனிய சோஷல் மீடியாவில மட்டும் பரப்புரையளைச் செய்யேல்ல. கிட்டத்தட்ட ஒரு எலக்சன் பரப்புரை மாதிரி நாங்கள் யாழ்ப்பாணத்தில இருக்கிற எல்லா இடங்களுக்கும் மக்களைத் தேடிப் போனாங்கள். கிராமங்களுக்கு எல்லாம் நேராய்ப் போய் மக்களைச் சந்தித்து இப்பிடியொரு படம் வருகுது. நாங்கள் இப்பிடி யாழ்ப்பாணத்திலையிருந்து படம் எடுத்தனாங்கள். உங்களை நம்பித்தான் எடுத்தனாங்கள். ஏலுமெண்டால் தியெட்டருக்கு வந்து பாருங்கோ, இந்தப் படம் இப்பிடி வருகுதெண்ட விசயத்த மக்ஸிமம் எவ்வளவு தூரம் எல்லாருக்கும் கொண்டு போய்ச் சேர்க்க முடியுமோ அவ்வளவுக்கு முயற்சி எடுத்தனாங்கள். இவையெல்லாம் தான் படம் சிறப்பாக ஓடுவதற்குக் காரணங்களாயிருக்கும்.

எல்லாத்தையும் தாண்டிப் படம் நல்லா இருக்கு. முதல் தரம் படம் பார்த்திட்டு வாறவர்கள் இந்தப் படம் நல்லா இருக்கு ஓகேயா இருக்கு எண்டு சொல்லுறது இருக்குத்தானே எங்கட படமா இருக்கு எண்டுற அந்தப் பெயர்தான் நான் நினைக்கிறன் சனி, ஞாயிறு ஹவுஸ் புள்ளா ஓடினதுக்குக் காரணமா இருக்கும் எண்டு.

**இந்தப் படத்தை எடுத்து முடிப்பதற்குச் சாவல்களாக இருந்த விடயங்கள், எதிர்நோக்கிய சிக்கல்கள் என்றால் எவற்றைக் குறிப்பிடுவீர்கள்?**

இந்த முயற்சிக்கே பெரிய சிக்கல் பணம்தான். எங்களிட்ட இருக்கிற வளங்கள்தான் எங்கட முதலீடு. எங்களிட்ட இருக்கிற திறமையெண்டாலும் சரி இருக்கிறதை வைச்சுக்கொண்டுதான் இந்தப் படத்தைச் செய்தனாங்கள். இல்லாததைப் பற்றி யோசிக்கேல்லை. பணமில்லை எண்டு போட்டு அதைப்பற்றி யோசிச்சுக்கொண்டிருக்காம இவ்வளவுதான் இருக்கு இதை வைச்சுக்கொண்டு எப்பிடியொரு படம் செய்யலாம் அந்தப் படத்தை எப்பிடிச் செய்யலாம் எண்டுறதுதான் எங்கடை கென்செப்ட்.

நாங்கள் இந்தப் படம் எடுத்ததுகூட ஒரு "விசிற்றிங் கார்ட்" மாதிரித்தான். அதுக்கு முதல் நாங்கள் போய் நிறையப்பேரிட்டக் கதை சொல்லுறனாங்கள். இப்பிடியான படம் ஒண்டுக்குக் கதை எழுதி வைச்சிருக்கிறம் எண்டு சொல்லுறதுக்கு நிறைய முயற்சியெல்லாம் எடுத்தனாங்கள். ஆனா அதுகள் சரிவரயில்லை. பலர் கதை கேட்கிறதுதான் பேந்து இல்லையெண்டு சொல்லுறது. அப்ப நாங்கள் ஓகே ஒண்டு செய்து காட்டுவம் படம் ஒண்டைச் செய்து காட்டுவம் இந்தப் படத்தை ஒரு விசிற்றிங் கார்ட்டா யூஸ் பண்ணுவம். நாங்கள் யாரெண்டு கேட்டால் நாங்கள் இந்தப் படம் எடுத்த ஆக்கள்... இனி நீங்கள் எங்களை நம்பிக் காசைப் போடலாம் என்டுற ஒரு விசயத்துக்காகவும்தான் நாங்கள் எங்களிட்ட இருக்கிற எல்லாத்தையும் போட்டுச் செய்தம். எங்கட உழைப்புத்தான் பட்ஜெட். இந்த வசனம் படத்திலையும் வருகுது. அந்த பட்ஜெட்தான் எங்களுக்குப் பெரிய பிரச்சினையா இருந்தது.

பட்ஜெட்டைச் சமாளிப்பதற்கு எங்கட உழைப்பைக் குடுத்தனாங்கள். எங்கள் குழுவின் தனிப்பட்ட முதலீடுதான் இந்தப் படம். நாங்கள் குழுவாக இருந்தால்தான் இதில் தொடர்ந்து பயணிக்கலாம். ஓராள் இருந்துகொண்டு எதுவும் செய்ய ஏலாது. ஒரு ரீமைக் கட்டமைச்சுக்கொண்டு இருந்தனாங்கள். ஒரு அஞ்சாறு வருசமா அந்த வேலையள்தான் செய்தண்டு இருந்தனாங்கள். அந்த ரீமைக் கட்டமைச்சுப்போட்டு அந்த ரீமை வைச்சுக்கொண்டு ஒரு படத்தை எடுத்திருக்கிறம்.

**படத்தில் மேம்படுத்தப்பட வேண்டியவை என்று நீங்கள் உணர்ந்த விடயங்கள் எவை?**

ரெக்னிக்கலா நாங்கள் இன்னும் கொஞ்சம் இம்புறு பண்ணவேண்டிய இடங்கள் இருக்கு. இது எங்கட முதலாவது படம் எண்டபடியால் நாங்கள் விட்ட சின்னச் சின்ன பிழையள் எல்லாத்தையும் மக்கள் பெரிசுபடுத்தேல்ல. அந்தப் பிழையள் எங்களுக்கும் தெரியும். ரெக்னிக்கலாதான் அந்தக் குறைகள் இருக்கு. அடுத்தடுத்த படங்களில அந்தக் குறையள் தயாரிப்பாளர் எண்டு வரேக்க இல்லாமல் போகும். அதையும் தாண்டி மக்களுக்கு என்ன பிடிக்குது என்ன பிடிக்கேல்ல எண்டுறதை இந்தப் படத்தின் மூலமா தெரிஞ்சு கொண்டன். எங்கட நூறு வீதமா படத்தைக் குடுத்திருக்கிறம். அதிலை 75 வீதம் மக்களுக்குப் பிடிச்சிருக்கு. மீதி 25 வீதம் மக்களுக்குப் பிடிக்கேல்ல அப்ப அந்த 25 வீதம் என்ன பிடிக்கேல்ல எண்டுறதும் இந்தப் படத்தின் மூலம் விளங்கினது. படத்தை மக்களோட கூட இருந்து பார்க்கேக்க நான் நினைச்சிருப்பன் இந்தச் சீனுக்குச் சிரிப்பாங்கள் எண்டு ஆனா அந்த இடத்தில சிரிக்க மாட்டாங்கள் நல்லா இருந்திருக்காது இந்த இடத்தில சிரிக்கமாட்டா ங்கள் எண்டு நினைச்சிருக்க அந்த இடத்தில சிரிக்கிறாங்கள் அப்பிடியான உணர்வு வந்து எங்களுக்குத் தியெட்டரிலை கிடைச்சுது. அந்த அனுபவத்தை இந்தப் படம் குடுத்திருக்கு.

இதிலுள்ள பிரச்சினையளை வைச்சுக்கொண்டு இனி அடுத்த படம் வந்து இதைத் தாண்டின படமா இருக்கும். இருக்கோணும் எண்டுறதுதான் எங்கட எண்ணம்.

**இந்தப் படம் குறித்தத விமர்சனங்கள் பற்றி உங்களின் கருத்து என்ன?**

இது முதல் படம் அதாலை இந்தப் படத்திலையிருக்கிற குறைகளைக் கதைக்கயில்லை என்டுறதைத் தான் நான் எடுத்துக்கொள்ளுறன். இதிலையிருந்து எங்களுக்கு ஒரு பெரிய பொறுப்பைத் தந்திருக்கினம். எங்களிலை ஒரு நம்பிக்கை வைத்துத்தான் அந்தப் பிரச்சினையளைக் கதைக்காம விட்டிருக்கினம். இல்லாட்டிச் சிம்பிளா எங்களை அடிச்சு நொருக்கியிருக்கலாம். இதெல்லாம் ஒரு படமா. இந்தப் பிழையெல்லாம் விட்டிருக்கிறாங்களே எண்டு சொல்லி எங்களை இது... பண்ணியிருக்கலாம். ஆனால் எங்கட ரீமில ஒரு நம்பிக்கையிருந்திருக்கு அவங்களுக்கு. இவங்கள் இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்க்கக்கூடிய ஆக்கள். இந்தப் பிரச்சினையைச் சரிசெய்து வருவாங்கள். நல்ல படைப்புகளைக் குடுப்பாங்கள் என்ற நம்பிக்கையை அந்த எல்லாருமே எங்கட ரீமில வைச்சிருக்கினம். அந்த நம்பிக்கைய நாங்கள் இனி அடுத்த படத்தில காப்பாத்தவேணும்.

அடுத்த படம் இதைத் தாண்டியிருக்கும். இல்லை இதுதான்... இப்ப செஞ்சதுதான் சரியெண்டு இருந்தமெண்டால் இப்பிடியே இருக்கவேண்டியதுதான். அதனாலை இதைவிட நல்லாச் செய்வம் எண்டுற எண்ணம்தான் எங்கடை குழுவுக்கே இருக்கு. அடுத்த படைப்பு இதைத் தாண்டின ஒன்டாய் இருக்கும். அப்பிடித்தான் இருக்கோணும். அதுதான் சரியானதாயும் இருக்கும். எங்களிலை வைச்சிருக்கிற நம்பிக்கைய காப்பாத்தவேணும் எண்டால் அப்பிடியான படத்தைத்தான் குடுக்கவும்வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் [illegible] லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781